ஸ்ரீகலா SRIKALA



# நல்லதோர் வீணை செய்தே

# NALLATHOR VEENAI SEITHE

ஸ்ரீகலா SRIKALA



# நல்லதோர் வீணை செய்தே

## NALLATHOR VEENAI SEITHE


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS

Download

## Contents

அத்தியாயம் : 1
அத்தியாயம் : 2
அத்தியாயம் : 3
அத்தியாயம் : 4
அத்தியாயம் : 5
அத்தியாயம் : 6
அத்தியாயம் : 7
அத்தியாயம் : 8
அத்தியாயம் : 9
அத்தியாயம் : 10
அத்தியாயம் : 11
அத்தியாயம் : 12
அத்தியாயம் : 13
அத்தியாயம் : 14
அத்தியாயம் : 15
அத்தியாயம் : 16
அத்தியாயம் : 17
அத்தியாயம் : 18

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

"வாழ்த்துக்கள் சாந்தி."

வேகமாய் ஓடியதில் மூச்சிரைக்க முழங்காலில் இரு கைகளை வைத்தபடி தலைகுனிந்து நின்று கொண்டிருந்த சிறுமி சாந்தியை கை தட்டி பாராட்டியபடி அங்கு வந்தான் அவளது பயிற்சியாளன் மணிமாறன்.

"நூறு மீட்டர் தூரத்தை 10.80 செகண்ட்ஸ்ல கடந்திருக்க. உன் வயதில் யாரும் பண்ணாத சாதனை இது. உன்னை நினைச்சு ரொம்பப் பெருமையா இருக்கு."

"தேங்க்யூண்ணா." முகமெல்லாம் சந்தோசத்தில் பூரிக்க அவனுக்கு நன்றி கூறினாள் சாந்தி.

சாந்தி பதினேழு வயது சிறுமி. அரசாங்க பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு படிக்கின்றாள். தந்தை பரசு துறைமுகத்தில் கூலி வேலை செய்பவன், தாய் சொர்ணா, மணிமாறனின் தாத்தா வீட்டில் சமையல் வேலை பார்க்கிறாள். அதனால் தான் அவனுக்குச் சாந்தியை பற்றித் தெரிய வந்தது. சிறுமியின் திறமையைக் கண்டு அவன் உடனே அவளைத் தனது பயிற்சி பள்ளியில் சேர்த்துக் கொண்டான்.

மணிமாறன் படிக்கும் காலத்தில் இருந்தே விளையாட்டுத் துறையில் அதிக ஆர்வமுடையவனாய் இருந்தான். அதனாலேயே அவனுக்குப் படிப்பை விட விளையாட்டு நன்கு வந்தது. ஐந்து வருடங்களுக்கு முன் ஒலிம்பிக்ஸ் போட்டியில் இந்தியா சார்பாக ஓட்ட பந்தயத்தில் கலந்து கொண்டு தங்க பதக்கம் வாங்கி இருக்கிறான். அவனது விளையாட்டுத் திறமை காரணமாக அவனுக்கு இரயில்வே துறையில் வேலை கிடைத்தது. அது ஒரு பக்கம் இருந்தாலும், அவனது முக்கிய வேலை திறமையானவர்களைக் கண்டுபிடித்து ஊக்குவிப்பது தான். அவனது பயிற்சி பள்ளியில் ஏழை, பணக்காரர்கள் என்கிற பேதமில்லை. திறமைக்கு மட்டுமே அங்கு இடமுண்டு.

PDF தமிழ் .com

"நான் வீட்டுக்கு தான் போறேன். என் கூட வர்றியா சாந்தி?"

"வர்றேண்ணா." சாந்தி தனது உடமைகளை எடுத்துக் கொண்டு அவனுடன் இணைந்து நடந்தாள்.

மணிமாறன் தனது இருசக்கர வாகனத்தில் அவளை ஏற்றிக் கொண்டு கிளம்பினான். அவன் போகும் வழியெல்லாம் அவளுக்கு அறிவுரை கூறிக் கொண்டே செல்ல... சின்னவளும் அவன் கூறுவதைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்துக் கேட்டு கொண்டாள்.

"புத்தியும், மனசும் ஒரே நிலையில் இருக்கணும். வெற்றியோ, தோல்வியோ உன் பணியை நீ சிறப்பா செஞ்சால் போதுமானது. வெற்றி தானாக உன்னைத் தேடி வரும். அது மாதிரி எடுத்தவுடன் ஜெயிக்க முடியலைன்னு சோர்ந்து போயிர கூடாது. அடுத்தடுத்து முயற்சித்துக் கொண்டே இருக்கணும். விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி." என்று அவன் கூற...

"பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தில் சந்தானம் சொல்வாரே... அது மாதிரியாண்ணே?" என்று விசமத்துடன் கேட்டாள் அந்தப் பதின்பருவ சிட்டு.

"ஹா ஹா... நாங்க சொன்னா காதில் ஏறுமா? சந்தானம் சொன்னது தான் தாயே. அதை ஒழுங்கா பின்பற்றி நீ முன்னேறு."

இருவரும் பேசி கொண்டே வீடு வந்து சேர்ந்தனர். இருசக்கர வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு மணிமாறன் வந்த போது சாந்தி வீட்டின் முன்வாசல் வழியாக உள்ளே செல்லாது பின்வாசல் வழியாகச் செல்ல முனைந்தாள்.

"எதுக்குப் பின்வாசல் வழியா போற? இப்படி வா, உள்ளே போகலாம்." என்றவன் அழைக்க...

"பெருசு பார்த்தா திட்டும் அண்ணே." என்றாள் அவள் பயத்துடன்...

"பெருசுன்னு சொல்ல கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல. தாத்தான்னு சொல்லணும். அவரோட வயசுக்கு மரியாதை கொடு." அவளது தலையில் வலிக்காது கொட்டியவன்,

"நீ உள்ளே வா. யார் என்ன சொல்றாங்கன்னு நான் பார்க்கிறேன்." என்றவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு வீட்டினுள் அழைத்துச் சென்றான்.

என்றுமில்லாத திருநாளாய் வீடு அமைதியாக இருந்தது. அது குறித்து அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. இரு அத்தைகள், அவர்களது கணவர்கள், அவர்கள் பெற்ற மக்கள் என்று வீடு திருவிழா போன்று காட்சியளிக்கும்.

"யாரையும் காணோம். இப்போ உனக்குச் சந்தோசமா?" அவனது கேள்வியில் சின்னவள் சந்தோசமாகத் தலையாட்டினாள்.

"உன் அம்மாவும், என் அம்மாவும் சமையல்கட்டில் தான் இருப்பாங்க. வா..."

அவன் நினைத்த மாதிரியே அவனது அன்னை தேவகி சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தார். சொர்ணா இட்லி மாவு அரைத்து கொண்டிருந்தாள். வியர்வை ஒழுக வேலை செய்து கொண்டிருந்த அன்னையைக் கண்டு அவனுக்கு மிகுந்த வேதனையாக இருந்தது.

அவனது அன்னை தேவகி இந்த வீட்டின் மருமகள். அவனது தந்தை நாராயணன் மிகப் பெரிய பணக்காரர். அவர் கல்லூரியில் படிக்கும் போது தேவகியை காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். அதனால் அவர் தனது தந்தை சதாசிவத்தைப் பகைத்துக் கொண்டார். அத்தோடு அவர்களது தொடர்பும் அறுந்து போனது. வாழ்க்கை மகிழ்ச்சியாய் சென்று கொண்டிருந்த போது யார் கண்பட்டதோ... மணிமாறனும், அவனது தங்கை நந்தனாவும் சிறுவயதாக இருக்கும் போது நாராயணன் விபத்தில் இறந்துவிட... அநாதரவாக நின்றிருந்தவர்களை

PDF தமிழ் .com

அவர்களது தாத்தா சதாசிவம் பெரிய மனது கொண்டு இங்கு அழைத்து வந்தார்.

மருமகள் என்கிற சலுகை கொடுக்காது, மாமனார் தன்னை ஒரு வேலைக்காரியாகத் தான் அழைத்து வந்திருக்கிறார் என்பதை இங்கு வந்த சில நாட்களில் புரிந்து கொண்டார் தேவகி. அவரது மாமியார் தங்கமும் ஒரு பெண்ணாய் மருமகள் விசயத்தில் இரங்கவில்லை. 'ஓடுகாலி' என்றே அவர் மருமகளைத் தூற்றினார். குழந்தைகளுக்காக மற்றும் பாதுகாப்பிற்காக எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டார் தேவகி. அரவணைக்க வேண்டிய பெரியவர்களே உதாசீனப்படுத்திய போது நாத்தனார் இருவரும் அவரை எப்படி மதிப்பார்கள்? அவர்களது கணவர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டாம். ஆக மொத்தம் யாருமே அவரை மதிப்பது இல்லை.

இப்போது மணிமாறன் போதிய அளவு சம்பாதித்த போதும் தேவகி அவனுடன் தனியே வர மறுக்கிறார். அதற்குக் காரணம் மாமியார் தங்கம் படுத்த படுக்கையாக இருப்பது தான். அதனால் அவனும் அன்னைக்காக இங்கே இருக்கிறான்.

பழைய நினைவுகளை நினைத்த மணிமாறன் பெருமூச்சு விட்டு நினைவுகளை அகற்றியவன்,

"அக்கா, உங்க பொண்ணு இன்னைக்கு உலகச் சாதனை நிகழ்த்தி இருக்கா. உங்களுக்குத் தெரியுமா?" என்று அவன் தனது மனநிலையைச் சந்தோசமாக மாற்றிக் கொண்டான்.

மணிமாறனின் குரலில் இருவருமே ஒன்றாகத் திரும்பி பார்த்தனர். சொர்ணாவின் முகம் மகிழ்ச்சியில் விகசித்தது.

"அப்படியா கண்ணு?"

"ஆமாம்மா..." என்று அன்னையைக் கட்டியணைத்து முத்தமிட்ட சாந்தி தேவகியின் கால்களில் விழுந்து,

"என்னை ஆசிர்வாதம் பண்ணுங்கம்மா." என்க...

"தீர்க்காயுசாயிரும்மா. இன்னும் நீ பல சாதனைகள் புரியணும்." என்று தேவகி சின்னவளை மனமார வாழ்த்தினார்.

"சாந்தி இந்த முறை இந்திய அளவில் நடக்க இருக்கிற ஓட்ட பந்தயத்தில் கலந்துக்கிட்டு முதல் பரிசு வாங்க போகிறாள் பாருங்க. அப்போ உலகமே அவளது சாதனையைத் திரும்பி பார்க்க போகிறது." என்று அவன் குருவின் பெருமிதத்துடன் கூறினான்.

"ரொம்பச் சந்தோசம் மணி."

"இந்தச் சந்தோசத்தைக் கொண்டாட சாந்திக்கு ஸ்வீட் செஞ்சு கொடுங்கம்மா."

மணிமாறன் கூறியதும் அடுத்த அரை மணி நேரத்தில் சுடச்சுட கேசரியும், பஜ்ஜியும் தயாரானது. அதற்குள் கல்லூரி சென்றிருந்த அவனது தங்கை நந்தனா அங்கு வந்து சேர்ந்தாள். அவளும் விசயம் கேள்விப்பட்டுச் சந்தோசத்தில் ஆர்ப்பரித்தாள்.

"ம்மா, யாரையும் காணோம்? எங்கே போயிருக்காங்க?" மணிமாறன் கேசரியை எடுத்து சுவைத்தபடி அன்னையைப் பார்த்து கேட்டான்.

"குரு பெயர்ச்சின்னு எல்லோரும் கோவிலுக்குப் போயிருக்காங்க." தேவகி கூறியதும் அவன் ஒன்றும் பேசவில்லை.

"அண்ணே, அக்கா, நீங்க, நான் மூணு பேரும் கண்ணாமூச்சி விளையாடுவோமா?" சாந்திக்கு ஒரு இடத்தில் இருந்து பழக்கம் இல்லை. அவளுக்கு எப்போதும் துறுதுறு என்றிருக்க வேண்டும்.

"சூப்பர் சாந்தி." நந்தனா சாந்திக்கு 'ஹைபை' கொடுத்தாள்.

மணிமாறனும் சம்மதித்ததும் வீட்டின் முன்னால் பரந்து விரிந்திருந்த தோட்டத்தில் மூவரும் விளையாண்டனர்.

PDF தமிழ் .com

முதலில் மணிமாறன் கண்களை மூடி கொள்ள... பெண்கள் இருவரும் அவனை நன்றாகச் சுற்றலில் விட்டனர். அடுத்து சாந்தி, அதற்கடுத்து நந்தனா முறை வந்தது.

"கண்ணாமூச்சி ரே... ரே...
காதறுப்பான் ரே... ரே...
நல்ல முட்டையைத் தின்னுப்புட்டு
கெட்ட முட்டையக் கொண்டு வா...!"

சிறுவயதில் அன்னை சொல்லி கொடுத்த பாடலை பாடியபடி நந்தனா அண்ணனையும், சாந்தியையும் தேடி கைகளால் துழாவினாள். அப்போது மணிமாறனுக்கு அலைப்பேசியில் அழைப்பு வந்ததும் அவன் பேசியபடி அங்கிருந்து அகன்றான். சாந்தி வீட்டின் பின்புறம் சென்று மறைந்து கொண்டாள். இது தெரியாது நந்தனா கண்களைக் கட்டியபடி அவர்களைத் தேடி கொண்டிருந்தாள். அப்போது வாசலில் ஜீப் வந்து நின்ற சத்தத்தைக் கூட அவள் கவனிக்கவில்லை.

அதிலிருந்து நெடுநெடு மாறனாய் புகழேந்தி கம்பீரமான அழகோடு இறங்கினான். அவன் காவல்துறை உதவி ஆணையராகப் பணிபுரிகின்றான். மூன்று மாதங்களுக்கு முன் தான் அவன் சென்னைக்குப் பணி மாற்றம் செய்யப்பட்டிருந்தான். காவல்துறைக்கே உரிய மிடுக்கு, முறுக்கு எல்லாம் அவனிடத்தில் சற்று அளவிற்கு அதிகமாகவே இருந்தது. யாரிடமும் அதிகப் பேச்சுக் கிடையாது. அவனது பெற்றோரிடமும் கூட அவன் அளந்து தான் பேசுவான்.

நந்தனா அண்ணனையும், சாந்தியையும் தேடி கொண்டு வந்தவள் மரம் போன்று எதன் மீதோ மோதி நின்றாள். அவளது நாசி நுகர்ந்த பழக்கமான நறுமணத்தில் அவள் பயத்தில் வியர்த்தபடி அவசரமாகக் கண் கட்டை அவிழ்த்தாள். அவள் நினைத்தது போல் அங்கு அவளது பெரியத்தை மகன் புகழேந்தி அவளைக் கோபத்துடன் உறுத்து விழித்துக் கொண்டிருந்தான்.

சிவந்த நிறமும், முறுக்கு மீசையுமாய், கால்களை அகற்றி வைத்தபடி அவன் நின்றிருந்த விதம் கூட அத்தனை அழகாய் இருந்தது. அதை ரசிக்கும் மனநிலையில் அவள் இல்லை. அவனைக் கண்டாலே அவளுக்குப் பயத்தில் வாய் தந்தியடிக்கும். ஏனெனில் சிறுவயது முதல் புகழேந்தி அவளது நிறத்தை வைத்து அவளைக் 'கருவாச்சி' என்று கிண்டல் செய்து அவளை அழ வைப்பான். அதனாலேயே அவள் அவனிடம் இருந்து விலகியே இருப்பாள். அவன் இங்கு வந்த இந்த மூன்று மாதங்களாக அவள் அவன் கண்ணில் விழவே இல்லை. அத்தனை ஜாக்கிரதையாக அவள் அவனைத் தவிர்த்து வந்தாள். அதுவே அவனுள் பெரும் கோபத்தைக் கிளப்பியிருந்தது. அந்தக் கோபத்தில் அவன் வார்த்தைகளை நெருப்பு கங்குகளாய் அள்ளி வீசி அவளைச் சுட்டெரித்தான்.

"எவனும் கிடைக்கலைன்னதும் என்னை வலை வீசி பிடிக்கலாம்ன்னு வந்தியா?" நக்கலாய் கேட்டவனின் கேள்வியில் அவள் அவமானத்தில் கூனிக்குறுகி போனாள். பூமி பிளந்து தான் புதையுண்டு போக மாட்டோமா? என்று பேதை பெண் உள்ளம் குமைந்து போனாள்.

"அதுக்குக் கொஞ்சமாவது அழகாயிருக்கணும் கருவாச்சி. உன்னை மாதிரி ஆளுங்களுக்குன்னு மார்க்கெட்டில் கூலி வேலை செய்துக்கிட்டு இருப்பாங்க. அவங்க கிட்ட போய் உன் வலையை வீசு." என்று மேலும் வார்த்தையால் அவளைச் சுட்டவன்,

"நீ என்னைத் தொட்டதால் உன் கருப்பு என் மேல் ஒட்டிக்கிச்சு. முதலில் போய் நல்லா சோப் போட்டு உடம்பை தேய்ச்சு குளிக்கணும்." என்று வேண்டுமென்றே அருவருப்புடன் கூறியவன், அவளது கண்ணீரை கண்டு மனதிற்குள் திடுக்கிட்டாலும் அதை வெளியில் காட்டி கொள்ளாது அங்கிருந்து அகன்றான்.

புகழேந்தியின் வார்த்தையில் விழிகள் கலங்க, உதட்டை பற்களால் கடித்தபடி அவமானத்தை மென்று விழுங்க

PDF தமிழ் .com

முடியாதவளாய் நந்தனா வெட்கி தலைகுனிந்து நின்றிருந்தாள்.

வீட்டினுள் சென்ற புகழேந்தி மாடிப்படியேறும் முன் திரும்பி நந்தனாவை பார்த்தான். அவள் தலைகுனிந்து கொண்டு நின்றிருப்பதைக் கண்டு அவனது உதடுகளில் புன்னகை அரும்பியது.

"இப்போ தான் நான் உன் கண்ணுக்கு தெரியறேன்னா என் மாமன்மகளே!" அவன் மந்தகாச புன்னகையுடன் தனது அறையை நோக்கி சென்றான்.

"நந்தும்மா..." அண்ணனின் குரலில் தன்னுணர்வு பெற்றவள் இமைச்சிமிட்டி கலங்கிய விழிகளைச் சரி செய்து கொண்டு அவனைத் திரும்பி பார்த்தாள்.

"அண்ணா அவுட்." என்று அவள் அவனைக் கண்டு குதூகலித்துச் சிரிக்க... தங்கையின் சிரிப்பு அவனையும் தொற்றிக் கொண்டது.

"நீ கண்ணைக் கட்டவில்லை. அதனால் நான் அவுட் இல்லை." என்று கூறி அவனும் சிரித்தான்.

"கொஞ்சம் வழி விட்டு நின்னு சிரிக்கிறீங்களா?" கடுமையுடன் வந்த குரலில் இருவரின் சிரிப்பும் காணாமல் போனது.

அங்கு அழகு தேவதையாய் நின்றிருந்தாள் வசுமதி. பாலில் சந்தனத்தைக் குழைத்து செய்தது போலிருந்து அவளது தேகம். அத்தனை அழகு அவள். ஆனால் அதற்கு நேர்மாறாய் அவளது முகம் கடுமையுடன் இருந்தது.

"அதான் அங்கே இடம் இருக்கே. அப்படிப் போக வேண்டியது தானே. நாங்க எதுக்கு ஒதுங்கணும்?" மணிமாறன் திமிராய் கேட்டான். அவனுக்கும் சின்ன அத்தை மகள் வசுமதிக்கும் ஆகவே ஆகாது.

"ஒண்ட வந்த பிடாரி, ஊர் பிடாரியை ஊரை விட்டு விரட்டுச்சாம். அந்தக் கதையாயில்ல இருக்கு." வசுமதி கோபத்தில் சிடுசிடுத்தாள்.

PDF தமிழ் .com

"ஹா ஹா... நீ பிடாரிங்கிற உண்மையை நீயே ஒத்துக்கிட்டியே. ரொம்பச் சந்தோசம்." மணிமாறன் அத்தை மகளைக் கலாய்த்தான்.

"ஸ்டுப்பிட்." என்று அவனைப் பார்த்து கோபமாய் மொழிந்தவள் வீட்டினுள் விறுவிறுவெனச் சென்றாள்.

"இவள் எல்லாம் ஒரு ஆளு... மூஞ்சியைப் பார். மைதா மாவு கணக்கா..." மணிமாறன் எரிச்சலுடன் கூறும் போதே சாந்தி அங்கு வந்துவிட்டாள்.

"நான் தான் ஜெயிச்சேன், நான் தான் ஜெயிச்சேன்." என்று அவள் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தாள்.

"நீ தான் ஜெயிச்ச தாயே. போய் உன் புக்சை எடுத்துட்டு வா. பாடத்தில் புரியாதது சொல்லி தர்றேன்." மணிமாறன் அவளை அனுப்பி வைத்தான்.

நந்தனா புகழேந்தி வார்த்தைகளில் உழன்றபடி வீட்டினுள் சென்றாள். வெளி வரந்தாவில் அமர்ந்தபடி மணிமாறன் சாந்திக்குப் பாடம் சொல்லி கொடுக்க ஆரம்பித்தான். எங்கோ கிளம்பி செல்வதற்காக அங்கு வந்த வசுமதி இந்தக் காட்சியைக் கண்டு முகத்தைச் சுளித்துக் கொண்டு சென்றாள். அதிலும் மணிமாறன் சிரித்தபடி சாந்தியின் தலையில் கொட்டி சொல்லி கொடுத்த காட்சி அவளுக்கு அத்தனை உவப்பானதாக இல்லை.

அப்போது கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. மணிமாறன் அமர்ந்த நிலையில் திரும்பி பார்த்தான். தாத்தா, அத்தைகள், மாமன்கள் எல்லோரும் காரிலிருந்து இறங்கினர். இவன் அவர்களைக் கொண்டு கொள்ளாது அமைதியாக அமர்ந்திருக்க... சாந்தி பயத்துடன் எழுந்து நின்றாள்.

"சாந்தி, உட்கார்ந்து படி..." அவன் உறுமலுடன் கூற... சாந்தி அதே பயத்துடன் அமர்ந்தாள்.

தாத்தா அவனை முறைத்துவிட்டு உள்ளே சென்றார். அத்தைகளும், மாமன்களும் அவனைக் கண்டு கொள்ளாது

வீட்டினுள் சென்றனர். மணிமாறனும் யாரையும் கண்டு கொள்ளவில்லை.

"நந்தனா..." தாத்தாவின் உரத்த குரலில் மணிமாறன் அடித்துப் பிடித்துக் கொண்டு உள்ளே சென்றான்.

தங்கை என்ன தவறு செய்தாள்? என்பதை விட, எதற்காகத் தாத்தா இத்தனை கோபத்துடன் கத்துகிறார் என்கிற நினைப்பே அவனை யோசனையில் ஆழ்த்தியது. நந்தனா பயத்துடன் அங்கு வந்து நின்றாள். அவளைத் தொடர்ந்து தேவகியும் அங்கு வந்தார்.

"மணி எத்தனை? இத்தனை நேரம் விளக்கு ஏத்தாம என்ன பண்ணிக்கிட்டு இருக்க?" சதாசிவம் கோபத்துடன் பேத்தியை கண்டு முறைத்தார்.

"சாரி தாத்தா... ஏதோ யோசனையில்..." நந்தனா விழிகள் கலங்க அவரிடம் மன்னிப்பு கேட்டாள்.

"வயசு பொண்ணுக்கு என்ன யோசனை வேண்டி கிடக்கு? புத்திய புல் மேய விடாம பத்திரமா பிடிச்சு வச்சுக்கோ. உன் அப்பன மாதிரி இருக்காதே."

அவர் அவளைச் சத்தம் போடும் போதே புகழேந்தி மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தான். அவனது பார்வை அழுத்தமாய் நந்தனாவின் மீது படிந்தது. அதைக் கண்ட நந்தனாவிற்கு மிகுந்த அவமானமாக இருந்தது.

அதற்கு மேல் அங்கு நிற்க முடியாதவளாய் நந்தனா பூஜையறையை நோக்கி சென்றாள். மணிமாறன் தாத்தாவை எதிர்த்து பேச போனான். ஆனால் தேவகி விழிகளால் அவனது செயலுக்குத் தடை சொன்னார். அதைக் கண்டு அவன் நொந்தபடி இயலாமையுடன் வெளியில் வந்துவிட்டான்.

"துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலரருள் கந்தர்

PDF தமிழ் .com

சஷ்டி கவசம் தனை.
அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி."

நந்தனா விளக்கேற்றி விட்டு தனது தெய்வீக குரலில் கந்தசஷ்டியை பாட ஆரம்பிக்க... சதாசிவம் கண்களை மூடி கொண்டு மெய்மறந்து அந்தப் பாடலை கேட்டார். அந்த ஏகாந்த சூழ்நிலையைக் கலைக்க விரும்பாதவனாய் புகழேந்தியும் அமைதியாக நின்றிருந்தான். அவனது செவியிலும் நந்தனாவின் குரல் தேனாய்ப் பாய்ந்தது.

"நாட் பேட்." அவனது உதடுகள் மெல்ல முணுமுணுத்தது.

நந்தனா கற்பூர தட்டை ஏந்தி கொண்டு தாத்தாவை நோக்கி வந்தாள். அவர் அதைக் கண்களில் ஒற்றிக் கொண்டதும் அவள் அதைப் புகழேந்தியிடம் நீட்டினாள். தாத்தாவின் முன்னிலையில் அவளிடம் வம்பு வளர்க்காது அவன் சமத்தாகத் தீபாராதனையைக் கண்களில் ஒற்றிக் கொண்டு திருநீறை எடுத்து நெற்றியில் பூசி கொண்டான். அவள் அவனை வியப்பாய் பார்த்தவள் ஒன்றும் பேசாது அங்கிருந்து அகன்றாள். அவன் அவளைப் பார்த்தபடி வெளியில் கிளம்பினான்.

இரவு பரசு மனைவி, மகளை அழைக்க வந்தான். வேலையை முடித்துக் கொண்டு சொர்ணா கிளம்ப, சாந்தியும் தனது பாட புத்தகங்களை எடுத்துப் பையில் வைத்துக் கொண்டு கிளம்பினாள்.

"நாளைக்குக் காலையில் பிராக்டிஸ்க்கு வந்திரு." மணிமாறன் சாந்தியை பார்த்துக் கூறினான்.

"சரிண்ணா." என்றபடி அவள் தந்தையின் இருசக்கர வாகனத்தில் ஏறினாள்.

"அண்ணே, வேலை எல்லாம் எப்படிப் போகுது?" மணிமாறன் பரசுவிடம் நலம் விசாரித்தான்.

"நல்லா போகுது தம்பி." என்று புன்னகையுடன் கூறினான் பரசு. அவன் எப்போதுமே புன்னகை முகம் மாறாதவன்.

அவர்களை வழியனுப்பி வைத்துவிட்டு மணிமாறன் தங்களது வீட்டிற்குச் சென்றான். அவர்களது வீடு பின்னால் தனியே இருந்தது. அவனுக்கு முன் அவனது அன்னை மற்றும் தங்கை அங்கிருந்தனர்.

"அம்மா, இந்த இழிநிலை இன்னும் தேவை தானா? நான் தான் சம்பாதிக்கிறேனே. இனியும் இங்கே இருக்கணுமா?" மணிமாறனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"உனக்கே தெரியும் மணி... பாட்டிக்கு நந்து தான் எல்லாம் செய்யணும். அவள் செஞ்சா தான் அவங்க ஏத்துக்குவாங்க. மத்த யாரையும் பக்கத்தில் கூட விட மாட்டாங்க. அவங்களுக்காகவாவது இங்கே இருந்து தான் ஆகணும்." தேவகி தீர்மானமாய்க் கூற...

"என் தங்கை அவங்களுக்குச் சம்பளம் இல்லாத வேலைக்காரி. அதை நீங்க நாசுக்கா சொல்றீங்களாம்மா?"

"நீ ஏன் அவங்களை அடுத்தவங்கன்னு நினைக்கிற? நம்ம தாத்தா, பாட்டின்னு நினையேன்."

"நினைக்கிற அளவுக்கு அவங்க நடந்துக்கலம்மா." என்றவனது முகம் இறுகி போனது. தேவகி பதில் பேசாது அமைதியாகி போனார்.

"நந்து, உனக்கு இப்படி இருப்பது விருப்பமா?"

நந்தனா அன்னையின் முகத்தை ஏறிட்டு பார்த்தவள் பின்பு அண்ணன் புறம் திரும்பி, "எனக்கு ஒண்ணும் ப்ராப்ளம் இல்லைண்ணா." என்றாள் அமைதியாக...

"விளக்கு ஏத்தலைன்னு உன்னைச் சத்தம் போடுற தாத்தா, அந்த ராங்கிய ஒரு நாளாவது சத்தம் போட்டு இருப்பாரா? ஒருநாளாவது அவள் பொண்ணா அடக்கம் ஒடுக்கமா இரவு வீட்டில் இருந்திருக்காளா? இப்ப கூடப் பார், அம்மையார் ஊர் சுத்த போயாச்சு." வசுமதியை நினைத்து அவனுக்கு எரிச்சலாக வந்தது.

தமிழ் நாவல்

"விடுண்ணா... அதுக்காக வசுவை தப்பா பேசாதே." நந்தனா அண்ணனை சத்தம் போட்டாள்.

"என்னமோ போங்க! வர வர எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கலை." என்றவன் வெளியில் கிளம்பி சென்றுவிட்டான்.

"அம்மா, நீங்க சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுங்க." என்ற நந்தனா அன்னைக்கு உணவு பரிமாறிவிட்டு அவர் உண்டதும் ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு தாத்தாவின் வீட்டை நோக்கி வேகமாகச் சென்றாள்.

மகள் செல்வதை விழிகளில் விழிநீருடன் பார்த்துக் கொண்டிருந்தார் தேவகி. அவரது மனம் கனத்துப் போனது. மாமனார், மாமியாரிடம் இருந்து அவர்களது மகனை பிரித்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் வேண்டி அவர் தனது மக்களைக் கொண்டு அவர்களுக்குத் தொண்டாற்றித் தீர்த்து கொள்கிறார். இதை அவர் மகனுக்கு எப்படிப் புரிய வைப்பார்?

நந்தனா தாத்தா வீட்டிற்குள் நுழையும் போது எல்லா மின்விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தது. ஆனால் ஒருவர் கூட வரவேற்பறையில் இல்லை. அதை அணைப்பதற்குக் கூட நேரமில்லாது அவள் நேரே பாட்டியின் அறைக்குச் சென்றாள். இவளை கண்டதும் தங்கம் முகத்தைச் சுளித்துக் கொண்டு திட்ட துவங்கினார்.

"நீ கொட்டிக்கிட்டா மட்டுமாச்சா? நான் சாப்பிட வேண்டாமா?" என்று கடுகடுத்தவரை லட்சியம் செய்யாது அவரைப் படுக்கையில் சாய்வாக அமர வைத்தவள், அருகிலிருந்த மேசை மீதிருந்த உணவை எடுத்து அவருக்கு ஊட்ட துவங்கினாள். அதை மறுக்காமல் வாங்கிக் கொண்ட தங்கத்தின் செயலிலேயே தெரிந்து போனது, அவரது பசியின் அளவு. அதைக் கண்டு அவளது விழிகள் பனித்தது.

உடனே அவர் உறங்காமல் இருப்பதற்காக நந்தனா சுந்தரகாண்டத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள்.

பெரியவளும் சிரத்தையாக அதைச் செவி வழியே வாங்கிக் கொண்டார். அப்போது அறை கதவு திறக்கும் ஒலி கேட்டது. நந்தனா திடுக்கிட்டு போய் நிமிர்ந்து பார்த்தாள். அங்குப் புகழேந்தி கம்பீரமாய் அறையினுள் நுழைந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் அவள் பயத்தில் சட்டென்று எழுந்து நின்றாள். அவனது விழிகள் ஒரு நொடி அவளை அழுத்தத்துடன் பார்த்துவிட்டு பின்பு தனது பாட்டியின் புறம் திரும்பியது.

'எப்போதும் இந்த நேரத்தில் இங்கே வர மாட்டாங்களே? இன்னைக்கு ஏன் இங்கே வந்திருக்காங்க? இப்போ நான் இங்கே நிற்கவா? போகவா?' அவள் மனதிற்குள் திணறியபடி நின்றிருந்தாள்.

"வாய்யா புகழு." தங்கம் வாயெல்லாம் பல்லாகப் பேரனை வரவேற்றார்.

"உடம்பு எப்படியிருக்கு பாட்டி?"

"காடு வா வாங்கிற வயசுல உடம்பு எப்படி இருந்தா என்ன புகழு? உன்னோட கல்யாணத்தைப் பார்த்துட்டு, உன் மகனையும் என் கண்ணால் பார்த்துட்டா போதும். அடுத்த நொடி சந்தோசமா கண்ணை மூடிருவேன்."

"என்ன பாட்டி இப்படிச் சொல்லிட்டீங்க? என் மகனோட மகனையும் பார்த்துட்டு தான் நீங்க போவீங்க." என்று அவன் அவரைக் கிண்டலடித்தான்.

"அதுக்கு நீ சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கணும் புகழு."

"நானா வேண்டாங்கிறேன். அவளும் சம்மதிக்கணுமே." பாட்டிக்கு கேட்காதவாறு அவன் மெல்லிய குரலில் முணுமுணுத்தான்.

ஆனால் புகழேந்தி கூறியது நந்தனாவின் காதில் நன்கு விழுந்தது. அவள் அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள். 'இவுங்க காதலிக்கிறாங்களா?' எப்போதும் விறைப்புடன் சுற்றும் புகழேந்தி காதலிக்கிறான் என்பதை அவளால் சுத்தமாய் நம்ப முடியவில்லை.

அவளது இமைக்காத பார்வையைக் கண்ட புகழேந்தி நமட்டு சிரிப்புடன் தனது ஒற்றைப் புருவத்தை உயர்த்தி அவளைப் பார்த்து என்னவென்று கேட்க... அதைக் கண்டு அவளது இதயம் ஒரு நொடி நின்று துடித்தது!!!

புகழேந்தியின் பார்வையில் 'ஒன்றுமில்லை' என்பது போல் தலையசைத்த நந்தனா அவனைப் பார்க்க இயலாது தலைகுனிந்து கொண்டாள். அவனது பார்வையும், அவனது உதடுகளில் வழிந்த விசமமும் அவளுள் ஏதோ ஒரு அதிர்வினை ஏற்படுத்தி இருந்தது.

"புகழு, சாப்பிட்டியாப்பா?" தங்கம் பேரனை பார்த்து அக்கறையாய் வினவினார்.

"இல்லை பாட்டி."

"இவ்வளவு நேரமாகியும் நீ சாப்பிடலையா? நீ சாப்பிடறதை கூடக் கவனிக்காம உன் அம்மா என்ன பண்ணுகிறாள்?" மூத்தமகளை நினைத்துத் தங்கத்திற்குக் கோபம் வந்தது.

"எப்போதும் வெளியில் சாப்பிட்டுவிட்டு வந்துருவேன் பாட்டி. இன்னைக்குச் சாப்பிட போகக் கூட நேரமில்லாம வேலை இருந்தது."

"இந்தாடி நந்தனா... போய்த் தோசை சுட்டு எடுத்துட்டு வா." தங்கம் பேத்தியை வேலை ஏவினார்.

நந்தனா மௌனமாய்ச் சரியென்று தலையசைத்தபடி அங்கிருந்து அகன்றாள். அவள் செல்வதைப் பார்த்தபடி இருந்த புகழேந்தி பின்பு பாட்டியிடம் திரும்பி பேச ஆரம்பித்தான். ஐந்து நிமிடத்திற்கு மேல் அவனால் அங்கிருக்க முடியவில்லை.

"பாட்டி, எனக்கு ரொம்பப் பசிக்குது. நான் போய்ச் சாப்பிட்டுட்டு தூங்க போறேன்."

"தோசை சுட போனவளை இன்னும் காணோமே. ஒரு சுறுசுறுப்புக் கிடையாது. நீ போய்ச் சாப்பிடு புகழு." பேரனை அனுப்பி வைத்தார் தங்கம்.

புகழேந்தி மனதில் உற்சாகம் கொப்பளிக்க எழுந்தவன் உல்லாச மனநிலையுடன் அறையை விட்டு வெளியில்

வந்தான். அவன் நேரே சமையலறை சென்று பார்த்த போது நந்தனா அரவை இயந்திரத்தில் சட்னி அரைத்து கொண்டிருந்தாள். மறுபுறம் அடுப்பில் தோசைக்கல்லில் தோசை ஊற்றப்பட்டிருந்தது. அவள் வேலை செய்யும் பாங்கினை சத்தம் இல்லாது ரசித்தபடி அவன் சமையலறை வாயிலில் இருகைகளைக் கட்டியபடி கதவு நிலையில் சாய்ந்து நின்றிருந்தான்.

சட்னியை தாளிதம் செய்து பாத்திரத்தில் எடுத்து வைத்த நந்தனா, தோசையை எடுத்து ஒரு தட்டில் வைத்துவிட்டு இரண்டையும் இரு கைகளில் ஏந்தியபடி திரும்பினாள். அங்கு வாயிலில் புகழேந்தி நின்றிருப்பதைக் கண்டு திகைத்து போனவள் அப்படியே நின்றிருக்க... அவனது உதடுகளில் புன்னகை அரும்பியது. முயன்று முகத்தைக் கடினமாக வைத்து கொண்டவன்,

"தோசை சுட இவ்வளவு நேரமா? மனுசன் பசியோட எவ்வளவு நேரம் காத்திருப்பது?" என்று போலியாகச் சிடுசிடுக்க...

"சாரி, சாரி..." என்று உண்மையான வருத்தத்துடன் கூறிய நந்தனா அவன் அருகில் வந்து,

"கொஞ்சம் தள்ளிக்கோங்க... இதை எல்லாம் டைனிங் டேபிளில் வைக்கணும்." என்க...

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். இங்கேயே சாப்பிடறேன்." என்றவன் சமையலறை மேடையிலேறி அமர்ந்து கொண்டு தட்டை வாங்குவதற்காகக் கையை நீட்டினான்.

நந்தனா ஒன்றும் பேசாது தோசை தட்டை அவனிடம் நீட்டினாள். அவன் அதை வாங்கியதும் அவள் தட்டில் சட்னியை ஊற்றினாள். தன்னை நிமிர்ந்து பாராது குனிந்த தலையுடன் பரிமாறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"தோசை கருகி..." அவன் முடிக்கும் முன் அவள் பதற்றத்துடன் அடுப்பை பார்க்க...

"கருகிற போகுதுன்னு சொன்னேன்." என்றவனது உதடுகளில் விசம சிரிப்பு வந்தமர்ந்தது. அவள் பதில் கூறாது அமைதியாக அடுப்பை பார்த்தபடி நின்றிருந்தாள். அவள் தனக்காக அக்கறையாய் செய்த உணவின் சுவையோடு, அவளையும் சேர்த்து ரசித்தபடி அவன் உண்டு கொண்டிருந்தான்.

அவன் தனது தேவைக்குப் போக அதிகமாய் இரண்டு தோசையைச் சுட சொன்னவன் வேண்டுமென்றே வயிறு நிரம்பியது போல் பாவனைச் செய்தபடி,

"எனக்கு வயிறு நிரம்பிவிட்டது. சாப்பாட்டை வீணாக்க கூடாது. அதனால் இந்தத் தோசைகளை நீ சாப்பிடு." என்று அதிகாரமாய்ச் சொல்ல...

இரவு உண்ணாததால் அவளுக்கும் பசித்தது. அதனால் அவன் சொல்லை தட்டாது அவள் அமைதியாகத் தோசையை எடுத்துத் தட்டில் வைத்து உண்ண ஆரம்பித்தாள். அவள் உண்பதை கண்களில் கனிவுடன் பார்த்திருந்தவன் சட்னியை எடுத்து அவளது தட்டில் ஊற்றினான்.

"எனக்கு மட்டும் சட்னியை அள்ளி அள்ளி ஊத்தினல்ல. அதான் பழிக்கு பழி." என்றவனது வார்த்தையில் பழிவெறி இல்லை... மாறாக, அக்கறை கனிந்திருந்தது.

அவளுமே அதை உணர்ந்தாளோ என்னமோ! அவளது உதடுகளிலும் மெல்லிய புன்னகை வந்தமர்ந்தது. புகழேந்தி அதை நிறைவாய் பார்த்தபடி தனது அறைக்குச் சென்றான்.

நந்தனா பாத்திரங்களை ஒதுங்க வைத்துவிட்டு எரிந்து கொண்டிருந்த மின்விளக்குகளை எல்லாம் அணைத்துவிட்டு பாட்டியின் அறைக்கு வந்த போது பாட்டி தங்கம் அமர்ந்த நிலையில் உறங்கியிருந்தார். அவரை

எழுப்பாது நேராகப் படுக்க வைத்துவிட்டு அவள் தானும் கீழே பாய் விரித்துப் படுத்தாள். என்றுமில்லாத வண்ணமாய் அவளது மனதில் நிம்மதி வந்து குடியேறி இருந்தது.

******

நட்சத்திர விடுதியில் இருந்த பப்பிற்கு மணிமாறனை அழைத்துக் கொண்டு வந்தான் அவனது நண்பன். அவனுடைய பிறந்தநாளை கொண்டாடுவதற்காக நண்பர்கள் அனைவரையும் அங்கு அழைத்திருந்தான். முதலில் வர மறுத்த மணிமாறன் இன்று வீட்டில் நிலவிய சூழ்நிலையில் கோபம் கொண்டு நேரே இங்கு வந்துவிட்டான்.

இருட்டாய் இருந்த அந்தப் பெரிய அறையில் ஆங்கிலப் பாடல் சத்தத்துடன் ஒலித்துக் கொண்டிருந்தது. 'டிஸ்கோ லைட்' எனப்படும் வண்ண வண்ண விளக்குகள் வர்ணங்களை வாரியிறைத்து சூழ்நிலையை வண்ணமயமாக்கி இருந்தது. அதன் நடுவில் ஆண்களும், பெண்களும் இணைந்து ஆடி கொண்டிருந்தனர். சுற்றிலும் போடப்பட்டிருந்த மேசையில் அமர்ந்தபடி சிலர் மதுவை ருசித்துக் கொண்டிருந்தனர். மொத்தத்தில் மேல்தட்டு வர்க்கத்தினருக்கான இடம் இது.

மணிமாறன் தனது நண்பர்களுடன் அங்கிருந்த மேசை ஒன்றில் வந்தமர்ந்தான். நண்பர்கள் ஆளுக்காள் ஆவலாய் மது வகைகளை ஆர்டர் செய்ய... அவன் மட்டும் 'மாக்டெயில்' எனப்படும் பழச்சாறு கலவையை ஆர்டர் கொடுத்தான். நண்பர்கள் அவனைக் கேலி செய்தனர்.

"நான் அப்படித்தான்டா. என் அம்மாவின் வளர்ப்பு தவறாகப் போவதை நான் விரும்பவில்லை." தனது அன்னையின் வளர்ப்பை யாரும் குறை கூறிவிடக் கூடாது, முக்கியமாக அவனது தாத்தா குறை கூறிவிடக் கூடாது என்றே அவன் இத்தனை கட்டுப்பாடுகளுடன் வாழ்ந்து வருகின்றான்.

"அப்போ உங்க அத்தையோட வளர்ப்பு தவறானதா மாப்ள?" நண்பன் ஒருவன் அவனிடம் கேட்க...

"என்ன சொல்ற மச்சி?" மணிமாறனின் புருவங்கள் இடுங்கியது.

"உனக்குப் பின்னால் பார். உன் அத்தை பெண் என்னமா ஆட்டம் ஆடுகிறாள்."

நண்பன் கூறியதை கேட்டு வேகமாய்ப் பின்னால் திரும்பி பார்த்த மணிமாறன் அப்படியே அதிர்ந்து போனான். வசுமதி எல்லோருக்கும் நடுவில் நின்று கொண்டு வேக வேகமாய் ஆடி கொண்டிருந்தாள். அவள் போட்டிருந்த உடை அத்தனை கவர்ச்சியாக இருந்தது. எல்லோருக்கும் காட்சி பொருளாய் இருந்தவளை காண காண அவனுக்குக் கோபம் வந்தது. ஆனாலும் அவனால் அவளைக் கட்டுப்படுத்த முடியாது. கட்டுப்படுத்தினால் எல்லோர் முன்பும் அவன் அவமானப்படுவது உறுதி.

'இதை எல்லாம் கவனிக்காது தாத்தா என்ன செய்து கொண்டு இருக்கிறார்?' அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

அப்போது தான் அவன் வசுமதி அருகில் ஆடி கொண்டிருந்த வருணை கண்டான். இப்போது அவனுக்கு எல்லாம் புரிந்து போனது. வருண், விளையாட்டுத் துறை அமைச்சர் வரதராஜனின் மகன். இவனைப் போன்றே ஓட்ட பந்தயத்தில் ஆர்வமுடையவன். முன்பு ஒலிம்பிக்ஸ் விளையாட்டு போட்டிக்குத் தேர்வு பயிற்சியின் போது அவன் முதல் நாள் அருந்திய மதுவின் தாக்கம் அவனிடம் இருந்ததால் அவனால் தேர்ச்சியடைய முடியவில்லை. ஆனால் மணிமாறன் எல்லாத் தகுதிகளுடன் தேர்ச்சியானான். வருண் தனது தந்தை மூலம் உள்ளே வர எவ்வளவோ போராடினான். ம்ஹும், அவனால் முடியவில்லை.

மணிமாறன் ஒலிம்பிக்சில் தங்க பதக்கம் வாங்கியதை அவனால் இன்றும் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

அன்றிலிருந்து இன்றுவரை வருணுக்கு மணிமாறன் மீது மிகுந்த பொறாமை இருந்து கொண்டே இருக்கிறது... மணிமாறனை போன்று அவனும் விளையாட்டுப் பயிற்சி பள்ளி ஒன்றை நிறுவி எல்லோருக்கும் பயிற்சி அளிக்கின்றான். ஆனால் பணக்காரர்களுக்கு மட்டும்.

மணிமாறன் மீதிருந்த பொறாமையில் அவனை வீழ்த்த சரியான சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருக்கிறான் வருண். ஆனால் அப்படியொரு சந்தர்ப்பம் இதுவரை அமையவில்லை. அதனால் தான் என்னவோ வருண் மணிமாறனின் அத்தை மகள் வசுமதியை திட்டம் போட்டு வளைத்துக் கொண்டான். அதில் அவனுக்கு ஒரு அல்ப திருப்தி.

வருணும், வசுமதியும் காதலிப்பதாக மணிமாறனும் அரசல்புரசலாகக் கேள்விப்பட்டு இருந்தான். அவன் அதையெல்லாம் நம்பியது இல்லை. ஆனால் இன்று அது நேரில் பார்த்து உறுதி செய்யப்பட்டு விட்டது. 'வருணை விட நல்ல பையன் உனக்குக் கிடைக்கலையா மதி?' என்று அவன் அத்தை மகளுக்காக வருத்தம் கொண்டான். வசுமதிக்கும் அவனுக்கும் ஆகவே ஆகாது தான். இருந்தாலும் அவளை நிந்திக்க அவனால் முடியவில்லை. ஏனெனில் வருணின் குணநலன் அப்படி! பெண்கள் விசயத்தில் வருண் மிகவும் பலவீனமானவன். இப்போதும் அவனிடம் பயிற்சிக்கு வரும் பெண்களிடம் வம்பு செய்வதாய் மணிமாறன் கேள்விப்படத்தான் செய்கிறான். இதையெல்லாம் கூறினால் வசுமதி அவனை நம்புவாளா? நிச்சயம் நம்ப மாட்டாள். அவன் மனதில் வருத்தமேற அமைதியாகத் திரும்பி அமர்ந்தான்.

கேள்வியாகத் தன்னைப் பார்த்த நண்பனிடம் அத்தை மகளை விட்டு கொடுக்க அவனால் முடியவில்லை.

"அவளுடைய வருங்காலக் கணவனுடன் வந்திருக்கிறாள்." என்று மணிமாறன் சமாளித்தான்.

"யாருடா அது?"

"வருண்."

"யாரு? மினிஸ்டர் பையனா?"

"ம், ம்..." அப்போது அங்குக் கொண்டு வைக்கப்பட்ட 'மாக்டெயிலை' கையில் எடுத்து அருந்தினான் மணிமாறன்.

"அவனுக்கும், உனக்கும் ஒத்து வராதேடா."

"நானும், அவனுமா கல்யாணம் பண்ணிக்கப் போகிறோம். ஜோக் அடிக்காதேடா." என்றவன் அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். ஆனாலும் அவனது மனம் முற்றுப்புள்ளி வைக்காது வசுமதி ஆடிய காட்சியில் அப்படியே நிலைத்து நின்றது.

பிறந்தநாள் கொண்டாட்டம் முடிந்து மணிமாறன் கிளம்பும் வரை வசுமதி அங்கிருந்து கிளம்பவில்லை. அவளைப் பார்த்தபடி அவன் வெளியேறினான். வீட்டிற்கு வந்தவன் மறந்தும் வசுமதி பற்றித் தாத்தாவிடம் கூறவில்லை. அப்படிக் குறை கூறவும் அவனுக்குப் பிடிக்கவில்லை. எப்போதும் போல் அவன் அமைதியாக ஒதுங்கி கொண்டான்.

******

மறுநாள் காலையில் மணிமாறன் சாந்திக்குப் பயிற்சி கொடுப்பதற்காக விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச் சென்றான். அதிகாலை நேரம் என்பதால் அதிகக் கூட்டம் இல்லை. அதனால் சாந்தியின் பயிற்சிக்குத் தடை ஏதுமில்லை. துப்பாக்கியில் இருந்து சீறி பாயும் தோட்டா போன்று வேகமாக ஓடியவளை கண்டு அவனுக்குப் பிரமிப்பாக, பெருமிதமாக இருந்தது. அவள் அவனது சிஷ்யை அல்லவா!

மீண்டும் மீண்டும் சலிக்காது பயிற்சி மேற்கொண்டவளை கண்டு அவனுக்குத் தான் வியப்பாய் இருந்தது. அவனும் சளைக்காது அவளுக்கு அறிவுரை கூறிக் கொண்டே அவளுக்கு ஊக்கமளித்துக் கொண்டிருந்தான். கீழ் வானில்

மெல்ல பகலவன் எட்டிப்பார்க்க ஆரம்பித்ததும் இருவரும் வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமாயினர்.

அப்போது தான் வருண் தனது மாணவியும், அவனது தந்தையின் நண்பர் தொழிலதிபர் அகத்தியனின் மகளுமான ஸ்மிதாவுடன் பயிற்சிக்காக உள்ளே நுழைந்தான். வருணை கண்டதும் மணிமாறனுக்கு வெறுப்பாக இருந்தது.

'நேற்று முழுவதும் குடித்துவிட்டு ஆடினால் இப்படித் தான் தாமதமா எழ வேண்டியிருக்கும். இதில் இந்தச் சின்னப் பெண் வேறு பாவம்.' அந்தச் சிறுமிக்காக வருத்தப்பட்டபடி மணிமாறன் நடந்தான்.

"சாந்தி..." ஸ்மிதா சாந்தியை கண்டு சந்தோசத்துடன் கையசைத்தாள்.

ஏற்கெனவே இருவரும் நிறையப் போட்டிகளில் கலந்து கொள்ளும் போது பார்த்து பேசி நட்பாகி இருந்தனர். ஒரே துறை வேறு... அங்கே நட்பிற்குக் கேட்கவா வேண்டும்!

"ஸிமி..." சாந்தியும் அவளைப் பார்த்து உற்சாகமாய்க் கையசைத்தாள்.

"ஸிமி, நம்ம தகுதிக்கு இந்த மாதிரி ஆளுங்க கூடப் பழகிறது தப்பு." வருண் ஸ்மிதாவை கண்டித்தான்.

"போங்க ப்ரோ... சாந்தி இஸ் மை பெஸ்ட் பிரெண்ட்." என்றவள் சாந்தியை நோக்கி ஓடினாள்.

"ஹாய்ண்ணா..." ஸ்மிதா மணிமாறனை பார்த்து கையசைத்தாள். சாந்தி கூடச் சேர்ந்து அவளுக்கும் மணிமாறன் அண்ணனாகி விட்டான்.

"எப்படிம்மா இருக்க? பிராக்டிஸ் எல்லாம் எப்படிப் போகுது?" அவன் அக்கறையுடன் விசாரிக்க...

"அண்ணா, நான் உங்க ஸ்போர்ட்ஸ் ஸ்கூலில் வந்து சேர்த்துக்கவா?" ஆர்வத்துடன் கேட்டாள் ஸ்மிதா.

"உங்கப்பா ஒத்துக்கணுமே ஸிமி."

"ஆமாண்ணா... அவர் கௌரவம் பார்த்துட்டு அனுப்ப மாட்டேங்கிறார். அங்கே எல்லாம் சேரி பசங்க தான் வருவாங்கன்னு சொல்லி என்னைத் திட்டிட்டார்." என்றாள் அவள் சோகமாக...

"எல்லோரும் மனுசங்க தான் ஸிமி. ஆனாலும் உன் அப்பா சொல்வதைத் தான் நீ கேட்கணும்." அவன் எடுத்து கூறி அவளைச் சமாதானப்படுத்தினான்.

"ம், சரிண்ணா..." என்றவள் தான் வைத்திருந்த பையில் இருந்து ஒரு பாட்டிலை எடுத்துச் சாந்தியிடம் கொடுத்தவள்,

"இது எனர்ஜி ட்ரிங்க்காம் சாந்தி. இதைக் குடிச்சா ஓடுறதுக்கு வேண்டிய எல்லாச் சக்தியும் கிடைக்கும்ன்னு எங்கப்பா பாரினில் இருந்து வரவழைச்சு இருக்கார். இந்தா இது உனக்குத் தான்... வாங்கிக்கோ." என்க... சாந்தி மணிமாறனை கேள்வியாய் பார்த்தாள்.

"வாங்கிக்கோ சாந்தி... நீ வாங்கலைன்னா ஸிமி மனசு கஷ்டப்படும்." என்று அவளை வாங்க சொல்லி ஊக்குவித்தவன் ஸ்மிதாவிடம் திரும்பி,

"இதையெல்லாம் விட நீ காய்கறிகள், கீரைகள், பழங்கள், தானியங்கள், பால், முட்டை எல்லாம் தினமும் எடுத்துக்கோ. அதுவே உனக்கு வேண்டிய சக்தியை தரும்." என்று அறிவுரை கூற...

"அப்போ இது...?" சின்னவள் குழம்பி போனாள்.

"கார்ப்பரேட் சதி... இயற்கையாய் கிடைப்பதை இப்படிச் செயற்கையாய் பாட்டிலில் அடைத்து விற்பனை செய்றாங்க." என்றவன்,

"நான் உன்னிடம் ஒரு விசயம் கேட்கிறேன். உனக்கு ஃபிரெஷ் ஆரஞ்சு ஜூஸ் பிடிக்குமா? இல்லை பாட்டிலில் அடைத்து விற்கப்படும் ஆரஞ்சு ஜூஸ் பிடிக்குமா?" என்று கேட்டான்.

"ஃபிரஷ் ஆரஞ்சு ஜூஸ் தான் பிடிக்கும்."

"குட்... அதே மாதிரி தான் இதுவும். பாட்டிலில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் எனர்ஜி ட்ரிங்க்கை விட எனர்ஜி அதிகம் இருக்கும் நம் நாட்டு புரத உணவு பொருட்களை நாம் அதிகம் எடுத்து கொண்டாலே போதுமானது."

"தேங்க்ஸ்ண்ணா..." என்றவள் நன்றி கூறிவிட்டு சிட்டாகப் பறந்தாள், வருணை தேடி... மணிமாறன், சாந்தி இருவரும் சிரித்தபடி அங்கிருந்து அகன்றனர்.

"என்ன சொன்னான்?" வருண் அடக்கப்பட்ட கோபத்துடன் கேட்க... ஸ்மிதா மணிமாறன் கூறியதை அப்படியே கூறினாள்.

"சாப்பாட்டுக்கு வக்கத்தவன் அப்படித் தான் சொல்வான்." என்று கோபத்தில் பல்லை கடித்தான் வருண்.

"போங்க ப்ரோ, அவங்க கிட்ட தான் ஸ்ட்ரென்த் இருக்கு. அன்னைக்குக் கூட மார்க்கெட்டில் பார்த்தேன், ஒருத்தர் ஒத்தை கையால இம்மாம் பெரிய மூட்டைய அசால்ட்டா தூக்கிட்டு போறாரு. அதனால் மணியண்ணா சொல்றது தான் சரி." மணிமாறனை விட்டு கொடுக்காது பேசிய ஸ்மிதாவை கண்டு எரிச்சலுற்ற வருண்,

"கிரவுண்ட்டை சுற்றி ஐஞ்சு ரவுண்டு ஓடிட்டு வா." என்று அவளிடம் உத்தரவிட்டவன் அங்கிருந்த கல்மேடையில் அமர்ந்து கொண்டு அலைப்பேசியை நோண்ட ஆரம்பித்தான்.

ஸ்மிதா சலிப்புடன் மைதானத்தைச் சுற்றி ஓட துவங்கினாள்!

******

சென்னை துறைமுகத்தில் நின்று கொண்டிருந்த சரக்குக் கப்பலில் இருந்து பொருட்களை அங்கிருந்த கூலிகள் சுமந்து கொண்டு வெளியில் வந்தனர். அவர்களில் பரசுவும் அடக்கம். அப்போது அங்கு வந்து சேர்ந்தான் புகழேந்தி. காக்கி உடையில் வந்திறங்கிய அவனைக் கண்டதும் எல்லோரும் மரியாதையாக வணக்கம் வைத்தனர். பரசு அவனை அடையாளம் கண்டு கொண்டு அவனை நோக்கி ஓடி வந்தான்.

"சார், வாங்க சார்... என்ன சார், இந்தப் பக்கம்...?" என்று அவன் பணிவுடன் கேட்க... அவனது கேள்விக்குப் பதில் அளிக்காது புகழேந்தி,

"இந்தக் கப்பலில் நீயும் கூலி வேலை செய்றியா?" என்று கேட்க...

"ஆமாங்க சார்."

"இதில் என்ன பொருட்கள் இருக்குது?"

"வெளிநாட்டில் இருந்து வரும் மருத்துவக் கழிவுகள் சார்."

அதைக் கேட்டு அதிர்ந்து போனான் புகழேந்தி. அடுத்த நாட்டின் கழிவுகளைக் கொட்டும் குப்பை தொட்டியா அவனது தாய்நாடு? பணத்திற்காக மலத்தை உண்பது போல் எத்தனை கேவலமான செயல் இது. அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவனால் கோபப்பட மட்டுமே முடிந்தது. அவனால் எதையும் செயல்படுத்தவும் முடியாது. எதையும் மாற்றி அமைக்கவும் முடியாது.

"பணத்துக்காக நாம குப்பை தொட்டியா மாறுகிறோம்." என்று வேதனையுடன் கூறிய புகழேந்தி அப்போது தான் பரசுவை கவனித்தான்.

"பரசு, மருத்துவக் கழிவுகள் ரொம்ப ஆபத்தானது. சில சமயம் அதில் கதிர்வீச்சு கூட இருக்க வாய்ப்பு இருக்கு. இப்படிக் கையுறை கூட இல்லாது வேலை செய்றியே? ஏதாவது குத்தி இன்பெக்சன் ஆகிட்டா என்ன பண்றது?" புகழேந்தி படபடத்தான்.

"எத்தனையோ வருசமா நான் இந்தத் தொழிலில் இருக்கேன் சார். ஒண்ணும் பண்ணாது." அசால்ட்டாகக் கூறியவனை வருத்தத்துடன் பார்த்தான் புகழேந்தி. படிப்பறிவு இல்லாத இந்தப் பாமர மக்களை எப்படித் திருத்துவது? என்று அவனுக்குத் தெரியவில்லை.

புகழேந்தி ஒன்றும் பேசாது அந்த இடத்தைச் சுற்றி பார்த்துவிட்டு வெளியில் வந்தான். அவன் தேடி வந்த போதை பொருட்கள் அங்கு எங்கும் காணவில்லை. அவனுக்குப் பலத்த யோசனையாக இருந்தது. அவனுக்குக் கிடைத்த தகவலின்படி கப்பல் மூலமாகத் தான் போதை பொருட்கள் சென்னைக்கு வந்தடைகிறது. அதுவும் ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய் அல்ல. பல லட்சம் கோடி ரூபாய் மதிப்புடைய போதை பொருட்கள் அவை. போதை

பொருள் கடத்தலில் இடம் பெற்றிருப்பது பெரிய புள்ளிகள் என்பதால் சர்வ ஜாக்கிரதையாகத் தான் இந்த வழக்கை கையாள வேண்டும். அதனால் தான் புகழேந்தி இந்த விசயத்தில் யாரையும் நம்பாது அவனே நேரிடையாகக் களத்தில் இறங்கி இருக்கிறான்.

புகழேந்தி சலித்துப் போன மனநிலையுடன் கிளம்பி சோர்வாய் அலுவலகத்திற்குள் நுழைந்தான். அங்கு அவனுக்காக அவனது அறையில் காத்திருந்த வந்தனாவை கண்டதும் அவனுக்கு இன்னமும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"ஏய், உன்னை யார் இங்கே அனுமதித்தது?" அவன் கோபமாய் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்.

"யார் அனுமதி வேண்டும் டார்லிங்? மினிஸ்டர் வரதராஜன் பொண்ணைக் கட்டுப்படுத்தும் உரிமை யாருக்கு இருக்கிறது?" என்று கேட்டபடி வந்தனா ஒயிலாக மேசை மீது சாய்ந்து நின்றாள்.

'எல்லாம் வசுவால் வந்த வினை இது' அவன் தனது தங்கையை நினைத்து ஆத்திரத்தில் பல்லை கடித்தான். இரண்டு வருடங்களுக்கு முன்பு வசுமதி பிறந்தநாளின் போது வருணும், அவனது தங்கை வந்தனாவும் இவர்களது வீட்டிற்கு வந்திருந்தனர். அப்போது புகழேந்தி விடுமுறைக்காக வீட்டிற்கு வந்திருந்தான். வசுமதியின் நண்பர்களாயிற்றே என்று அவன் மரியாதை நிமித்தம் இரண்டொரு வார்த்தை மதித்துப் பேசியது வினையாகி போயிற்று. அன்றிலிருந்து இன்றுவரை அவனை வந்தனா என்கிற ஏழரை பிடித்து ஆட்டுகிறது.

"எனக்கு அதிகாரம் இருக்கிறது. என் அனுமதி இல்லாது என் அறைக்குள் யாரும் நுழைய கூடாது. ஐ சே கெட் அவுட்." என்று அவன் கோபத்துடன் கத்தினான்.

"டார்லிங்... எதுக்கு இவ்வளவு கோபம்? கோபப்பட்டா அழகு போயிரும். நீங்க எப்போதும் இதே ஸ்மார்ட்னசோடு எனக்கு

வேண்டும்." என்று கண்சிமிட்டி சிரித்தவளை கண்டு அவனது இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது.

"டாமிட்... நீயா வெளியில் போறியா? இல்லை கழுத்தில் கை வச்சு வெளியில் தள்ளவா?"

"அப்படியாவது உங்க கை என்னை டச் பண்ணினால் ரொம்பச் சந்தோசம் டார்லிங்." மீண்டும் கண்சிமிட்டியவளை கண்டு அவனது கோபம் கண்டபடி எகிறியதில் அவன் அங்கிருந்த பெண் காவலரை அழைத்து வந்தனாவை அப்புறப்படுத்துமாறு கூறினான். அதில் அவமானத்தில் முகம் சிறுத்து போன வந்தனா,

"என்னை ரொம்ப அவமானப்படுத்திட்டீங்க மிஸ்டர். புகழேந்தி. இதுக்கான பலனை நீங்க அனுபவிப்பீங்க." என்று பெரும் கோபத்துடன் மொழிந்தவள் அங்கிருந்து விருட்டென்று வெளியேறினாள்.

"ச்சே, இம்சை..." என்று சலித்தபடி புகழேந்தி தனது இருக்கையில் வந்தமர்ந்தான்.

"சார், உங்களைப் பார்க்கிறதுக்காகக் கல்லூரி மாணவிகள் வந்து காத்திருக்காங்க."

"என்னைய பார்க்கவா? வர சொல்லுங்க..."

சிறிது நேரத்தில் உள்ளே நுழைந்தவர்களைக் கண்டு அவன் வியப்பில் புருவத்தைத் தூக்கினான். அதற்குக் காரணம் கூட்டத்தில் ஒருத்தியாக நந்தனா இருந்தாள்.

"உட்காருங்க..." என்று அவர்களை அமர சொன்னவனின் பார்வை நந்தனாவின் மீதே இருந்தது.

"சார், எங்க கல்லூரியில் பேரிடர் சமயம் பாதுகாப்பாய் இருப்பது எப்படி? என்பது பற்றிய விழிப்புணர்வு, பெண்களுக்கான தற்காப்புக் கலைகள் எல்லாவற்றையும் பற்றி வரும் ஆறாம் தேதி ஒரு நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்கு நீங்க தான் தலைமை தாங்க வர வேண்டும்." ஒரு மாணவி அவனிடம் கூற...

"நானா...?" என்று இழுத்தவன்,

"அந்த நாளில் நான் ப்ரீயா இருப்பேனா என்பது சந்தேகம் தான்." என்று இழுத்தவனைக் கண்டு ஏமாற்றமாய் நிமிர்ந்து பார்த்தாள் நந்தனா. அவளுக்காகவே அங்குப் போகத் துடித்தது அவனது காதல் நெஞ்சம்.

"ப்ரீயா இருந்தால் நிச்சயம் வருகிறேன்." அவளுக்காகக் கூறியவன் எழுந்து நின்று கை கூப்பி விடையளித்தான்.

எல்லோரும் எழுந்து செல்ல... அவனது பார்வை நந்தனா மீதே இருந்தது. கதவருகில் சென்றவள் நொடி பொழுதில் அவனைத் திரும்பி பார்க்க... அவளது பார்வையைக் கண்டவன் விசமத்துடன் அவளைப் பார்த்து கண்சிமிட்டி புன்னகைத்தான். அதில் விதிர்த்து போனவள் அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டாள்.

"மாமன்மகளே! மனசுக்குள்ள மாமன் மேல ஆசையிருக்கு. ம்..." என்றவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது.

******

தாத்தா சதாசிவம் வீட்டிற்குள் நுழையும் போதே மிகுந்த கோபத்துடன் வந்தார். வரவேற்பறையின் நடுவில் வந்து நின்றவர்,

"வசு, வசு, வசு..." என்று உரக்க கத்தி அழைத்தார்.

அன்று விடுமுறை என்பதால் எல்லோரும் வீட்டில் இருந்தனர். தேவகி, நந்தனா சமையலறையில் இருந்து எட்டிப்பார்த்தனர். மணிமாறன் வரந்தாவில் அமர்ந்திருந்தாலும் உள்ளே வரவில்லை. சதாசிவத்தின் பெரிய மகள் மஞ்சுளா, அவரது கணவன் மருதப்பன், சின்ன மகள் கனகா, அவரது கணவன் மாணிக்கம் எல்லோரும் அங்குக் குழுமிவிட்டனர். புகழேந்தியும் அங்கு வந்துவிட்டான்.

"என்ன விசயம் தாத்தா?" என்று அவன் கேட்டதும்,

"உன் தங்கையை வர சொல்லு." சதாசிவம் கண்டிப்புடன் கூற...

அப்போது தான் வசுமதி தூங்கி எழுந்து சோம்பலுடன் மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் சதாசிவத்தின் கோபம் இன்னமும் எகிற துவங்கியது.

"வசு, சீக்கிரம் வா... தாத்தா உன்னைக் கூப்பிடறார் பார்." அவளது அன்னை கனகா தேன் தடவிய குரலில் மகளை அழைத்தார்.

"என்ன தாத்தா? எதுக்குக் கூப்பிட்டீங்க?" சாவகாசமாய்ப் படியிறங்கி வந்து கேள்வி கேட்ட பேத்தியின் மென்மையான கன்னத்தைச் சதாசிவத்தின் வலிய கரம் கடுமையாய் பதம் பார்த்தது.

தாத்தா அடித்த அதிர்ச்சியைத் தாங்காது வசுமதி தனது கன்னத்தைப் பிடித்தபடி அப்படியே சிலையாய் நின்றிருந்தாள்!

சதாசிவத்தின் கோபம் கண்டு எல்லோரும் அதிர்ந்து போய் நின்றிருந்தனர். வெளியில் அமர்ந்திருந்த மணிமாறன் கூடச் சத்தம் கேட்டு வேகமாய் எழுந்து வீட்டினுள் வந்தான். தாத்தா அடித்ததில் வசுமதியின் தூக்க கலக்கம் பறந்தோடி போனது. அவளுள் இருந்த திகைப்பு மறைந்து மெல்ல அந்த இடத்தைக் கோபம் ஆக்கிரமிக்க ஆரம்பித்தது.

"எதுக்கு என்னைய அடிச்சீங்க தாத்தா?" அவள் கோபத்துடன் கேட்டாள்.

அவளுடைய தந்தை மாணிக்கத்திற்கும் அவளைப் போல் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஆனால் அவளது அன்னை கனகா மட்டும் தனது தகப்பனுக்குப் பயந்தாள். தந்தையின் தயவில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தச் சூழலில் மகள் தேவையில்லாது பேசி இருப்பதையும் கெடுத்துக் கொள்ளக் கூடாதே? என்று அவருக்கு அச்சமாக இருந்தது.

"வசு, தாத்தாவை எதிர்த்து பேசாதே." கனகா மகளை அடக்கினார்.

"ம்மா, நான் எதிர்த்து பேசலை. என்னை அடிச்சதுக்குக் காரணம் கேட்கிறேன். சும்மா சும்மா அடிவாங்கிறதுக்கு நான் என்ன இவரோட அடிமையா?" வசுமதி அடங்காது பொங்கினாள்.

மகளை அடக்கும் வழி தெரியாது கனகா கைகளைப் பிசைந்தார். மணிமாறன் கண்களில் ஏளனத்தைத் தேக்கியபடி நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். 'சண்டிராணியாவது அடங்குவதாவது. தாத்தாவையே கேள்வி கேட்கிறாளே. சபாஷ்!' என்று அவன் மனதிற்குள் நக்கலாய் நினைத்துக் கொண்டான்.

"அதானே, என் பொண்ணு சொல்றது சரி தானே. அவள் என்ன அடிமையா? உங்க வீட்டில் இருந்தால் நீங்க

இப்படித்தான் அடிமை மாதிரி நடத்துவீங்களா?" மாணிக்கம் மகளுக்குப் பரிந்து கொண்டு குரலை உயர்த்தினார்.

மருமகனை ஒரு பார்வை பார்த்த சதாசிவம் பின்பு, "முந்தா நேத்து ராத்திரி உங்க மகள் எங்கே போயிருந்தாள்ன்னு கேளுங்க மாப்பிள்ளை?" என்று வரவழைத்துக் கொண்ட நிதானத்துடன் கேட்டார்.

வசுமதி மாட்டி கொண்ட தினுசில் திருதிருவென முழித்தாள். தாத்தா கேட்டதும் மணிமாறனுக்கு எல்லாம் புரிந்து போனது. வசுமதி பப்பிற்குச் சென்றதை தான் அவர் அப்படிக் கேட்கிறார் என்பதை அறிந்து கொண்டவன், இதற்கு வசுமதி என்ன பதில் சொல்ல போகிறாள்? என்று சுவாரசியமாக வேடிக்கை பார்க்க துவங்கினான்.

"எங்கேடி போய்த் தொலைஞ்ச?" கனகா மகளைப் பார்த்து எரிச்சலுடன் வினவ...

"நல்லாயிருக்கு கனகா, நீ பேசுறது... வயசு பொண்ணு நேரத்தோட வீட்டுக்கு வர்றாளா, ராத்திரி வீடு தங்கிறாளான்னு பார்க்காம, நீ அவளைக் கேள்வி கேட்கிறியா? பொண்ணை ரொம்ப அழகா வளர்த்து வச்சியிருக்க? உன்னை நினைச்சு எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு." சதாசிவம் மகளின் அக்கறையின்மையைக் குத்தி காட்டினார்.

"என்னை மட்டும் குறை சொல்றீங்க? உங்க மூத்த மகளும் அப்படித்தானே மகனை வளர்த்திருக்கா." கனகா நொடித்துக் கொண்டார்.

"இங்கே பாருடி, என்னைய சாடை பேசுற வேலை எல்லாம் இங்கே வேணாம். நான் என் மகனை ஒழுங்கா தான் வளர்த்து வச்சிருக்கேன். இங்கே பாரு, என் மகனை... ஐபிஎஸ் பாஸ் பண்ணி ஏசிபியா நம்ம ஊரில் வேலை பார்க்கிறான். இதைவிட எனக்கு வேறு என்ன பெருமை வேணும்?" மஞ்சுளா தன் மகனை நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டார்.

"நீ எங்கே வளர்த்தக்கா? புகழ் தானா வளர்ந்து இருக்கிறான். புகழ் இங்கே வந்து மூணு மாசமாகுது. ஒருநாளாவது நீ அவனுக்கு வாய்க்கு ருசியா சமைச்சு போட்டிருக்கியா?"

"என்னைய குறை சொல்லாதே. நீ உன் பொண்ணை ஒழுங்கா வளர்த்திருந்தா, அப்பா எதுக்குக் கூப்பிட்டு வச்சுச் சத்தம் போட போறாரு. என் மகனை பத்தி பேசி பேச்சை திசை திருப்பாதே."

இருவரும் சண்டை கோழிகளாய் சிலிர்த்து கொண்டனர். அதைக் கண்டு சதாசிவத்திற்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போலிருந்தது.

"அம்மாடி, நான் பெத்த பரதேவதைங்களா... நீங்க ரெண்டு பேரும் பிள்ளைங்களை வளர்த்த லட்சணத்தை நீங்களே ஒத்துக்கிட்டது ரொம்பச் சந்தோசம். நாம இப்போ வசு பிரச்சினையைப் பத்தி பேசுவோமா?"

சதாசிவம் குரலை உயர்த்தவும் இருவரும் அமைதியாகி விட்டனர். சதாசிவம் திரும்பி பேத்தியின் முகத்தைப் பார்த்தார்.

"எனக்கு உண்மையான பதில் வேணும் வசு." என்றார் கடுமையுடன்...

"பப்புக்கு போயிருந்தேன்."

வசுமதி உள்ளுக்குள் பயத்தில் எச்சிலை விழுங்கி கொண்டாலும் வெளியில் தைரியமாக இருப்பது போல் காட்டி கொண்டாள். மணிமாறன் அவளது மன தைரியத்தை மனதிற்குள் பாராட்டியபடி நின்றிருந்தான். அவனுக்குக் கூடத் தாத்தாவை எதிர்த்து பேசும் தைரியம் கிடையாதே!

புகழேந்திக்கு தங்கையின் பதிலை கேட்டதும் கோபம் வந்தது. அவளைக் கன்னம் கன்னமாய் அறைந்து தள்ளும் ஆவேசம் வந்தது. அதற்குள் கனகா முந்தி கொண்டார். அதனால் அவன் அமைதி காத்தான்.

"நீ பப்புக்குப் போய்க் கூத்தடிச்சதை எவ்வளவு தைரியம் இருந்தா எங்க கிட்டேயே வந்து சொல்லுவ? அதுவும் நெஞ்சை நிமிர்த்திட்டு..."

கனகா திட்டியபடி மகளை அடிக்கத் துவங்கினார். தனது தந்தை அடித்தால் இதை விட அதிகம் அடிப்பாரே என்று எண்ணி கொண்டு அவர் இடையில் புகுந்து தனது மகளைக் காப்பாற்றினார்.

"கனகா, முதலில் அவளை அடிக்கிறதை நிறுத்து."

மஞ்சுளா பாய்ந்து வந்து தங்கை மகளைத் தாங்கி கொண்டார். சகோதரிகளுக்குள் எத்தனை முரண்பாடுகள் இருந்த போதும் அவர்கள் தங்களது இரு குழந்தைகள் மீது அதிகப் பாசம் வைத்திருந்தனர்.

"விடுக்கா... இவளை அடிச்சு கொன்னு போட்டா தான் எனக்கு நிம்மதியா இருக்கும்."

"வசு தப்பு செய்றவளா இருந்தா இந்த விசயத்தை நம்ம கிட்ட சொல்லியிருக்க மாட்டாள். அதையும் மீறி அவள் சொல்லுகிறாள் என்றால் அவள் பக்கமும் நியாயம் இருக்கும். அவளைப் புரிஞ்சுக்கோ கனகா."

நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்த சதாசிவத்திற்கு பற்றிக் கொண்டு வந்தது.

"அவள் தனியா போனாளா? இல்லை வேறு யாருடன் சேர்ந்து போனாள்ன்னு அவள் கிட்ட கேட்டுட்டு அதுக்கு அப்புறம் நீங்க ரெண்டு பேரும் பேசுங்க." அவர் குரலை உயர்த்தினார்.

சதாசிவத்தின் நண்பரின் பேரன் வசுமதி வருணுடன் பப்பிற்கு வந்த விசயத்தைத் தனது தாத்தாவிடம் கூற... அவர் நேரே சதாசிவத்திடம் வந்து பற்ற வைத்துவிட்டுப் போய்விட்டார். விசயம் கேள்விப்பட்ட சதாசிவத்திற்கு ஆத்திரம் வந்தது. அதான் அவர் தனது பேத்தியிடம் விசயத்தைக் கேட்பதற்காக உடனே வீட்டிற்கு வந்துவிட்டார்.

முழுவதும் நனைந்த பின் முக்காடு எதற்கு? என்று நினைத்த வசுமதி தைரியமாகத் தாத்தாவை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஆமா, நான் என் காதலன் வருணோடு தான் அங்குப் போயிருந்தேன்." என்றாள் தைரியமாக...

'ஹப்பா! என்ன பொண்ணுடா சாமி...' அவளது மன தைரியத்தைக் கண்டு மணிமாறன் மனதிற்குள் பிரமித்தான்.

"என்னது! நீ வருணை காதலிக்கிறியா?"

தாத்தா அதிர்ச்சியுடன் பேத்தியை பார்த்தார். அவரது அதிர்வை உணர்ந்த புகழேந்தி அவர் அருகில் வந்து,

"தாத்தா, ரிலாக்ஸ்..." என்று ஆதரவாக அவரது கையைப் பிடித்தான்.

ஏனோ அவனுக்கு வசுமதியின் இந்தச் செய்கை பிடிக்கவில்லை. அதனால் அவன் எதுவும் பேசாது அமைதி காத்தான்.

"எப்படிடா ரிலாக்சா இருக்க முடியும்? வரதன் இப்போ வேணா அமைச்சரா இருக்கலாம். ஆனா அதுக்கு முன்னாடி அவன் ஒரு ரௌடி. அவன் பிறந்து வளர்ந்த துறைமுகத்தில் போய்க் கேட்டு பாரு. அவனைப் பத்தின விசயத்தை எல்லாம் புட்டு புட்டு வைப்பாங்க."

தாத்தா கூறியதை புகழேந்தி நல்ல காவலனாய் கவனமாய் மனதில் குறித்து வைத்துக் கொண்டான்.

"அவன் பண்ணாத பிராடு வேலைகள் கிடையாது. கடத்தலில் இருந்து பொண்ணைக் கூட்டி கொடுக்கிற மாமா வேலை வரைக்கும் அனைத்தையும் செஞ்சவன் அவன். இவ்வளவு ஏன் இப்பவும் அதைச் செஞ்சிக்கிட்டு தான் இருக்கான். அப்படிப்பட்ட அயோக்கியன் இந்த வீட்டுக்கு சம்பந்தியா வர்றதா? என்னால் ஏத்துக்க முடியாது புகழ். என்னால் ஏத்துக்க முடியாது."

உணர்ச்சிவசப்பட்டுக் கூறிக் கொண்டிருந்த சதாசிவம் திடீரென்று நெஞ்சை பிடித்துக் கொண்டு மயங்கி சரிந்தார்.

"தாத்தா..." என்று அலறியபடி புகழேந்தி அவரைக் கைகளில் தாங்கி கொண்டான். மணிமாறன் ஓடிவந்து மறுபுறம் தாங்கி கொண்டான்.

சிறிது நேரத்தில் அந்த இடமே களேபரமானது. புகழேந்தி காரை எடுக்க... மணிமாறன் தாத்தாவை கைகளில் ஏந்தி கொண்டு காரை நோக்கி ஓடினான். அடுத்த அரை மணி நேரத்தில் தாத்தாவை மருத்துவமனையில் சேர்த்திருந்தனர். தீவிர சிகிச்சை கண்காணிப்பில் சதாசிவத்தை அனுமதித்து அவருக்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. புகழேந்தியும், மணிமாறனும் கவலையுடன் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு இருந்த மனநிலையில் யாரை பற்றியும் யோசிக்க முடியவில்லை.

வீட்டில் இருந்த மற்றவர்கள் வேறொரு காரில் மருத்துவமனை வந்து சேர்ந்தனர். வசுமதியின் முகம் பேயறைந்தார் போன்று இருந்தது. தன்னால் தான் தாத்தாவிற்கு இந்தத் துன்பம் என்று அவளது மனம் கழிவிரக்கத்தில் கரைந்தது. கொஞ்சம் பொறுமையாய் பேசி இருக்கலாமோ? என்று அவள் இப்போது யோசித்தாள். அவள் இயல்பில் கெட்டவள் இல்லையே! செல்லம் கொடுத்து வளர்த்ததால் கொஞ்சம் திமிர், பிடிவாதம் அதிகம், அவ்வளவே!

தேவகியும், நந்தனாவும் மருத்துவமனை செல்ல முடியாது துயரத்துடன் வீட்டில் முடங்கினர். விசயம் கேள்விப்பட்டுத் தங்கம் கதறியழுதார்.

"அவரைப் பார்க்க கூடப் போக முடியாத பாவி ஆகிட்டேனே! கடவுளே! உனக்குக் கண் இல்லையா?" என்று அவர் அழுது கரைந்து ஒப்பாரி வைத்தார். நந்தனாவால் அவரைத் தேற்ற முடியவில்லை. அவள் கனக்கும் இதயத்துடன் கையாலாகாதவளாய் அவரைப் பார்த்திருந்தாள்.

ஒருநாள் முழுவதும் எல்லோரையும் பயமுறுத்திவிட்டு மறுநாள் சதாசிவம் கண் விழித்தார். முதல் முறை வந்த மாரடைப்பு என்பதால் பயமில்லை. ஆனால் இனிமேல் அவரைக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் கூறினர். அறைக்கு அழைத்து வரப்பட்ட சதாசிவம் யாரையும் பார்க்க விருப்பப்படவில்லை. அவர் புகழேந்தியை மட்டும் உள்ளே அழைத்தார்.

புகழேந்தி அறையினுள் நுழைந்ததும் சதாசிவம் அவனிடம், "தாழ்ப்பாள் போட்டுட்டு வா புகழ்." என்று பணிக்க... புகழேந்தி அவர் சொன்னதைச் செய்துவிட்டு அவர் அருகில் வந்தமர்ந்தான்.

"கொஞ்ச நேரத்தில் எல்லோரையும் பயமுறுத்திட்டீங்களே தாத்தா." என்றவனது விழிகள் கலங்கியது. அவரது கையைப் பிடித்திருந்த அவனது கைகள் நடுங்கியது.

"படவா! நீயெல்லாம் என்ன போலீஸ்டா? சின்ன விசயத்துக்கே இப்படிப் பயந்து சாகிற?" அவர் அவனைக் கிண்டலடித்தார்.

"போங்க தாத்தா." பேரன் சின்னவனாய் மாறிச் சிணுங்கினான்.

"உன்னை இப்படிப் பார்க்கும் போது எவ்வளவு சந்தோசமாயிருக்கு தெரியுமா? ஏன்டா, படிச்சு பெரியாளானாதும் யார் கிட்டேயும் பேச கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா என்ன?"

"அப்படி எல்லாம் இல்லை தாத்தா. ஹாஸ்டலில் தங்கி படிச்சது, அப்படியே வேலையில் சேர்ந்துட்டேன். அதனால் குடும்பத்தோடு இருந்தது ரொம்பக் குறைவு. அதுக்காக உங்க எல்லோர் மீதும் பாசம் இல்லைன்னு ஆகிருமா?"

"ம், அதுவும் வாஸ்தவம் தான்." அவனது கூற்றை ஒத்துக் கொண்ட சதாசிவம்,

"மணி இங்கே இருக்கானா? இல்லை கிளம்பி போயிட்டானா?" என்று கேட்க...

"இவ்வளவு நேரம் இங்கே தான் இருந்தான். நீங்க குணமாகிட்டீங்கன்னு தெரிஞ்சதும் வீட்டுக்கு கிளம்பி போயிட்டான்."

"படவாவுக்கு என் மேல் கோபம்." என்று கூறி சிரித்தார் அவர்.

"தாத்தா..." புகழேந்தி அவரை ஆச்சரியமாகப் பார்த்தான்.

"டேய், நான் கோபப்பட்டாலும் அவன் என் பேரன் இல்லைன்னு ஆகிருமா?" என்றவரை கண்டு அவனுக்கு வியப்பாக இருந்தது.

"நான் சொல்றதை கவனமா கேட்டுக்கோ புகழ். இப்போதைக்கு என்னால் இதை யாரிடமும் சொல்ல முடியாது. உன் கிட்ட மட்டும் தான் சொல்ல முடியும். ஏன்னா நீ ஒருத்தன் தான் தெளிவா யோசிக்கக் கூடிய மனநிலையில் இருக்கிற." என்று பீடிகை போட்டவர் மெல்ல விசயத்தைக் கூறலானார்.

"உன் தாய்மாமா நாராயணன் எங்களுக்கு ஒரே மகன். அத்தனை செல்லம் அவன் மீது. ஆனா அவன் திடுப்புன்னு ஒரு பொண்ணைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டது எங்களுக்குப் பிடிக்கலை. அதனால் அவனை ஒதுக்கி வச்சிட்டோம்." என்றவர் பேரனின் முகத்தைப் பார்த்தார்.

"இது தான் எல்லோருக்கும் தெரிந்த விசயமாயிற்றே." என்றான் பேரனும்...

"இல்லை புகழ்... இது உண்மை கிடையாது."

"தாத்தா..." புகழேந்தி திகைப்புடன் அவரைப் பார்த்தான்.

"ஆமா புகழ்... உன் அப்பா, சித்தப்பா இருவரும் எங்களை மிரட்டி இப்படிப் பேச வச்சாங்க. எங்க மகனை ஒதுக்கி வைக்கச் சொன்னாங்க."

புகழேந்தி நம்ப முடியாது தாத்தாவை பார்த்திருந்தான். அவனுக்கு இது புதிய செய்தி!

"உன்னால் நம்ப முடியலை இல்லையா புகழ்? ஆனால் இது தான் உண்மை. நாராயணனை வீட்டினுள் சேர்த்தால் அவங்க ரெண்டு பேரும் அவங்களோட மனைவியை விட்டு பிரிஞ்சு போறதா சொன்னாங்க. அப்போ தான் நீ பிறந்திருந்த... கனகாவுக்குக் கல்யாணம் முடிஞ்ச புதுசு. மகனை விட மகள்களோட வாழ்க்கை எங்களுக்குப் பெருசா போயிருச்சு. ஏன்னா நாராயணன் கெட்டிக்காரன். அவன் எப்படியாவது அவனோட குடும்பத்தைப் பார்த்துக்குவான்னு எனக்கு நம்பிக்கை இருந்தது. ஆனா உன் அப்பா, சித்தப்பாவுக்கு உருப்படியா வேலை கிடையாது. கல்யாணம் பண்ணும் போது பார்த்துக்கிட்டு இருந்த வேலையையும் கல்யாணத்துக்குப் பிறகு வறட்டுக் கௌரவம் பார்த்துட்டு அதை ராஜினாமா செய்துட்டு எங்கூடத் தொழிலுக்கு வந்துட்டாங்க."

புகழேந்திக்கு விசயம் மெல்ல புரிய ஆரம்பித்தது. அதனால் அவன் அமைதி காத்தான்.

"நாராயணனை அப்போ ஒதுக்கி வச்சது தான். அதுக்குப் பிறகு நாங்க அவனை வீட்டுக்குள் சேர்த்துக்கலை. ஆனா அவனைப் பத்தின விசயத்தை ஒண்ணு விடாம தெரிஞ்சிக்கிட்டு வந்து உன் பாட்டி கிட்ட சொல்லிருவேன். அவளும் கேட்டுச் சந்தோசப்பட்டுக் கொள்வாள். இப்படிச் சந்தோசமா இருந்த சமயம் தான் ஒரு விபத்தில் நாராயணன் இறந்து போனான். அநாதரவாய் இருந்த மருமகள், பேரன், பேத்தியை எப்படித் தனியே தவிக்க விட முடியும்? அதுவும் நாராயணனின் பிரதிபலிப்போடு இருக்கும் அவனது பிள்ளைகளைத் தவிக்க விட என்னால் முடியுமா? உன் அப்பா, சித்தப்பாவிடம் பேசி அவங்களை இங்கே அழைத்து வந்தேன். அன்னையில் இருந்து இப்போ வரை மனசில் அத்தனை பாசம் இருந்த போதும் அவங்களுக்கு எந்தச் சலுகையும் அளிக்காது தள்ளியே வச்சிருக்கேன். ஆனால் என் கண்பார்வையில் வச்சிருக்கேன். இதுவே எனக்குத் திருப்தியா இருக்கு."

"அவங்க கிட்ட கொஞ்சம் அன்பை காட்டி இருக்கலாமே தாத்தா?"

"ஆரம்பத்தில் வீஞ்சிக்கிட்டு இருந்துட்டு இப்போ சட்டுன்னு இறங்கி போக மனசு வரலை. அதுவும் அந்தப் படுவா என்னையவே முறைக்கிறான்னா பார்த்துக்கோ. பொடுசு அவன் கிட்ட நான் இறங்கி போகணுமா?" சதாசிவம் மீசையை நீவி விட்டுக் கொண்டார். அவரது பாவனையில் புகழேந்திக்குச் சிரிப்பு வந்தது.

"கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டலை என்பது போல் இருக்கிறது நீங்க பேசுவது." என்று அவரைக் கிண்டலடித்தவன்,

"பேசியது போதும் தாத்தா... ரெஸ்ட் எடுங்க." என்றபடி அவன் எழ முயல... அவர் அவனது கரத்தை இறுக பற்றிக் கொண்டு,

"இனி தான் நான் பேசவே ஆரம்பிக்கப் போகிறேன். நீ உட்கார்." என்றார் கட்டளையிடும் தொனியில்... அவன் குழப்பத்துடன் அமர்ந்தான்.

"என் பேரன்கள், பேத்திக்களுக்குக் கல்யாணம் பண்ணி பார்க்கணும் புகழ்."

"தாத்தா, நான் ஒரு பொண்ணைக் காதலிக்கிறேன்..."

அவன் தயக்கத்துடன் இழுத்தான். ஏனெனில் தந்தை மீதிருக்கும் கோபத்தில் அவனுக்கு நந்தனாவை மணம் முடித்துக் கொடுக்கத் தாத்தா சம்மதிப்பாரா? என்று அவனுக்குப் பெருத்தத் தயக்கமாக இருந்தது.

"நீயுமா?" என்று அவனை முறைத்தவர்,

"உன் காதலை தூக்கி குப்பையில் போடு. நான் சொல்ற பொண்ணைத் தான் நீ கல்யாணம் பண்ணிக்கணும்." கறார் குரலில் பேசியவரை கண்டு அவன் திடுக்கிட்டுப் போனான். ஆனாலும் அவருக்கு மரியாதை கொடுத்து அமைதி காத்தான்.

"என் பேரன்ங்க உங்க ரெண்டு பேரையும் தொழிலில் கொண்டு வரணும்ன்னு நான் ஆசைப்பட்டேன். ஆனா நீங்க ரெண்டு பேரும் வேறு வேறு துறையைத் தேர்ந்து எடுத்துட்டீங்க. நிச்சயம் அதுக்காக நான் வருத்தப்படலை. ரொம்பப் பெருமைப்படறேன். அதனால் தான் என் ரெண்டு பேத்திங்களும் தொழிலை பார்த்துக்கணும்ன்னு அவங்க கிட்ட தொழில் நிர்வாகப் படிப்பை படிக்கச் சொன்னேன். ஆனா வசு படிப்பு முடிஞ்சும் இன்னும் விளையாட்டு பெண்ணாவே இருக்கிறாள். ஆனா நந்து பொறுப்பு உணர்ந்து பக்குவமா நடந்து கொள்கிறாள்."

நந்தனாவை பற்றித் தாத்தா சொன்னதும் அவனையும் அறியாது அவனது உதடுகளில் புன்னகை மலர்ந்தது.

"ஆண்பிள்ளைகள் நீங்க ரெண்டு பேரும் தான் அவங்களுக்குத் தொழிலில் பக்கபலமா இருந்து அவங்க வெற்றி பெற உதவணும்." அவர் கூறியதை கேட்டு அவன் புரியாது அவரைப் பார்த்தான்.

"நீ நந்துவை கல்யாணம் பண்ணிக்கணும். அது போல் மணி வசுவை கல்யாணம் பண்ணிக்கணும்." அவரது வார்த்தையில் அவனது முகம் பூவாய் மலர்ந்து போனது.

"என்ன சம்மதம் தானே புகழ்?"

"தாத்தா, நான் ஒரு பொண்ணைக் காதலிப்பதாய் சொன்னேனே..." என்று இழுத்தவனைக் கண்டு கோபமுற்ற தாத்தா,

"நான் சொல்ற பொண்ணைத் தான் நீ கல்யாணம் பண்ணிக்கணும்." என்றார் கறார் குரலில்...

"அது நம்ம நந்தனா தான் தாத்தா." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவருக்கு அப்படி ஒரு சந்தோசமாக இருந்தது.

"புகழு..." என்றபடி அவர் அவனை ஆரத்தழுவி கொண்டார்.

"என் ஆசையை நிறைவேற்றி வச்சிட்ட புகழ். அதே போல் வசுவையும் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வச்சிரு."

"நான் சொன்னதை அப்படியே அவள் கிட்ட சொல்லி பாருங்க. அவள் சம்மதிப்பாள். அவள் கொஞ்சம் பிடிவாதக்கார குழந்தை. மிரட்டி தான் பணிய வைக்கணும்." என்றவன் தான் நினைத்தை அவரிடம் கூறினான். அதைக் கேட்டுச் சதாசிவம் நிம்மதியுடன் புன்னகைத்தார்.

"இப்போ தான் நிம்மதியா இருக்குப் புகழ். எனக்கு அப்புறம் இந்தக் குடும்பத்தை யார் கட்டி காப்பாத்த போறாங்கன்னு கவலையா இருந்தேன். இனி எனக்குக் கவலை இல்லை." என்றார் அவர் நிம்மதியாக.

"எல்லாம் நான் பார்த்துக்கிறேன் தாத்தா. நீங்க நிம்மதியா ரெஸ்ட் எடுங்க." என்றவன் அங்கிருந்து கிளம்பி சென்றான்.

அவனது மனதில் நந்தனாவை பற்றிய நினைப்பை விட வரதராஜன் துறைமுகப் பகுதியை சேர்ந்தவன் என்று தாத்தா கூறிய வார்த்தைகளே வலம் வந்து கொண்டிருந்தது. அந்தக் கணம் வரதராஜனை பற்றி ஆதி முதல் அந்தம் வரை விசாரிக்க அவன் முடிவு செய்தான். இது சிறு சந்தேகம் தான், முழு ஆதாரம் இல்லை!

சதாசிவத்தை ஒரு வார காலம் மருத்துவமனையில் ஓய்வு எடுக்கக் கூறிவிட்டார்கள். அவரை யார் பார்த்துக் கொள்வது என்பதில் சிக்கல் ஏற்பட்டது. அவரது மகள்கள் இருவரும் புகுந்த வீட்டில் ஏதோ பிரச்சனை இருப்பதாய் பேர் செய்து கொண்டு மாமியார் வீட்டிற்குச் சென்றுவிட்டனர். அந்தக் கணம் புகழேந்திக்கு தனது தாயின் மீது அப்படியொரு வெறுப்பு எழுந்தது. திமிர் பிடித்தவள் என்று பெயர் எடுத்த வசுமதிக்கு கூடத் தாயின் போக்கு சற்றும் பிடிக்கவில்லை. ஆனாலும் அவளாலும் மருத்துவமனைக்குச் சென்று தேவுடு காக்க முடியாது.

இறுதியில் நந்தனா தாத்தாவை பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். அவளுக்கு இப்போது விடுமுறை என்பதால் இன்னும் வசதியாய் போயிற்று.

நந்தனாவின் பொறுப்புணர்வை கண்டு புகழேந்திக்குப் பெருமையாக இருந்தது. அவன் மனதில் அவள் இமயம் போல் உயர்ந்து நின்றாள். அவனின் காதலின் அளவு அதிகரித்துக் கொண்டே சென்றது.

தங்கத்தைத் தேவகி பார்த்துக் கொண்டார். கணவனுக்காக மருமகளின் பணிவிடையை ஏற்றுக் கொண்டார் தங்கம்.

******

வரதராஜன் தனது வீட்டில் தனிமையில் ஜலசமாதியில் ஈடுபட்டு இருந்தார். அதாங்க, மூச்சு முட்ட மது குடித்துவிட்டு ஒருவித மோனநிலையில் கண்மூடி அமர்ந்திருப்பது. அப்போது அவரைக் காண அவரது நண்பர் அகத்தியன் அங்கு வந்தார். தமிழ்நாட்டில் விரல் விட்டு எண்ண கூடிய பணக்காரர்களில் இவரும் ஒருவர். இவர் இறங்காத தொழில்கள் இல்லை. இவருக்குப் பல வருடங்கள் கழித்துப் பிறந்த ஒரே செல்ல மகள் தான் ஸ்மிதா. அவள் எது கேட்டாலும் உடனே செய்து முடித்துவிடுவார். அந்தளவிற்கு அவருக்கு மகள் மீது கண்மூடித்தனமான பாசம்.

"வரது, நானே டென்சனில் இருக்கேன். நீ என்னடான்னா தண்ணி அடிச்சிக்கிட்டு இருக்க?" டென்சனோடு கூறியபடி அங்கு வந்து அமர்ந்தார் அகத்தியன்.

"இப்போ எதுக்கு டென்சன் அகத்தியா?" என்று நிதானத்துடன் கேட்ட வரதராஜன் மதுவை கோப்பையில் ஊற்றி நண்பனிடம் கொடுத்தார். அதை வாங்கி ஒரே மூச்சில் வாயில் சரித்துத் தனது டென்சனை விரட்டியடிக்க முயன்றார் அகத்தியன். ம்ஹூம், அது போவேனா? என்று அடம்பிடித்தது.

"புகழேந்தி ஹார்பர் வரை வந்துட்டான்." அகத்தியன் ஆரம்பிக்க...

"வந்து..." வரதராஜன் தெனாவெட்டாய் நண்பனை பார்த்தார்.

"கப்பல் உள்ளே கூடப் போய்ப் பார்த்துட்டு போயிட்டானாம்."

"பார்த்தால் மட்டும் அவனால் எதுவும் கண்டுபிடிக்க முடிந்ததா?" வரதராஜன் அலட்சியமாகக் கேட்க...

"வரது..." அகத்தியன் திகைப்பாய் பார்த்தார்.

"எத்தனை நாட்டு போலீஸை ஏமாத்திட்டு சரக்கு நம்ம கைக்கு வருது அகத்தியா. அவ்வளவு லேசில் நம்ம நாட்டுப் போலீஸ் மோப்பம் பிடிக்க நான் விட்டிருவேனா? அவனால் மட்டுமல்ல, அவனைப் படைச்ச ஆண்டவனால் கூட இதைக் கண்டுபிடிக்க முடியாது."

"செக்யூரிட்டி டைட்டா இருந்தால் சரி தான். இருந்தாலும் ஏதாவது ஒரு விசயத்தில் நாம் மாட்டிக்கிட்டோம்ன்னா?"

"மாட்ட மாட்டோம்... அப்படி மாட்டிக்கிட்டால் எப்படி வெளியில் வர்றதுன்னு எனக்குத் தெரியும்." கொஞ்சமும் அலட்டி கொள்ளாது கூறிய வரதராஜனை கண்டு அகத்தியனுக்கு வியப்பாக இருந்தது.

"எதுக்கு இவ்வளவு ரிஸ்க் எடுக்கணும்? பேசாம அவனைப் போட்டு தள்ளிரலாமா? ரொம்பத்தான் முறுக்கிக்கிறான்."

"யோவ், பார்த்து பேசுய்யா. நீ சொன்னது மட்டும் என் மகள் காதில் விழுந்தது... உன்னை இந்த இடத்திலேயே வெட்டி பொலி போட்டுருவா."

"என்ன சொல்ற வரது?"

"ஆமா அகத்தியா, ஏசிபி புகழேந்தி என்னுடைய வருங்கால மாப்பிள்ளை. என் மகள் வந்தனா அவனைக் காதலிக்கிறாள். இவங்க கல்யாணம் மட்டும் முடியட்டும். அவனை நம்ம வழிக்கு நான் கொண்டு வந்திருவேன். இல்லையில்லை, என் மகள் கொண்டு வந்திருவாள்." என்று கோணலாய் சிரித்தார் வரதராஜன்.

"அப்படின்னா சந்தோசம்." அகத்தியன் கூறும் போதே அவரது அலைப்பேசி அழைத்தது. அவரது மனைவி தான் அவரை அழைத்திருந்தாள்.

"என்ன விசயம்?"

"ஸிமி அழுதுகிட்டு இருக்கா..."

"எதுக்கு? ஃபோனை அவள் கிட்ட கொடு." மகள் கைக்கு அலைப்பேசி சென்றதும் அகத்தியன் பதற்றத்துடன்,

"பேபி, என்னாச்சும்மா?" என்று கேட்க...

"இன்னைக்கு எல்லா ஸ்கூலுக்கும் சேர்த்து ரன்னிங் காம்ப்பட்டிசன் வச்சாங்களா..." என்று அவள் ராகம் இழுக்க...

"ஆமா அதுக்கு என்ன பேபி?"

"அதில் நானும் கலந்துகிட்டேன். ஆனா நான் வின் பண்ணலை டாடி. தோத்து போயிட்டேன்." என்று கூறிக் கொண்டே ஸ்மிதா அழ... இங்கு அவருக்கு நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. ஸ்மிதா அவரது செல்ல மகள் அல்லவா!

"இதுக்கு எல்லாம் நீ அழக்கூடாது பேபி." என்று மகளைத் தேற்றியவர்,

"இந்த முறை யார் வின் பண்ணினாங்க?" என்று கேட்க...

"வழக்கம் போல் சாந்தி தான்." அவள் கூறியதும் பல்லை கடித்துக் கொண்டு அவர் அலைப்பேசியை அணைத்து விட்டார். இது அறியாது ஸ்மிதா மறுபக்கம் பேசி கொண்டே இருந்தாள்.

"டாடி, நான் மணியண்ணா ஸ்கூலில் போய்ச் சேரவா? வருண் ப்ரோ நல்லா டிரையினிங் தர மாட்டேங்கிறார்."

தந்தையிடம் இருந்து சத்தம் வராது போகவும் ஸ்மிதா அலைப்பேசியைக் காதில் இருந்து எடுத்து பார்த்தாள். அவர் அழைப்பை துண்டித்து இருப்பதைக் கண்டு அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது.

"பேட் டாடி." அவள் கோபத்துடன் அலைப்பேசியைத் தூக்கி போட்டாள்.

"பேபி, வருண் அப்பாவோட பிரெண்ட்டோட பையன். இனி வருணை பத்தி அப்பா கிட்ட தவறா சொல்ல கூடாது. என்ன சரியா?" அன்னை எடுத்து கூறினாள். சின்னவள் எரிச்சலுடன் சரியென்று தலையசைத்தாள்.

"என் பேபிக்கு போட்டியா இருப்பதே இவளுக்கு வேலையா போச்சு." நண்பனிடம் காய்ந்தார் அகத்தியன்.

"யாருய்யா அது?" வரதராஜன் கேட்க...

அகத்தியன் சாந்தி பற்றின விவரத்தை கூறி, "எனக்கு வர்ற கோபத்துக்குப் பேசாம அந்தப் பொண்ணைப் போட்டு தள்ளிரலாமான்னு இருக்கு." என்று அகத்தியன் கோபத்தில் படபடத்தார்.

"அடேய், லூசாடா நீ? யாரை பார்த்தாலும் போட்டு தள்ளுறதுலேயே குறியா இருக்க. எதையும் ஆற அமர யோசிக்க மாட்டியா? விளையாட்டு துறையே நம்ம கையில் தான் இருக்கு. நீ எதுக்கு வீணா கவலைப்படுற?" வரதராஜன் நண்பனை தேற்றினார்.

அதில் அகத்தியன் சற்று முகம் தெளிந்தார்!!!

ஒரு வாரம் கழித்துச் சதாசிவம் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டார். நேரே அவர் தனது மனைவியைப் போய்ச் சந்தித்தார். தங்கம் அவரைக் கண்டு கண்ணீர் வடித்தார்.

"ஏய் கிழவி, அவ்வளவு சீக்கிரம் உன்னை விட்டு போயிருவேனா என்ன? இன்னும் நூறு வருசம் உயிரோட இருந்து உன் உயிரை எடுத்துட்டு தான் போவேன்." சதாசிவம் அழும் மனைவியைக் கண்டு கிண்டலடித்தார்.

"அய்ய, போதுமே உங்க கிண்டல்..." தங்கம் அழுகையை மறந்து புன்னகைத்தார்.

இருவரின் அந்நியோன்யத்தைப் பார்த்துக் கொண்டிருந்த புகழேந்தி அவனையும் அறியாது நந்தனாவை திரும்பி பார்த்தான். அவள் அவனைப் பார்க்காது தாத்தா, பாட்டியை பார்த்து கொண்டிருந்தாள். 'நானும், நந்துவும் இது போல் அந்நியோன்யமாய், சந்தோசமாய் வாழுவோமா?' அவனுள் கேள்வி முளைத்தது. விடை அவனவளிடமே! அவனது விழிகள் அவளை ஏக்கத்துடன் தழுவியது.

மனைவியிடம் நலம் விசாரித்த சதாசிவம் எல்லோர் புறமும் திரும்பினார்.

"உங்க எல்லோர் கிட்டேயும் நான் ஒரு முக்கியமான விசயம் பேசணும்."

அவர் கூறியதும் எல்லோரும் காரணம் தெரியாது ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து கொண்டனர். புகழேந்தி மட்டும் விசயம் தெரிந்தபடியால் அமைதியாக இருந்தான்.

"என் பேரப்பிள்ளைங்களுக்குக் கல்யாணம் பண்ணி பார்க்கலாம்ன்னு இருக்கேன்."

அதைக் கேட்டு எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. புகழேந்தியை தவிர மற்ற மூன்று இளையவர்களின் முகமும் சரியில்லை. மணிமாறனுக்குத் திருமணம் பற்றிய பேச்சு, அதுவும் தாத்தா பேசியது

சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. வசுமதியோ தனது காதல் என்னாகுமோ? என்று திகிலுடன் தாத்தாவை பார்த்திருந்தாள்.

நந்தனாவோ மனதில் புதிதாய் முளைத்த உணர்வை என்னவென்று அறியாது குழம்பி கொண்டிருந்தாள். இந்த நேரத்தில் இந்தத் திருமணப் பேச்சு அவசியம் தானா? என்று அவளுக்குக் குழப்பமாக இருந்தது. தன்னைக் கிண்டலடிக்கும் ஒருவன், தன் நிறத்தை வெறுக்கும் ஒருவன் எப்படி அவள் மனதில் தடம் பதித்தான்? என்று அவள் பதில் தெரியாது திணறி கொண்டிருந்தாள்.

அன்று புகழேந்தி அவளிடம் அக்கறையோடு தோசையை உண்ண சொன்னானே, அப்போதா? இல்லை இந்த ஒரு வார காலமாக அவளை அக்கறையுடன் மருத்துவமனைக்கும், வீட்டிற்கும் அழைத்து வருவது, போவது, அவள் நேரத்திற்கு உண்டாளா? என்று கவனம் எடுத்துப் பார்ப்பது, இரவில் அவள் சிறிது களைப்பாக இருந்தாலும் அவளை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு அவன் தாத்தாவை பார்த்துக் கொள்வது, இப்படி ஒவ்வொரு செயலிலும் அவன் மனதால் நெருங்கி வந்தானே, அதனாலா? ஏதோ ஒன்று அவள் மனதினை புகழேந்தி புறம் செலுத்தியது. அவளது நெஞ்சில் புகழேந்தி நீக்கமற நிறைந்திருந்தான்.

"ரொம்பச் சந்தோசம்ப்பா..." மூத்தவள் மஞ்சுளா தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். அதை அப்படியே கனகாவும் ஆமோதித்தார்.

"புகழேந்திக்கு நம்ம நந்துவையும், மணிக்கு வசுவையும் திருமணம் முடித்துக் கொடுக்கலாம்ன்னு இருக்கேன்."

சதாசிவம் கூறியதும் அங்கே ஊசி விழுந்தால் சத்தம் கேட்கும் அளவிற்கு அமைதி நிலவியது. இந்தப் பேச்சு யாருக்குமே பிடிக்கவில்லை என்பது புகழேந்தி, வசுமதி பெற்றோர்களின் முகத்திலயே தெரிந்தது. தேவகி மாமனார் பேச்சை எதிர்த்து பேசாது அமைதி காத்தார். தங்கம் மிகுந்த மகிழ்ச்சி கொண்டார்.

புகழேந்தி மகிழ்ச்சியுடன் தாத்தாவை பார்க்க... நந்தனாவுக்கு மனதில் இருந்த குழப்பத்தை மீறி சிறு நிம்மதி எழுந்தது. மணிமாறன், வசுமதி இருவரும் தாத்தாவை அதிர்வுடன் பார்த்தனர். ஆனால் அவரை எதிர்த்து பேச முடியவில்லை. ஏனெனில் இப்போது தான் அவர் உடம்பு தேறி வீட்டிற்கு வந்திருக்கிறார். இப்போது தாங்கள் ஏதாவது எதிர்த்து பேசி அவருக்கு ஏதாவது ஒன்றாகிவிட்டால்? அதனாலேயே இருவரும் குமுறும் மனதுடன் அமைதி காத்தனர்.

"ஒண்ணும் இல்லாதவளை என் வீட்டு மருமகளாக்கிக்க முடியாதுப்பா." மஞ்சுளா ஆரம்பித்து வைத்தார்.

"ஆமாம்ப்பா, என் பொண்ணு வாக்கப்பட்டுப் போற இடம் கோடீஸ்வர குடும்பமா இருக்கணும். கோட்டு போட்ட மாப்பிள்ளைக்குத் தான் என் மகளைக் கொடுப்பேன். இவனை மாதிரி ஒரு ஓட்டக்காரனுக்கு என் மகளைக் கொடுக்க முடியாது." என்று கனகா நிர்தாட்சண்யமாய் மறுத்தார்.

அதைக் கேட்டு நந்தனாவின் முகம் சுருங்கி போனது. புகழேந்தி அவளைத் தான் கவனித்துக் கொண்டே இருந்தான். அவளை அணைத்துச் சமாதானப்படுத்த சொல்லி அவனது கரங்கள் பரபரத்தது. ஆனால் சூழ்நிலை கருதி அவன் அமைதியாக நின்றிருந்தான். மணிமாறன் அடக்கப்பட்ட கோபத்துடன் தனது அன்னையைப் பார்த்தான். தேவகியோ விழிகளால் மகனிடம் கெஞ்சினார். வசுமதி சந்தோசத்துடன் அன்னையைப் பார்த்தாள்.

"யாரு, ஒண்ணும் இல்லாதவங்க மஞ்சு?" பெரிய மகளைப் பார்த்து கேட்ட சதாசிவம், சின்ன மகளிடம் திரும்பி,

"என் பேரனை பார்த்தால் உனக்குக் கோடீஸ்வரனா தெரியலையா?" என்று சினம் துளிர்க்க கேட்டார். தந்தையின் வார்த்தையில் மகள்கள் இருவரும் மென்று விழுங்கியபடி நின்றிருந்தனர்.

"என் சொத்துக்கள் முழுவதையும் மணிக்கும், நந்துவுக்கும் எழுதி வைத்துவிட்டேன். இப்போது என் பேரனும், பேத்தியும் கோடீஸ்வரர்கள். இப்போ உங்க புள்ளைங்களை இவங்களுக்குக் கட்டி கொடுக்கச் சம்மதமா?"

"அதெப்படி? சொத்து இருந்தால் மட்டும் எல்லாம் சரியாகிருமா? அவங்க ரத்தத்தில் இவளோட ரத்தமும் கலந்து ஓடுது. இவள் என்ன சாதியோ? இனமோ? இவளோட பிள்ளைங்க எங்க வீட்டுக்கு தேவையில்லை." தேவகியை சுட்டிக்காட்டி மருமகன்கள் மருதப்பனும், மாணிக்கமும் ஒரே நேரத்தில் அவரை எதிர்த்தனர்.

"தேவகி சமைச்சு தான் நீங்க எல்லோரும் சாப்பிடுறீங்க. அப்போ எங்கே போனது உங்க சாதி, இனம் எல்லாம்? அவங்க தேவகிக்கு மட்டும் பிள்ளைங்க இல்லை. என் நாராயணனின் பிள்ளைங்க. என் பேரப்பசங்க. அவங்களுக்கு இல்லாத உரிமை, இங்கே யாருக்கும் கிடையாது. இதுக்கு விருப்பம் இல்லாதவங்க இப்போதே வீட்டை விட்டு கிளம்பலாம்." சதாசிவம் உறுதியுடன் முடித்துக் கொள்ள...

அதற்கு மேல் யாரும் வாயை திறக்கவில்லை. மணிமாறன், நந்தனா இருவரும் தாத்தாவை அதிசயமாய்ப் பார்த்தனர். தேவகியோ கண்களில் நீர் வழிய மாமனாரை பார்த்து கையெடுத்து கும்பிட்டார். வசுமதி தன் எதிர்ப்பை பதிவு செய்ய முடியாதபடி தாத்தாவின் உடல்நலம் தடுத்ததில் அவள் இயலாமையில் விளைந்த கோபத்துடன் விருட்டென்று அங்கிருந்து வெளியேறினாள். மற்றவர்களும் அங்கிருந்து செல்ல... புகழேந்தி மட்டும் தாத்தா, பாட்டி அருகில் வந்தான்.

"தேங்க்ஸ் தாத்தா." என்றபடி அவரை அணைத்துக் கொண்டான்.

"இனியும் தாமதிக்கக் கூடாது புகழ். சீக்கிரம் கல்யாணத்துக்கு நாள் பார்க்கணும். வீட்டோட எளிமையா கல்யாணத்தை வச்சுக்கலாம். ஏன்னா மணி, வசுவை நம்ப முடியாது. எந்த நேரம் அவங்க ரெண்டு பேரும்

கல்யாணத்தை எதிர்ப்பாங்கன்னு எனக்குத் தெரியலை. மணியாவது தேவகி சொன்னா கேட்டுப்பான். ஆனா வசு யாருக்கும் அடங்க மாட்டாள். அவளை வீட்டை விட்டு எங்கேயும் அனுப்ப வேண்டாம். அவளைச் சுத்தி பாதுகாப்பு போட்டிரு. அந்தக் கூத்தாடி வருணையும் நம்ப முடியாது." அவர் பேரனை எச்சரித்தார்.

"சரி தாத்தா... அப்படியே செஞ்சிரலாம்." என்று புகழேந்தி கூறினான்.

சதாசிவம் சொன்னது போல் தான் வசுமதி தனது அன்னையிடம் சத்தம் போட்டு கொண்டிருந்தாள். கனகாவோ என்ன செய்வது? என்று தெரியாது தலையில் கை வைத்தபடி அமர்ந்திருந்தார்.

"அவன் ஆளும், மூஞ்சியும்... அவனைப் பார்த்தாலே எனக்கு உமட்டிக்கிட்டு வருது. நான் எப்படிம்மா அந்தத் தடிமாடை கல்யாணம் பண்ணிக்க முடியும்? உங்கப்பாவுக்குக் கொஞ்சமும் மனசாட்சி இல்லையா?"

"நல்லா கேளு வசு... கிழவன் ரொம்பத்தான் ஆட்டம் போடுறான்." அவளது தந்தை மாணிக்கம் மகளுக்குத் தூபம் போட்டார்.

"இங்கே பாருங்க... நீங்க இப்படித் தூபம் போடுற வேலை எல்லாம் வச்சுக்காதீங்க. இப்பவே இந்தக் கல்யாணத்துக்கு விருப்பம் இல்லைன்னு சொல்லிட்டு நாம வீட்டை போயிரலாம். ஆனா அடுத்த வேளை புவ்வாவுக்கு என்ன பண்ணுவீங்க?" கனகா ஆத்திரத்துடன் கணவனைக் கடிய... அதற்கு மேல் மாணிக்கம் வாய் திறப்பார்? ம்ஹூம், இனி சாப்பிடுவதற்குக் கூட வாயை திறப்பாரா? என்பது சந்தேகம் தான்.

"நீங்க மட்டும் அவனை எனக்குக் கட்டி வச்சீங்க. கல்யாணத்து அன்னைக்கு நான் ஓடி போயிருவேன். அதுக்குப் பிறகு வீணே நீங்க தான் கேவலப்படணும்." என்று வசுமதி அன்னையைப் பயமுறுத்திவிட்டு சென்றாள்.

அதே போல் மணிமாறன் தனது தாயிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தான்.

"அம்மா, அவள் ஒரு ராட்சசிம்மா... அவளை எனக்குக் கல்யாணம் பண்ணி வச்சீங்கன்னா, டிவியில் காட்டுற மாதிரி நான் தூங்கும் போது என் தலையில் கல்லை தூக்கி போட்டு என்னைக் கொன்னுட்டு அவள் தன்னோட காதலனோடு ஓடி போயிருவாள்." அவன் சொல்லி முடிக்கும் முன் தேவகி அவனது கன்னத்தில் ஓங்கி அடித்திருந்தார்.

"என்ன வார்த்தை பேசுற மணி? அதுவும் நம்ம வீட்டுப் பொண்ணைப் பத்தி எப்படி இப்படிக் கீழ்த்தரமா பேச முடியுது உன்னால்? இதை நான் உன் கிட்டயிருந்து எதிர்பார்க்கலை மணி. நீ என்ன மறுத்தாலும் வசு தான் உன் மனைவி. தாத்தாவின் பேச்சை என்னால் மீறி முடியாது." தேவகி உறுதியாய் கூறிவிட... அவன் மனம் வெறுத்து போய் அங்கிருந்து சென்றுவிட்டான். நந்தனா அன்னையின் தோளில் ஆறுதலாய் கை வைத்தாள்.

அப்போது புகழேந்தி நந்தனாவை தேடி அங்கு வந்தான். அவனைக் கண்டதும் தேவகி மரியாதையாகக் கை கூப்பி, "வாங்க மாப்பிள்ளை..." என்று பணிவோடு வரவேற்றார்.

புகழேந்தி அவரது வரவேற்பை தலையசைத்து ஏற்றுக் கொண்டவன், "அத்தை, தாத்தாவுக்கு உடம்பு முடியாததால் நம்ம நந்து கொஞ்ச நாளைக்குக் கம்பெனியை போய்ப் பார்த்துக்கட்டும்." என்று கேட்டுக் கொள்ள...

"அதுக்கென்ன மாப்பிள்ளை, தாராளமா பார்த்துக்கிடட்டும்." என்றார் தேவகி.

"அம்மா... நான்... எப்படி...?" திணறினாள் நந்தனா. குருவி தலையில் பனங்காய் வைத்தது போல் பாரமாய் இருந்தது அவளுக்கு...

"நீ பிசினஸ் மேனேஜ்மென்ட் தானே படிச்சியிருக்க? பின்னே எதுக்குப் பயம்?" அவன் புருவத்தைக் கேள்வியாய் உயர்த்தினான்.

"இவ்வளவு பெரிய கம்பெனியை... நான்..." பயத்தில் எச்சிலை விழுங்கி கொண்டாள் நந்தனா.

"இதெல்லாம் உன்னுடையது நந்து. இனி நீ தான் இதைக் கட்டி காப்பாத்தணும். ப்ளீஸ், கிளம்பு நந்து..." என்றான் அவன் மென்மையான குரலில்...

"மாப்பிள்ளை தான் இவ்வளவு தூரம் எடுத்து சொல்றார்ல நந்து. போ, போய்க் கிளம்பி வா..." தேவகி மகளைக் கிளம்பச் சொல்லி அதட்டினார்.

பத்தே நிமிடத்தில் எளிமையான பருத்தி சேலையில் அழகு தேவதையாய் கிளம்பி வந்தவளை கண்டு புகழேந்தி இமைக்க மறந்தவனாய்ப் பார்த்திருந்தான்.

"போகலாமா?" நந்தனாவின் குரலில் சுயம் திரும்பியவன் அத்தையிடம் விடைபெற்று வெளியில் வந்தான்.

காரிலேறி அமரும் வரை புகழேந்தி நந்தனாவிடம் எதுவும் பேசவில்லை. சாலை போக்குவரத்தில் லாவகமாய்க் காரை ஓட்டியபடி புகழேந்தி அவளைத் திரும்பி பார்த்தான்.

"உனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமா?" அவன் திடுமென இப்படிக் கேட்டதும் அவள் தூக்கிவாரி போட அவனைத் திரும்பி பார்த்தாள்.

"ரிலாக்ஸ்..." என்று கூறி அவன் புன்னகைக்க...

"தாத்தா எது செஞ்சாலும் என் நல்லதுக்காகத் தான் இருக்கும்."

"ம், நல்ல பதில்..." அவளது பதிலை அவன் மெச்சி கொண்டான்.

தானும் அவனிடம் அதே கேள்வியைக் கேட்க வேண்டும் என்று நினைத்தவள் அதைக் கேட்க இயலாது அமைதியானாள்.

"உன் காலேஜ் ஃபங்கசனுக்குப் போயிருந்தேன். உனக்குத் தான் தாத்தாவுக்கு உடம்பு சரியில்லாததால் வர முடியாம

போச்சு. இல்லையா?"

"பரவாயில்லை..." என்று மெல்லிய குரலில் பதில் அளித்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"கல்யாணத்துக்கு ரொம்ப நாள் இல்லை நந்து. வசுவுக்கும் சேர்த்து நீ தான் எல்லாம் செய்யணும். எல்லா வேலைகளையும் நீ பார்த்துப்பியா நந்து?" என்று கேட்டவன் அவள் புறம் திரும்பி,

"எனக்காக..." அவளது விழிகளோடு தனது விழிகளை உறவாட விட்டபடி காதலோடு கேட்டான். அங்கு விழிகள் மட்டுமா உறவாடியது! இதயமும் சேர்ந்து அல்லவா தடம் மாறியது!

"ம், செய்றேன்." மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் அவள் அவன் சொன்னதை அப்படியே கேட்டு கொண்டாள்.

அவர்களது நிறுவனத்தின் முன் காரை நிறுத்திவிட்டு இறங்கிய இருவரும் இணைந்து உள்ளே சென்றனர். அலுவலகக் கட்டிடமே அவ்வளவு பெரியதாய் இருந்தது. அதைக் கண்டு நந்தனா பயந்தவளாய் புகழேந்தியின் அருகே வந்து அவனை ஒட்டி கொண்டு நடந்தாள். அவளது பயத்தை உணர்ந்தவனாய் அவன் அவளது கரத்தை பிடித்துக் கொண்டான். பயத்தில் இருந்தவள் அதைச் சிறிதும் உணரவில்லை!!!

அலுவலக அறைக்குள் நந்தனாவை அழைத்து வந்த புகழேந்தி அவளை அங்கிருந்த நாற்காலியில் அமர்த்திய பின், தாத்தாவின் செயலாளர் சந்திரனை அழைத்து,

"இது நந்தனா... நாராயணன் மாமாவோட பொண்ணு. இனி கம்பெனி முழுவதும் இவங்க பொறுப்பு. இவங்க கூடயிருந்து எல்லாம் சொல்லி கொடுங்க." என்று உத்தரவு போல் கூறினான். அவரும் பணிவுடன் சரியென்று கூறிவிட்டு வெளியேறினார்.

"அப்போ நான் கிளம்பவா?" என்றவனைக் கண்டு அவளது இதழ்கள் எதையோ கூற எண்ணி துடித்தது. அதை உணர்ந்தவனாய் அவன் அவள் முன்னிருந்த மேசை மீது சாய்ந்து நின்று கொண்டு இரு கைகளைக் கட்டியபடி அவளைப் பார்த்து,

"என்னம்மா? எதுன்னாலும் கேளு..." அவனது முகத்திலும், வார்த்தையிலும் தான் எத்தனை கனிவு!

"வந்து..." அவள் இழுக்க...

"வந்து...?" அவன் கூர்மையாக அவளைப் பார்த்தான். அவனது விழிகளைச் சிந்திக்க இயலாது அவள் தலை கவிழ்ந்தாள்.

"இந்தக் கல்யாணத்தில் உங்களுக்குச் சம்மதமா?" மெல்லிய குரலில் மெதுவே கேட்டவளை கண்டு அவன் வாய்க்குள் புன்னகைத்துக் கொண்டான்.

"இத்தனை சொத்துக்களோடு ஒரு பெண் வலிய வந்தால் வேண்டாம்ன்னு சொல்ல நான் என்ன முட்டாளா?" அவனது வார்த்தைகளில் அவள் திகைப்பாய் நிமிர்ந்து பார்த்தாள்.

"இப்போ எதற்கு இந்தத் தேவையில்லாத யோசனை? வேலையைப் பார்." என்றுவிட்டு அவன் அங்கிருந்து அகன்றான்.

அவள் அடிப்பட்ட வலியுடன் அவனைப் பார்த்திருந்தாள். தனது நிறத்தை எண்ணி அவளது மனம் சுணங்கி போனது. அதேசமயம் அவனது அழகினை கண்டு அவளது மனம் வெந்து போனது, தான் அவனுக்குச் சிறிதும் ஈடு இல்லையோ என்று... அவளது மனச்சுணக்கத்தை அவன் தன் மனக்கண்ணில் கண்டானோ என்னமோ? கதவருகே சென்றவன் நின்று அவள் புறம் திரும்பி,

"கடவுள் சாட்சியாய் நடக்கவிருக்கும் நம் கல்யாணத்துக்கு நான் உண்மையா இருப்பேன் நந்து." என்றவன் அவளது பதிலை எதிர்பாராது கதவை திறந்து கொண்டு வெளியேறினான்.

புகழேந்தி பதிலில் நந்தனாவின் முகம் சற்றுத் தெளிந்தது. அங்குப் புகழேந்தியோ கால்சராயில் கைவிட்டபடி உற்சாகமாய் நடந்து சென்று கொண்டிருந்தான். தங்களது திருமணம் முடிந்து முதலிரவின் போது தன்னவள் மடி சாய்ந்து அவள் மீதான தனது காதலை பற்றி விடிய விடிய பேச வேண்டும் என்று அவனது காதல் மனம் ஆசை கொண்டது.

******

வசுமதியால் வீட்டை விட்டு வெளியேற முடியவில்லை. எதையாவது கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியில் வந்தாலும் வெளிவாயிலில் காவலுக்கு இருக்கும் காவலர்கள் அவளைப் பிடித்துக் கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள். அவர்களது ஜிம் பாடிக்கு பயந்தே அவள் வீட்டை விட்டு செல்லவில்லை. இதை எல்லாம் அறிந்த புகழேந்தி தனக்குள் சிரித்துக் கொண்டான்.

வருணை நேரில் சந்தித்துப் பேச வேண்டும் என்று நினைத்த வசுமதிக்கு எல்லா வழிகளும் அடைப்பட்டுப் போனது. அதனால் வருணின் அலைப்பேசிக்கு அழைத்துப் பார்த்தாள். அவன் இவளது அழைப்பை எடுக்கும் வழியைக் காணவில்லை. அவனது 'வாட்ஸ்அப்பிற்கு' விசயத்தைத் தெளிவாகத் தட்டச்சுச் செய்து அனுப்பி வைத்தாள். ஒருநாள் முழுவதும் அவளைத் தவிக்க விட்டு விட்டு

மறுநாள் வருண் பதில் குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பி இருந்தான்.

"நான் உன்னைக் காதலிக்கலை. மணியை வெறுப்பேற்ற தான் நான் உன்னுடன் சுற்றினேன். எனக்குக் காதல், கல்யாணம் இந்தக் கமிண்ட்மென்ட் எல்லாம் ஒத்து வராது. நீ மணியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோசமாயிரு. உன்னோட லெவலுக்கு அவன் தான் சரிப்பட்டு வருவான். என்னோட லெவலே வேறு."

அவனது குறுஞ்செய்தியை படித்தவள் அவனது நம்பிக்கை துரோகத்தை நினைத்துத் திக்பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்திருந்தாள். அடுத்து என்ன செய்வது? என்று தெரியாத ஒரு அதிர்ந்த மனநிலையில் அவள் இருந்தாள். யாருடனும் பேச பிடிக்காது, உணவு உண்ண பிடிக்காது அவள் தனது அறையில் முடங்கிக் கிடந்தாள். அவ்வளவு விரக்தி மனநிலையிலும் அவள் உயிரை விட மிகவும் யோசித்தாள். அதற்கு அவளது கோழை மனம் காரணமா? இல்லை, அவள் உயிரை விடும் அளவிற்கு வருண் ஒன்றும் தகுதியானவன் இல்லை என்று நினைத்தாளோ என்னமோ!

அவளைப் போன்றே விட்டேற்றியான மனநிலையில் மணிமாறன் இருந்தான். திருமண விசயத்தை மறப்பதற்காக அவன் தனது பயிற்சி பள்ளியிலேயே முழு நேரமும் குடியிருக்க ஆரம்பித்தான். சாந்திக்கு வேறு தேசிய அளவில் நடக்கும் போட்டிக்கான தகுதி தேர்வு நெருங்கி கொண்டிருந்தது. அதற்குச் சாந்தியை தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் சேர்ப்பதற்கு அத்தனை தடைகள் ஏற்பட்டது. அதற்கு முழுக் காரணம் வருண் என்பது அவனுக்கு நன்கு தெரியும். வருண் தனது தந்தையின் பதவியைப் பயன்படுத்திச் சாந்தியின் திறமையைத் தடுக்கிறான் என்பது மணிமாறனுக்குப் புரிந்தது. அதனால் அவன் எப்போதும் போல் சாந்திக்கு தனியே பயிற்சி கொடுக்க ஆரம்பித்தான். சாந்தியும் முழுகவனத்துடன் அவன் கூறியதை கேட்டு நடந்தாள்.

இதையறிந்த வருண் சாந்தியை எப்படியாவது தேசியளவில் கலந்து கொள்ளாது செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டி கொண்டான். அதற்கு என்ன செய்வது? என்று அவன் மிகவும் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான்.

******

புகழேந்தி - நந்தனா, மணிமாறன் - வசுமதி திருமணம் வீட்டில் வைத்து மிகவும் எளிமையாக நடந்து முடிந்தது. தாத்தா, பாட்டி இருவரும் மனமார சிறியவர்களை வாழ்த்தினர். தேவகிக்குச் சந்தோசத்தில் விழிகள் கலங்கி போனது. புகழேந்தி எல்லையில்லா உவகையுடன் தனது மனைவியின் கரத்தை இறுக பற்றிக் கொண்டான். மணிமாறனோ வசுமதியை பார்க்காது வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றிருந்தான். வசுமதியோ இயலாமையுடன் மனதிற்குள் குமுறிக் கொண்டு நின்றிருந்தாள்.

காதலித்தது ஒருவனை, கரம் பிடித்தது வேறு ஒருவனை... உண்மையில் தான் யாரென்று தெரியாது, தன்னைத் தானே வெறுத்திருந்தாள் வசுமதி. அவளது மனநிலை அடிப்பட்ட குழந்தையின் மனநிலையை ஒத்திருந்தது. தெரியாது தவறு செய்துவிட்டு விழிக்கும் குழந்தை அவள். தாத்தா அவளுக்கு நல்லது தான் செய்திருக்கிறார் என்பதை இனிதான் அவள் உணர போகிறாள். இத்தனை வருத்தத்திலும் அவள் மணிமாறனின் கையால் தாலி வாங்கிக் கொண்டதே அதிசயம்! இது தான் உறவுகளுக்கு இடையிலான மகிமை போலும்!!!

மாலை மயங்கி இரவும் கவிழ்ந்தது. வசுமதி தனது அறையில் இருந்த மலர் அலங்காரத்தைக் கண்டு கோபத்துடன் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தாள். அவள் மணிமாறனின் வரவை கோபத்துடன் எதிர்பார்த்திருந்தாள். மணிமாறனோ அவளது அறைக்குச் செல்ல விருப்பம் இல்லாது தனது அறையில் முடங்கிக்

கொண்டான். அறிவுரை கூற வந்த அன்னையைக் கையுயர்த்தித் தடுத்தவன்,

"உங்க விருப்பப்படி நான் அவள் கழுத்தில் தாலி கட்டிவிட்டேன். நான் சாகும் வரை அவள் தான் என் மனைவி. அதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனா அவள் தனது உயரத்தில் இருந்து இறங்கி வரணும். இங்கே நம் வீட்டில் வந்து அவளை வாழ சொல்லுங்க. நானும் சந்தோசமா அவள் கூட வாழ்றேன். அதுவரை நான் இப்படித்தான் இருப்பேன்." என்று கறார் குரலில் கூறிவிட்டு அவன் அறை கதவை சாற்றிக் கொண்டான். தேவகி செய்வதறியாது நின்றிருந்தார்.

கட்டிலில் சென்று படுத்த மணிமாறனுக்குத் தூக்கம் வரவில்லை. தன் மனைவி வேறு ஒருவனைக் காதலித்தவள் என்றாலும் அவள் மீது அவனுக்குக் கோபம் வரவில்லை. ஒருவேளை வருணின் காதல் உண்மை இல்லை என்று அவன் நினைத்ததாலோ என்னமோ! வருணிடம் இருந்து வசுமதியை காப்பாற்றி விட்ட சந்தோசமே அவனிடத்தில் இருந்தது. திமிர் பிடித்த வசுமதியை அவனுக்குப் பிடிக்கவில்லை தான். ஆனாலும் தாலி கட்டிய மனைவியை அவனால் வெறுக்க முடியவில்லை. பிடிக்காத திருமணம் என்றாலும் அவள் அவனவள் அல்லவா!

"நீயா மனசு மாறி வந்தால் உன்னை ஏத்துக்கிறேன். ஆனா நானா உன்னை வந்து அழைக்க மாட்டேன்." அவன் தனக்குள் உறுதியுடன் கூறிக் கொண்டான்.

வசுமதி மணிமாறனுக்காகக் காத்திருந்து காத்திருந்து ஒரு கட்டத்தில் சோர்ந்து போனாள். அவனது புறக்கணிப்பு அவளை அனலாய் தகிக்கச் செய்தது.

"நீயா என்னைத் தேடி வந்தாலும் நீ எனக்குத் தேவையில்லை. போடா..." என்று தனக்குள் கூறி கொண்டவள் களைப்பில் அப்படியே படுத்து உறங்க ஆரம்பித்தாள்.

புகழேந்தி தனது அறையில் மனைவியின் வருகைக்காகக் காதலுடன் காத்திருந்தான். அவனை அதிக நேரம் காக்க வைக்காது நந்தனா அங்கு வந்து சேர்ந்தாள். அறைக்குள் அவள் நுழைந்ததும் அவன் பின்னாலிருந்து கதவின் தாழ்ப்பாளை போட... அந்தச் சத்தத்தில் அவள் திடுக்கிட்டுப் போய்ப் பின்னால் திரும்பினாள்.

"ஹேய் ரிலாக்ஸ்..." அவளது தோள்கள் இரண்டிலும் கை வைத்து அவளை அமைதிப்படுத்தியவன் அவளை அழைத்து வந்து கட்டிலில் அமர வைத்தான்.

"என்னைக் கண்டு எதுக்குப் பயப்படுற நந்து?" அவனது கனிவான குரலில் அவள் மெல்ல விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள்.

"நான் என்ன உன்னைக் கடித்துக் குதறவா போகிறேன்?" அவன் ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி உல்லாச குரலில் கேட்க...

அவள் தலையை வேகமாய் இடமும், வலமுமாய் மறுத்து ஆட்டினாள்.

"வாய் திறந்து பேச மாட்டியா?" புன்சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு அவள் பதில் பேச வாயை திறந்தால் அங்கு வார்த்தைகளுக்குப் பதில் வெறும் காற்று தானே வருகிறது. அவள் இயலாமையுடன் அவனைப் பார்த்தாள்.

"சரி நானே பேசறேன்." என்றவன் அவளது வலக்கையை எடுத்து தனது கரங்களுக்குள் பொத்தி வைத்துக் கொண்டான். அவனது தொடுகையில் அவள் உள்ளமும், உடலும் நடுங்க அவனை அச்சத்துடன் பார்த்திருந்தாள்.

அவன் மேலே ஏதோ பேச ஆரம்பிக்கும் போது அவனது அலைப்பேசி அழைத்தது. அவனது வேலை காலம் நேரம் பாராது பார்ப்பது என்பதால் அவன் உடனே அழைப்பை ஏற்றான். மறுபக்கம் கூறிய விசயத்தைக் கவனமாய்க் கேட்டவன்,

"எங்கே? எப்போ?" அவனது கேள்விக்கு மறுபக்கம் என்ன பதில் வந்ததோ?

"இதோ, நான் இப்பவே கிளம்பி வர்றேன்." என்றவன் அலைப்பேசியை அணைத்துவிட்டு அவசரமாக உடையை மாற்றினான்.

காலையில் தாலி கட்டிய புத்தம் புது மனைவி அவனைப் பார்த்திருப்பதைக் கூட அவன் உணரவில்லை. அவனது நினைவில் நின்றது எல்லாம் சற்று முன் கிடைத்த செய்தியே! அவன் துப்பாக்கியை எடுத்து இடுப்பில் சொருகும் போது நந்தனா பயத்தில் எழுந்துவிட்டாள். அவளின் அசைவை கண்டு தான் அவள் அங்கிருப்பதை அவன் உணர்ந்தான். அவள் அருகே வந்தவன்,

"சாரி நந்து, ஒரு கேஸ் விசயமா அவசரமா வெளியில் போக வேண்டியிருக்கு." என்று கூறிவிட்டு வேகமாய்க் கதவு பக்கம் சென்றவன் பின் திரும்பி வந்து,

"நம் காலம் நீண்டிருக்கு நந்து. எனக்காகக் காத்திருப்பாயா?" அவனது கேள்விக்கு அவளது தலை தானாக அசைந்து சம்மதம் சொன்னது. அவன் புன்னகையுடன் அவளது நெற்றியில் இதழ் பதித்து,

"குட் நைட் நந்து." என்றவன் அவளிடம் விடைபெற்று அறையை விட்டு வெளியில் வந்தான்.

கணவனின் ஒற்றை முத்தத்தில் அவளது அலைபாய்ந்த மனம் சட்டென்று அமைதியாகி போனது. இனிவரும் காலம் இனிதாக அமையும் என்கிற நிம்மதியோடு அவள் படுக்கையில் சாய்ந்து விழி மூடினாள்.

ஜீப்பில் சென்று கொண்டிருந்த புகழேந்தி செவிகளில் சற்று முன் பரசு கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலித்தது.

"சார், நீங்க சொன்ன மாதிரி போதை பொருள்கள் கடத்துறாங்க சார்."

அவன் சிறிது நாட்களுக்கு முன்பு பரசுவிடம் கூறி துறைமுகத்தில் நடக்கும் விசயங்களைக் கண்காணிக்கக் கூறியிருந்தான். ஏதாவது வித்தியாசமாகத் தென்பட்டால் உடனே தன்னைத் தொடர்பு கொள்ளுமாறு சொல்லிருந்தான். அதே மாதிரி பரசு அவனுக்கு அழைத்து விசயத்தைக் கூறிவிட்டான்.

பரசு சொன்ன இடத்திற்குப் புகழேந்தி செல்லும் போதே அவன் கட்டுப்பாட்டு அறைக்கு அழைத்துத் தகவல் அளித்துவிட்டே சென்றான். அவன் அங்குப் போய்ச் சேரவும், மற்ற காவலர்கள் அங்கு வரவும் சரியாக இருந்தது. அவர்களைக் கண்டதும் பரசு ஓடி வந்தான்.

"பின்னால் தான் இருக்குது சார்." என்றவன் அவர்களை அங்கு அழைத்துச் சென்றான்.

அருகே செல்ல செல்ல மனித கழிவுகளின் நாற்றம் குடலை புரட்டியது. மூக்கை மூடி கொண்டே அனைவரும் அங்குச் சென்றனர். அங்கு அவர்கள் கண்ட காட்சியில் திகைத்து போய் நின்றுவிட்டனர்!

கப்பலில் இருந்து மனித கழிவுகளை அப்புறப்படுத்திக் கொண்டு வந்து கொட்டும் இடம் அது. அதனால் அங்கு அப்படியொரு நாற்றம் அடித்தது. அதை விடக் கொடுமை என்னவென்றால் மனித கழிவுகளில் மனிதர்கள் நின்று கொண்டு எதையோ தேடி கொண்டிருந்தது தான். பணத்திற்காக, வயிற்று பிழைப்பிற்காக என்றாலும் அந்தக் காட்சி புகழேந்தியின் மனதினை போட்டுப் பிசைந்தது.

"பரசு, இங்கே எதுக்குக் கூட்டிட்டு வந்த?"

"சார், போதை பொருள் இங்கே தான் இருக்கு." அவன் இரகசியமாய்க் குரலை தாழ்த்தி கொண்டு சொன்னான்.

"இங்கேயா? எங்கே?" புகழேந்தி சுற்றும் முற்றும் பார்த்தபடி கேட்டான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை போதை பொருள் அங்கு இருப்பதற்கான அறிகுறி காணப்படவில்லை.

"அதோ அங்கே பாருங்க சார்." சற்று தள்ளி குவிக்கப்பட்டு இருந்த பாலித்தீன் பைகளை அவன் காட்டினான்.

"அது ஏதோ குப்பை போல் இருக்கே பரசு."

"அது குப்பை இல்லை சார். அது உள்ளே இருப்பது அத்தனையும் போதை பொருள்கள்."

"என்னது?" புகழேந்தி திகைத்துப் போனான்.

இப்போது அவனுக்கு விசயம் புரிந்து போனது. மனித கழிவின் ஊடே போதை பொருட்களைப் பாலித்தீன் பைகளில் முடிந்து போட்டிருக்கிறார்கள். அதை அகற்றும் போது போதை பொருட்களும் சேர்ந்து வெளியில் வந்துவிடும். கழிவு பொருளை யாரும் ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள். அதனால் தான் இதை இத்தனை தைரியமாகச் செய்திருக்கிறார்கள். நிச்சயம், இதற்குக் கப்பலின் தலைமை அதிகாரி உடந்தையாக இருக்க வேண்டும். இந்தப் போதை கடத்தலில் சர்வேதச குற்றவாளிகள்

சம்பந்தப்பட்டு இருக்கலாம் என்று புகழேந்தி அவனாய் ஊகித்துக் கொண்டான்.

'என்னவொரு மாஸ்டர் ப்ளான்!' அவன் மனதிற்குள் கடத்தல்காரர்களின் புத்திசாலித்தனத்தை எண்ணி மெச்சி கொண்டான்.

"சார், எப்பவும் கப்பலின் செப்டிக் டாங்க்கை மெசின் போட்டு தான் க்ளீன் பண்ணுவாங்க. இன்னைக்கு மிசின் ரிப்பேரானதால் எங்களைக் கிளீன் பண்ண சொன்னாங்க. நானும் சரின்னு வந்தேன். ஆனா இங்கே வந்து பார்த்தால்...?" பரசுவின் குரல் நடுங்கியது.

"அவங்க பேசிக்கிட்டதை வச்சு பார்க்கும் போது இதில் இருப்பது எல்லாம் விலை அதிகமான போதை பொருள்கள் தான்."

அடுத்து கண நேரம் கூடத் தாமதிக்காது புகழேந்தி களத்தில் இறங்கி அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களைக் கைது செய்தான். அப்போது அவன் கண்ணில் பட்டது அந்த நிறுவனத்தின் பெயர், 'VVV'... ஒருவேளை வரதராஜன், வருண், வந்தனாவாக இருக்குமோ? அவனது மனதில் சந்தேகம் எழுந்தது. ஆனால் வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை. கைது செய்தவர்களை விசாரித்தால் அது யாரென்று தெரிய வரும்.

******

வந்தனா வீட்டில் இருந்த பொருட்களை எல்லாம் போட்டு உடைத்து கொண்டிருந்தாள். புகழேந்தியின் திருமணச் செய்தி கேட்டதில் இருந்து அவள் அவளாக இல்லை. ஆத்திரத்தில் அறிவிழந்து ஆங்காரியாக நடந்து கொண்டாள். அவளை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. உடனே விசயம் வரதராஜனுக்கும், வருணுக்கும் தெரிவிக்கப்பட்டது. வரதராஜன் வரும் வழியில் அகத்தியனின் மனைவி சந்தியாவிற்கு அழைத்து

விசயத்தைக் கூறினார். ஏனெனில் தாயில்லாத வந்தனா சந்தியாவிற்கு மட்டுமே சற்று அடங்குவாள்.

வரதராஜன், வருண் இருவரும் வீட்டிற்குள் நுழைந்த போது அது போர்க்களம் போல் காட்சியளித்தது. வருணுக்கு வந்த கோபத்தில் தங்கையின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

"எதுக்கு இப்படி ஓவர் ஆக்ட் பண்ற? உலகத்தில் அவன் மட்டும் தான் ஆம்பிளையா?" என்று அவன் கோபமாய்க் கத்தினான்.

"எனக்கு அவன் தான் வேணும்." அவள் பதிலுக்குக் கத்தினாள்.

"அவனை விடப் பல மடங்கு அந்தஸ்தில் உயர்வானவங்களை உனக்கு மாப்பிள்ளையா வரவழைச்சு காட்டுறேன். இவனைத் தூக்கி தூர எறி."

"நீ கூடப் புகழுக்கு கல்யாணம்ங்கிறதை என் கிட்ட இருந்து மறச்சிட்டல்ல."

"இங்கே பார் வந்தனா, நம்ம அந்தஸ்த்துக்கு அவங்க கூடப் பழகலாம். அதை மீறி உறவு வச்சுக்கக் கூடாது. பழகிட்டு கழட்டி விட்டுட்டு போயிக்கிட்டே இருக்கணும். அவன் தங்கை கூடத் தான் என்னைக் காதலிக்கிறதா புலம்பினாள். ஆனா நான் சிக்கலையே. நம்ம அந்தஸ்துக்குச் சென்ட்ரல் மினிஸ்டர் பொண்ணுங்க, பிசினஸ்மேன் பொண்ணுங்க தான் செட்டாவாங்க. இது எனக்கு மட்டுமல்ல... உனக்கும் சேர்த்து தான். என்ன புரிஞ்சதா?" வருண் அண்ணனாய் கண்டிப்புடன் கூறினான். ஆனாலும் அவளுக்கு மனது கேட்கவில்லை.

"அவன் என்னை அவமானப்படுத்தி விட்டான் வருண். அவனைக் கல்யாணம் பண்ணி அவனைப் பழிவாங்கணும்ன்னு நினைச்சேன். அது முடியாம போயிருச்சு." அவள் கோபமும், ஆதங்கமுமாய்ப் புலம்பினாள்.

"இவ்வளவு தானா? நான் என்னமோ நீ அவன் மேல் வச்ச காதலுக்காகக் கஷ்டப்படுறியோன்னு நினைச்சேன்." வருண் நிம்மதியுடன் சிரித்தான். வரதராஜனுக்கும் சற்று நிம்மதி வந்தது.

"உனக்கு அவனைப் பழிவாங்கணும் அவ்வளவு தானே. அதை நான் பார்த்துக்கிறேன். நீ போய் ரெஸ்ட் எடு." வருண் கூறும் போதே அகத்தியன் தனது மனைவியுடன் அங்கு வந்துவிட்டார்.

"ஆன்ட்டி, வதுவை கூட்டிட்டுப் போய்ச் சாப்பிட கொடுத்து தூங்க வைங்க." வருண் கூறியதும் சந்தியா வந்தனாவை அழைத்துச் செல்ல...

வந்தனா சிறு நிம்மதியுடன் அவரின் பின்னே சென்றாள். அவள் சூர்ப்பனகையின் மனநிலையில் இருந்தாள். அவள் பட்ட அவமானம் அவளை எந்த நிலைக்கும் இறங்க சொல்லியது. தன்னை அவமானப்படுத்திய புகழேந்தி எல்லோர் முன்பும் அவமானப்பட்டுத் தலைகுனிய வேண்டும். அதுவே அவளுக்குத் தேவையானதாக இருந்தது.

வரதராஜன் நிம்மதியுடன் சோபாவில் சாய்ந்தார். வருணும், அகத்தியனும் உடன் அமர்ந்தனர். அப்போது அகத்தியனின் அலைப்பேசி அழைத்தது. அதை எடுத்து பேசியவரின் முகம் செத்துப் போனது.

"என்ன அகத்தியா?"

"போதை பொருள் எல்லாம் போலீஸ் கிட்ட சிக்கியிருச்சாம். நம்ம ஆட்களையும் கைது பண்ணிட்டாங்களாம்."

"சரி, அதுக்கு ஏன்ய்யா நீ இப்படி அலர்ற? இன்ஸ்பெக்டர் யாருன்னு சொல்லு?" வரதராஜன் தனது அலைப்பேசியை எடுத்தபடி கேட்க...

"ஏசிபி புகழேந்தி..." அகத்தியன் கூறியது கேட்டு வரதராஜனின் கை தானாக அலைப்பேசியைக் கீழே வைத்தது.

"அந்த வெளங்காதவன் அங்கே எப்படி வந்தான்? இன்னைக்கு முதராத்திரி அதுவுமா பொண்டாட்டியை கொஞ்சாம ஏசிபி சாருக்கு அங்கன என்ன வேலை?" வரதராஜனுக்குக் கோபம் வந்தது.

அடுத்து என்ன செய்வது? என்று இருவரும் தலையைப் போட்டு பிய்த்து கொண்டனர். இதில் அவர்கள் இருவரும் மாட்டினால் அவ்வளவு தான்... காலத்திற்கும் வெளியில் வர முடியாது.

வருண் கண்மூடி தீவிர சிந்தனையில் ஈடுபட்டு இருந்தான். பின்பு முகம் மலர்ந்தவனாய் விழி திறந்தவன்,

"நீங்க கவலைப்படாதீங்க... இந்தப் பிரச்சினையை நான் பார்த்துக்கிறேன்." என்று அவன் கூற...

"நீயா?" இருவரும் ஒன்று போல் கூவினர்.

"ஆம், நானே தான். என்னுடைய பிரச்சனை, உங்க பிரச்சனை, வந்தனா பிரச்சனை மூன்றையும் ஒரே நேரத்தில் தீர்க்க போகிறேன்."

"எப்படி வருண்?" வரதராஜன் ஆர்வமாய்க் கேட்டார்.

"அது சஸ்பென்ஸ்..." என்று கண்சிமிட்டி சிரித்தவன்,

"நீங்க கவலைப்படாம போய்த் தூங்குங்க. உங்க கேசை டீல் பண்ண புகழ் டிபார்ட்மெண்ட்டில் இருக்க மாட்டான்." என்றபடி அவன் எழுந்தான். அதைக் கேட்டு நிம்மதியுடன் இருவரும் புன்னகைத்து கொண்டனர்.

"புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?" வரதராஜன் கர்வத்துடன் தனது மீசையை நீவி கொண்டார்.

புலியை பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்ட கதையைப் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை போலும்! பாவம், விதி வலியது!!!

******

புகழேந்தி தனது வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு வீட்டிற்கு வர அதிகாலை ஐந்து மணியானது. அவன் அறைக்கு வந்து பார்த்த போது நந்தனா ஆழ்ந்து உறங்கி கொண்டிருந்தாள். தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு வந்தவன் புன்னகையுடன் மனைவி அருகில் சென்று அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான். அவனது தொடுகையில் அவள் மெல்ல உறக்கம் கலைந்தாள். வெகு அருகில் கணவனது முகத்தைக் கண்டதும் அவளது தூக்கம் பறந்தோட, அவள் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்து அமர்ந்தாள்.

"ஹேய், எதுக்கு இப்படிப் பதட்டமா எழுந்திருக்கிற? மணி ஐஞ்சு தானாகுது. கொஞ்ச நேரம் தூங்கு." என்று அவன் கனிவுடன் கூறினான்.

"ஐயோ, மணி ஐஞ்சாச்சா? லேட்டா எழுந்தா தாத்தா திட்டுவார்." என்றவள் பயத்துடன் கட்டிலை விட்டு இறங்க போனாள்.

"இன்னைக்கு உன்னைய திட்ட மாட்டார். நிம்மதியா தூங்கு."

"ஏன்?" சிறு குழந்தை போன்று அறியாமையுடன் கேட்டவளை கண்டு அவனுள் தாய்மை சுரந்தது. அவளது முகத்தில் வழிந்த முடிக்கற்றைகளை எடுத்துக் காதோரம் சொருகி விட்டவன்,

"நீ இப்போ மிஸ். நந்தனா நாராயணன் இல்லை. மிஸஸ். நந்தனா புகழேந்தி... உன் பெயருக்குப் பின்னால் இருக்கும் புகழேந்திக்கு கொடுக்கும் மரியாதை இது." என்று விழிகளில் காதல் வழிய கூறியவனைக் கண்டு அவளது இதயம் ஒரு நொடி நின்று துடித்தது.

"தாத்தான்னு இல்லை, இனி யாரும் உன்னைத் திட்ட நான் அனுமதிக்க மாட்டேன்." என்றவனின் வார்த்தையில் அவள் அப்படியொரு நிம்மதியை உணர்ந்தாள்.

"ஏன்?" மெல்லிய குரலில் கேட்டவளை கண்டு அவன்,

"ஏன்னா, நீ என்னுடைய மனைவி." என்றான் அழுத்தமான குரலில்...

"நான் உங்களுக்குத் தகுதியானவள் தானா?" அவளது முகம் சுருங்கி போய்விட்டது.

"உனக்குத் தகுதியில்லைன்னா... இந்த உலகத்தில் எந்தப் பெண்ணுக்கும் எனக்கு மனைவியா வர தகுதி இல்லை."

அவனது வார்த்தைகளில் அவளது விழிகள் வியப்பில் சாசர் போன்று அகன்று விரிந்தது. மனைவியின் விழிகள் ஆழ்கடல் போன்று தன்னை மூழ்கடிப்பதை உணர்ந்த புகழேந்தி விரும்பியே அதில் மூழ்க துடித்தான்.

"நந்து, நான் சொல்வதை நம்புவியா?" அவள் ஆமென்பது போல் தலையாட்டினாள்.

"சின்ன வயசில் இருந்து உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஏனோ அந்த வயசில் உன்னைச் சீண்டி பார்ப்பது எனக்கு ஒரு விளையாட்டா இருக்கும். எனக்காக நீ விடுற கண்ணீர் கூட எனக்குப் பிடிக்கும். அதுக்குப் பிறகு வளர, வளர உன்னைச் சிரிக்க வச்சு பார்க்கணும்ன்னு நினைப்பேன். ஆனா நீ என்னை விட்டு விலகியே இருந்த. அப்புறம் நானும் என் படிப்பில் பிசியாகிட்டேன். வீட்டுக்கு வர்றது ரொம்பக் குறைந்து போனது. இரண்டு வருசத்துக்கு முன்னாடி ஒரு தடவை நான் இங்கு வந்தது உனக்கு ஞாபகம் இருக்கா? அப்போ தான் உன்னை வளர்ந்த பெண்ணா, பருவ மங்கையா பார்த்தேன். அந்தக் கணம் நான் மொத்தமா உன்னிடத்தில் வீழ்ந்து போனேன். அப்பவும் நீ என்னை விட்டு விலகி போன. நானும் வேலை அவசரத்தில் கிளம்பி போயிட்டேன். அங்கே போன பின்பும் உன் ஞாபகம் தான். அதுக்குப் பிறகு எனக்குச் சென்னைக்கு மாற்றல் கிடைத்தது. ரொம்பச் சந்தோசமா உன்னைப் பார்க்க வந்தேன். ஆனா நீ என்னைக் கண்டுக்கக் கூட இல்லை. என்னைப் பார்க்க வரவே இல்லை." அவனது குரல் மனத்தாங்கலுடன் ஒலித்தது.

கணவனது காதல் தந்த பிரமிப்பில் தன்னை மறந்து இருந்தவள் பின்பு அவனது மனத்தாங்கலை உணர்ந்தவளாய், "அது... அது பயத்தில் உங்க முன்னே வரலை. அப்படி இருந்தும் அன்னைக்கு நீங்க என்னைப் பார்த்து..." என்ன முயன்றும் அவளால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

புகழேந்தி நந்தனாவின் முகத்தை நிமிர்த்தி, "இங்கே பார் நந்து, நீ என்னைப் பார்க்க வராததால் வந்த கோபத்தில் வந்த வார்த்தைகள் அது. அதுக்குத் தனியே அர்த்தம் கிடையாது." என்று தவிப்புடன் கூற...

"அதுக்குன்னு..." அவள் அழுகையில் தேம்பினாள்.

"ச்சூ, அழ கூடாது..." என்று அவளை அணைத்து கொண்டவன் அவளது விழிகளை மென்மையாய் துடைத்து விட்டான்.

"உன்னுடைய புற அழகை விட, உன்னுடைய அக அழகு எனக்கு ரொம்பப் பிடிக்கும். எப்போதும் புன்னகைத்துக் கொண்டிருக்கும் உன் மதி முகம் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்."

"நான் மதியா?" அவள் ஆதங்கத்துடன் கேட்டாள்.

"என் வானத்து மதி நீ தான்." கணவன் கூறியதை கேட்டு அவளுக்குச் சற்று நிம்மதியானது.

அப்போது கடிகாரம் ஆறு முறை அடித்து ஓய்ந்தது. அதைக் கண்டவள் பதறி போனவளாய், "அச்சோ, ஆறு மணியாச்சே..." என்றபடி அவனது அணைப்பில் இருந்து விலக முயல...

"ச்சூ, எங்கே போற?" அவன் அவளை விட மறுத்தான்.

"பாட்டிக்கு காபி கொடுக்கணும். பசியோட காத்திருப்பாங்க."

பெரியவருக்காக அவன் தனது அணைப்பை தளர்த்தினான். அவள் நாணத்துடன் அவனை விட்டு விலகியவள்,

"நம்ம காலம் நீண்டு இருக்கு மாமா." என்று கூறிவிட்டு குளியறைக்குள் புகுந்து கொண்டாள். அவளது 'மாமா'

என்றழைப்பில் அவன் மகிழ்ச்சி அடைந்தவனாய் படுக்கையில் சாய்ந்தான்.

நந்தனா குளித்துவிட்டு மீண்டும் அறைக்குள் நுழைந்த போது புகழேந்தி ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றிருந்தான். அவன் அருகில் வந்தவள் அவனை ஆசைத்தீர பார்த்துவிட்டு அதன் பின்பே அறையை விட்டு வெளியில் சென்றாள்.

காலையில் எட்டரை மணிக்கு எல்லோரும் உணவு அருந்துவதற்காக உணவு மேசையில் அமர்ந்திருந்தனர். புகழேந்தி அலுவலகம் செல்ல வேண்டி காக்கி உடுப்புடன் வந்தமர்ந்தான். மணிமாறன் அன்னையின் சொல்லுக்காக அங்கு வந்தமர்ந்து இருந்தான். தாத்தாவிற்குப் பயந்து வசுமதி கணவன் அருகில் அமர்ந்தாள். அவள் அமர்ந்ததை உணர்ந்த மணிமாறன் கவனமாகத் தள்ளியமர்ந்தான்.

'கருவாயனுக்குக் கொழுப்பை பாரு... உன்னைத் தொட்டா உன் கருப்பு தான்டா என் மேல் ஒட்டிக்கும்.' என்று அவனை வசைபாடியபடி தட்டில் பூரியை எடுத்து வைத்தாள்.

"பூரி தின்னு தின்னு தான் பூரி மாதிரி உப்பிப் போய் இருக்கியோ?" மணிமாறன் அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவளைக் கிண்டலடித்தான்.

அவள் அப்படி ஒன்றும் குண்டு கிடையாது. அவள் சற்று பூசினார் போன்ற தேகம் உடையவள். அது கூட அவளுக்குத் தனியழகை கொடுத்தது. அது மணிமாறனுக்குத் தெரிந்திருந்தும் அவளை வேண்டுமென்றே வம்பிழுத்தான். அவன் கூறியதை கேட்டு அவளுக்குப் புரையேறியது.

"மணி, வசுவுக்குப் புரையேறுது பார்... தலையில் தட்டி விடு." தாத்தா கூறியதும் இது தான் சாக்கு என்று அவன் மனைவியின் தலையில் ஓங்கி தட்டினான். அவள் அவனை முறைத்து பார்த்தாள். அவனோ கண்டு கொள்ளாதவனாய் வேறு எங்கோ பார்த்தான்.

"நந்து, நீயும் உட்கார்..." புகழேந்தி மனைவியை உண்ண அழைத்தான்.

"இருக்கட்டும் மாமா... அம்மா ஒருத்தரால் பரிமாற முடியாது." என்று அவள் மறுத்துவிட்டாள். அவளை ஒரு பார்வை பார்த்த புகழேந்தி ஒன்றும் கூறவில்லை.

அவன் கை கழுவும் போது அவன் பின்னேயே சென்றவள், "நான் இப்போ சாப்பிட்டால் அம்மா தனியே சாப்பிடணும். நான் அவங்களுக்குக் கம்பெனி கொடுத்து சாப்பிட்டால் கூட ஒரு வாய் சாப்பிடுவாங்க, அதான்... உங்க வார்த்தையை எதிர்த்து பேசணும்ன்னு நான் அப்படிச் சொல்லலை." அவள் தன்னிலை விளக்கம் கூறினாள்.

"இந்தக் குணத்துக்காகத் தான் நான் உன்னை விரும்பியது. எனக்கு வர போற பொண்டாட்டி இந்தக் குடும்பத்தை அனுசரித்துப் போகணும்ன்னு விரும்பினேன். அது மாதிரியே நீயும் இருக்க. இப்போ தான் உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு நந்து." என்றவன் தனது ஈர கையால் அவளது கன்னத்தில் கோடு வரைந்து விட்டுச் சென்றான். சில்லென்ற அவனது விரல் அவளுள் காதல் தீயை மூட்டியது.

******

தனது அலுவலக அறையில் தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் புகழேந்தி. அவன் முன் அவனுக்குக் கீழ் பணிபுரியும் காவலர்கள் இருவர் அமர்ந்திருந்தனர்.

"அந்தக் கம்பெனி யாரோடதுன்னு விசாரிச்சிட்டீங்களா?"

"விசாரிச்சிட்டோம் சார்... அவர் பெரிய புள்ளி என்பதால் அவர் மேல் கை வைக்க யோசனையா இருக்கு."

"யாரந்த பெரிய புள்ளி?" கிண்டலாய் கேட்டான் புகழேந்தி.

"தொழிலதிபர் அகத்தியனின் மச்சான்."

"ஓ... அவ்வளவு பெரிய மனிதர் எதுக்கு இந்த வேலையை எடுத்து செய்யணும்?"

"அதான் எங்களுக்கும் யோசனையா இருக்கு சார்."

"வேறென்ன பணம் தான். பணம் கொடுக்கிறோம்ன்னு சொன்னால் மலத்தைக் கூட உண்ணும் ஈனப்பிறவிகள் அவர்கள்." வெறுப்புடன் வந்தது அவனது வார்த்தைகள்...

"யார் தலையீடு இருந்தாலும் பரவாயில்லை... அந்தாளை அரெஸ்ட் பண்ணி உள்ளே போடுங்க. நாம முட்டிக்கு முட்டி தட்டுறதில் அவன் உண்மையைக் கக்கணும்." என்றான் அவன் கோபத்தோடு...

புகழேந்தியின் ஆணையின்படி காவல்துறையினர் அகத்தியனின் மச்சினனை கைது செய்யக் கிளம்பினர்.

"துறைமுகத்தில் வரும் கப்பல்களில் இருந்து கழிவுகளை அகற்றுவது அரசாங்கத்தின் வேலை... இதில் தனியார் நிறுவனம் நீங்க எப்படி உள்ளே வந்தீங்க? யாரோட தயவில் நீங்க இதில் நுழைஞ்சீங்க?" எந்தவொரு கேள்விகளுக்கும் பதில் கொடுக்க முடியாது திணறியவரை உடனே கைது செய்து உள்ளே அடைத்தனர்.

அதைக் கேள்விப்பட்ட வரதராஜனும், அகத்தியனும் கொதித்தனர். வரதராஜன் மகனை தேடி சென்றார். அவனோ தங்கையிடம் பேசி கொண்டிருந்தான். இவரைக் கண்டதும் புன்னகையுடன் தனது அலைப்பேசியை அவரிடம் காட்டி,

"இவர் தான் நான் வதுக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை. அமெரிக்காவில் பெரிய மல்ட்டி மில்லியனர். நாம் அவர் கால் தூசி கூடப் பெற மாட்டோம்."

மகனது அக்கறையில் அவர் தனது கோபத்தை மறந்து வருங்கால மாப்பிள்ளையின் புகைப்படத்தைப் பார்த்தார். பையன் பார்க்க நன்றாக அழகாக இருந்தான்.

"நம்ம வதுவுக்குப் பொருத்தமானவன் தான்." வரதராஜன் சிலாகித்துக் கொள்ள... வந்தனாவோ முகத்தைத் தூக்கி வைத்து கொண்டிருந்தாள்.

"இன்னும் என்ன வேண்டும் வது?" வருண் தங்கையைப் பார்த்து கேட்டான்.

"அவனை ஒண்ணும் பண்ண முடியலையே வருண்."

"அவனை நான் பார்த்துக்கிறேன்." வருண் தங்கைக்கு நம்பிக்கை அளித்தான்.

"என்னத்தடா பார்த்து கிழிச்ச?" என்று கோபத்துடன் பொரிந்த வரதராஜன் புகழேந்தியின் நடவடிக்கையைப் பற்றிக் கூற... அதைக் கேட்டு சிறிது நேரம் யோசித்த வருண்,

"வது, நான் சொல்றபடி கேளு..." என்றவன் தனது திட்டத்தைக் கூற துவங்கினான். அதை வந்தனா சந்தோசத்துடன் கேட்டு கொண்டாள் என்றால், வரதராஜன் மகனை கோபத்துடன் முறைத்தார்.

"என் மகளைக் கேவலப்படுத்துறதுக்கான வழியை நீ காட்டுற."

"இல்லைப்பா... இது இப்போ நியூ ட்ரெண்ட். இதில் புகழேந்தி சிக்கினால் அவனை வேலையில் இருந்து தூக்குவது உறுதி."

"ஓ... நீ அப்படி வர்றியா?"

"ம், அப்படியே தான்..." என்றான் வருண் புன்னகையுடன்...

ஆனால் அவனது மனதில் இந்தத் திட்டத்தோடு வேறொரு திட்டமும் சேர்ந்து ஓடியது. அவனது கை அவனையும் அறியாது அவனது கன்னத்தைத் தடவி பார்த்துக் கொண்டது.

அன்றொரு நாள் விளையாட்டு மைதானத்தில் மணிமாறனும், வருணும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர். ஏற்கெனவே மணிமாறன் மீதிருந்த பொறாமையில் வருண் வேண்டுமென்றே அவனைக் கேலி செய்து பேசினான். அதைக் கேட்டு சாந்தி கோபம் கொள்ள... மணிமாறன் தான் அவளை அடக்கினான்.

"விடு சாந்தி... அவனிடம் மோதும் நேரத்தில் நாம் நம் இலக்கை நோக்கி பயணிக்கலாம்." என்று அவளைச் சமாதானப்படுத்தி விட்டான்.

சாந்தி வழக்கம் போல் மைதானத்தைச் சுற்றி ஓடி கொண்டிருந்தாள். உடன் ஸ்மிதாவும் சேர்ந்து கொண்டாள். அதனால் இருவரும் ஆரோக்கியமான போட்டியுடன் போட்டி போட்டுக் கொண்டு ஓடினர். இதைக் காண சகிக்காத வருண் வேண்டுமென்றே சாந்தி ஓடி வரும் பாதை அருகில் வந்து அவளது காலை தட்டிவிட்டான். அதில் அவள் தடுமாறி பொத்தென்று கீழே விழுந்து விட்டாள். அதைக் கண்டு அவன் இளக்காரமாய்ச் சிரித்தான். அவ்வளவு தான் சாந்தி வெகுண்டு எழுந்து அவனது கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டாள்.

தள்ளி நின்று கொண்டிருந்த மணிமாறன் ஓடி வருவதற்குள் இவ்வளவும் நடந்து முடிந்து விட்டது. வருண் கோபத்துடன் சாந்தியை அடிப்பதற்கு வருவதற்குள் அவர்களுக்கு இடையில் ஸ்மிதா வந்து நின்றாள்.

"ப்ரோ, நீங்க சாந்தியை தள்ளிவிடுறதை நான் பார்த்தேன். ஏன் அப்படிச் செஞ்சீங்க? தப்பு எல்லாம் உங்க மேல் தான். தப்பு செஞ்சவங்க தான் மன்னிப்பு கேட்கணும். நீங்க அவள் கிட்ட சாரி கேளுங்க." என்று அவள் கூற... அங்குக் கூடியிருந்த கொஞ்ச பேரும் ஸ்மிதா கூறுவதை ஆமோதித்தனர்.

மணிமாறன் அடக்கப்பட்ட கோபத்துடன் நின்றிருந்தான். அவனுக்குப் பதிலாகச் சாந்தி வருணை அடித்து விட்டதால் அவன் அமைதி காத்தான்.

வேறுவழியின்றி வருண் சாந்தியிடம், "சாரி..." என்று மன்னிப்பு கேட்டான். ஆனால் மன்னிப்பை அவனது உதடுகள் மட்டுமே கேட்டது. அவனது உள்ளமோ பழிவெறியில் குமுறியது.

இப்போது அதை நினைத்து பார்த்த வருணின் விழிகளில் வன்மம் வழிந்தது.

"சாந்தி, இதுக்கான விளைவுகளை இனி தான் நீ அனுபவிக்கப் போற." என்றவனது வார்த்தையில் அத்தனை பழிவெறி நிறைந்திருந்தது.

******

அதிகாலையில் மணிமாறன் வழக்கம் போல் விளையாட்டு மைதானத்திற்கு வந்து சாந்திக்காகக் காத்திருந்தான். எப்போதும் சொன்ன நேரத்திற்கு வந்துவிடும் சாந்தி இன்று இன்னமும் வரவில்லை. சுமார் அரை மணி நேரம் காத்திருந்து பார்த்தவன் பின்பு பொறுமை இழந்தவனாய் பரசுவிற்கு அழைத்தான்.

"நான் ஒரு முக்கியமான வேலையா வெளியில் இருக்கேன் தம்பி. சொர்ணாவுக்கு ஃபோன் பண்ணி பாருங்க." பரசு கூறியதும் அவன் சொர்ணாவிற்கு அழைக்க...

"அப்பவே கிளம்பிட்டாளே..." என்று அவள் கூற...

மணிமாறனுக்குப் பதற்றம் தொற்றிக் கொண்டது. அவன் வேகமாய்த் தனது இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு சாந்தியை தேடி சென்றான். அவள் வழக்கமாய் வரும் சாலையில் எல்லாம் அவளைத் தேடி பயணித்தது அவனது வாகனம். அவளைத் தேடி கொண்டே அவன் அவளது வீடு வரை வந்துவிட்டான். நேரே அவன் சொர்ணாவிடம் வந்து விசயத்தைக் கூற அவளோ அழ ஆரம்பித்தாள்.

சொர்ணா அழவும் தான் மணிமாறனுக்குச் சாந்தி காணாமல் போய்விட்டாள் என்கிற விசயமே அவனது மூளையில் உறைத்தது. அடுத்து என்ன செய்வது? என்று தெரியாது அவன் அப்படியே அமர்ந்து விட்டான்!

"சாந்தி எத்தனை மணிக்கு கிளம்பினாள்? வேறெங்கும் போவதாய்ச் சொன்னாளா?"

"எப்போதும் கிளம்பும் நேரம் தான். அவள் வேறெங்கும் போக மாட்டாள் தம்பி. ஸ்கூலு விட்டா வீடு, அப்புறம் பிராக்டிஸ் போவாள். பிரெண்ட்ஸ்ன்னு யாரும் கிடையாது. அவளுக்குத் தெரிஞ்சது எல்லாம் விளையாட்டு மட்டும் தான். அது தான் அவளுடைய உயிர் மூச்சு." என்று சொர்ணா அழுது கொண்டே கூறினாள். பரசு பெருங்கவலையில் அமர்ந்திருந்தான்.

சாந்தியை காணவில்லை என்றதும் புகழேந்தி முதல் வேலையாக எல்லாக் காவல்நிலையத்திற்கும் அறிவிப்பு கொடுத்து அவளைத் தேட சொன்னான். சாந்தியின் வீட்டிற்கு மனைவியுடன் வந்தவன் அவளது புகைப்படத்தைச் சொர்ணாவிடம் இருந்து வாங்கி அனைத்து காவல்நிலைய அதிகாரிகளுக்கும் வாட்ஸ்அப்பில் அனுப்பி வைத்து விட்டான்.

"கவலைப்படாதீங்க... சாந்தியை கண்டுபிடிச்சிடலாம்." நம்பிக்கையுடன் புகழேந்தி கூறினான்.

"எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு தம்பி. இப்போ நாட்டில் நடக்கிற நிலைமையைப் பார்த்தால் எம்பொண்ணுக்கு ஏதாவது ஆகியிருக்குமோன்னு மனசு கிடந்து அடிச்சிக்குது." சொர்ணா அழுது புலம்பினாள்.

புகழேந்தி அவளைத் தேற்ற வழி தெரியாது நந்தனாவிடம் அவளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு மணிமாறனை வெளியில் அழைத்துக் கொண்டு வந்தான்.

"உனக்கு யார் மேலாவது சந்தேகம் இருக்கா மணி?"

"சாந்தி சின்னப் பொண்ணுடா... அவளுக்கு எதிரிங்க யார் இருக்கப் போறாங்க?"

"அவளது திறமை, அவளுக்கு எதிரியை சம்பாதித்துக் கொடுத்து இருக்கலாம் இல்லையா?"

"எனக்குத் தெரிஞ்சு அப்படி யாரும் கிடையாது புகழ். வருண் என் கிட்ட வம்பிழுப்பான் தான். ஆனா அவன் போய்ச் சாந்தியை... ம்ஹூம், நினைச்சு கூடப் பார்க்க முடியலை."

"எதுக்கும் வருண் மேல் ஒரு கண் வைக்கிறேன்." காவல்துறை புத்தி அல்லவா! அதனால் புகழேந்தி வருண் மீதும் சந்தேகம் கொண்டான்.

புகழேந்தி காவல்நிலையம் சென்றுவிட... மணிமாறன் கனத்த இதயத்துடன் வீடு வந்து சேர்ந்தான். அங்கு அவனது மனைவி வசுமதி தனது வீட்டில் இருப்பதைக் கண்டு அவனுக்கு ஆச்சரியமாக இருந்த போதும் அவளிடம் அவன் எதுவும் பேச முயற்சிக்கவில்லை. அவளும் இவனைக் கண்டதும் முகத்தைத் தூக்கி வைத்து கொண்டாள். அவன் நேரே அன்னையைத் தேடி சென்றான்.

"சாந்தி கிடைத்தாளா மணி?" அன்னை கேட்டதற்கு அவன் மறுப்பாய் தலையசைத்தான். அவனது விழிகள் கலங்கி போனது.

"கடவுளே! இது என்ன சோதனை?" தேவகி கவலையுடன் அரற்றினார்.

"எனக்குப் புகழ் மேல் நம்பிக்கை இருக்கும்மா. அவன் எப்படியாவது சாந்தியை கண்டுபிடிச்சு கொடுத்துருவான்." மணிமாறன் நம்பிக்கையுடன் கூறினான். தேவகிக்கும் அந்த நம்பிக்கை இருந்தது.

புகழேந்தி சாந்தியின் வீட்டிற்கு அருகில் இருக்கும் சிசிடிவி கேமிராக்கள் மற்றும் விளையாட்டு மைதானத்திற்கு அவள் வரும் வழியில் இருக்கும் சிசிடிவி கேமிராக்கள் அனைத்தையும் பரிசோதித்துப் பார்த்து விட்டான். எதிலும் அவள் கடத்தப்பட்டதாய் காட்டவில்லை. சாந்தி வீட்டில் இருந்து மிதிவண்டியில் கிளம்பியது தெரிந்தது.

அதன்பிறகு அவள் கடந்த சாலைகளை ஒவ்வொன்றாய் நோட்டம் விட்டுக் கொண்டு வந்தவன் அடுத்து பிரதான சாலையில் சாந்தியின் மிதிவண்டி வந்ததற்கான அடையாளம் எதுவுமில்லை. பொறுமையாக எல்லாவற்றையும் மீண்டும் ஓட்டி பார்த்தும் அவள் வரவேயில்லை.

புகழேந்தியின் காவல்துறை மூளை வேகமாகச் செயல்படத் துவங்கியது. இடையில் இருக்கும் சிறு வீதிகளில் கேமிரா கிடையாது. அப்படியென்றால் அந்த வீதிகளில் ஏதோ ஒன்றில் சாந்தி செல்லும் போது தான் அவள் கடத்தப்பட்டு இருக்க வேண்டும். இப்போ வரை சாந்தி கடத்தப்பட்டதற்கு எந்த நிபந்தனையும் விதித்து யாரும் வரவில்லை. அதனால் சாந்தி அவளுக்காக மட்டுமே கடத்தப்பட்டு இருப்பது அறிந்து அஞ்சா நெஞ்சன் அவனுக்கே பயத்தில் வியர்வை துளிர்க்க ஆரம்பித்தது. என்னயிருந்தாலும் பெண் பிள்ளை அல்லவா! அவளைச் சேதாரம் இல்லாது காப்பாற்ற வேண்டுமே என்று அவனது மனம் அச்சத்தில் படபடவென அடித்துக் கொண்டது.

புகழேந்தி தானே நேரில் அந்த வீதிகளுக்கு விசாரணைக்குச் சென்றான். அங்கிருந்த தேநீர் கடைகளில் சாந்தியின் புகைப்படத்தைக் காட்டி விசாரித்தான். யாருக்கும் அவளை அடையாளம் தெரியலை. ஒரே ஒரு நபர் மட்டும் அவளை அடையாளம் கூறினார்.

"எப்போதும் சைக்கிளில் போகும் இந்தப் பெண் இன்னைக்குக் காரில் போச்சு சார்." என்று அவர் கூற... புகழேந்திக்குப் பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

"என்ன கார்ன்னு தெரியுமா? கார் நம்பர் பார்த்தீங்களா?"

"தூக்க கலக்கத்தில் பார்த்தது சார். நம்பர் தெரியாது, ஆனா வெள்ளை கலர் கார். ஜன்னலோரம் இந்தப் பொண்ணு உட்கார்ந்து இருந்ததால் பார்க்க முடிஞ்சது. இல்லைன்னா அதுவும் பார்த்திருக்க மாட்டேன்."

"அந்தப் பொண்ணு அழுத மாதிரி, இல்லை வாயை பொத்தி கடத்தின மாதிரி பார்த்தீங்களா?"

"அது எனக்கு ஞாபகம் இல்லையே சார்." என்று அவர் கூறிவிட... புகழேந்தி ஏமாற்றத்துடன் திரும்பினான்.

******

சாந்திக்கு மெல்ல நினைவு திரும்பலானது. விழி திறந்தாலும் சுற்றிலும் இருள் பரவியிருப்பது போல் ஒரு உணர்வு. கண்களைக் கட்டி இருக்கிறார்கள் போலும். அவள் எழ முயன்று கைகள், கால்களை அசைக்க முயன்றாள். முடியவில்லை... கைகள், கால்களும் இறுக கட்டப்பட்டு இருந்தது. அவளுள் பயம் சூழ ஆரம்பித்தது. அவள் மிதிவண்டியில் விளையாட்டு மைதானம் நோக்கி வந்து கொண்டிருந்த போது அவளுக்கு எதிரே ஒரு கார் வந்து நின்றது. அவள் மிதிவண்டியை சட்டென்று நிறுத்திவிட்டுக் காரில் இருந்தவர்களைத் திட்ட போன போது அதிலிருந்து இறங்கியவர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டனர். கண்ணிமைக்கும் நேரத்தில் அவள் முகத்தில் எதையோ அடித்தார்கள். அடுத்த நொடி அவள் மயங்கி விழுந்து விட்டாள். அதன் பிறகு என்ன நடந்தது என்று அவளுக்குத் தெரியாது. இதோ இப்போது தான் அவள் கண் விழிக்கிறாள்.

"யாராவது இருக்கீங்களா? நான் எங்கே இருக்கேன்? என்னைய எதுக்குக் கடத்திட்டு வந்திருக்கீங்க?" அவள் குரலை உயர்த்திக் கத்தினாள்.

பதில் சத்தம் எதுவும் வரவில்லை. அவள் பயத்தில் அழுது கொண்டே முடங்கிப் போனாள். பெற்றோரின் அன்பு, அரவணைப்பை நினைத்து அந்தப் பிஞ்சு உள்ளம் ஏங்கி அழுதது.

"அம்மா, அப்பா..." இந்த வார்த்தைகள் தான் அவளது வாயிலிருந்து திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருந்தது.

சுமார் அரை மணி நேரம் கழித்து யாரோ வரும் சத்தம் கேட்டது. சாந்தி பயத்துடன் எழுந்தமர்ந்தாள்.

"யாரது?"

"நான் தான் சாந்தி." என்றபடி அவள் அருகே வந்தமர்ந்த வருண் அவளது கண் கட்டை அவிழ்த்து விட்டான்.

"அண்ணா, நீங்களா? என்னை எப்படியாவது காப்பாத்துங்கண்ணா." வருணை கண்டதும் அவளுக்குச் சற்று நம்பிக்கை வந்தது.

"நான் உனக்கு அண்ணனா? உன்னை மாதிரி அன்றாடங்காய்ச்சி எனக்குத் தங்கையா? குட் ஜோக்..." அவன் இடியெனச் சிரித்தான். அதைக் கேட்டு அவள் பயத்தில் உறைந்தாள்.

"அண்ணா, ப்ளீஸ்ண்ணா... என்னைக் காப்பாத்துங்க."

"நீ யார் கிட்ட காப்பாத்த சொல்லி கேட்கிற தெரியுமா? உன்னைக் கடத்தியவன் கிட்டேயே..." என்ற வருணை நம்ப முடியாது பார்த்தாள் சாந்தி.

"அண்ணா, நான் ஒரு தப்பும் பண்ணலையே." அவள் அழுது கொண்டே கேட்டாள்.

"தப்பு பண்ணலையா? பொய் சொல்லாதேடி... என்னை அடிச்சதை நீ மறந்துட்டியா? இல்லை உன் கிட்ட என்னை மன்னிப்பு கேட்க வச்சியே அதை மறந்துட்டியா?" அவன் விழிகளில் சிவப்பேற அவளை ஆத்திரத்துடன் பார்த்தான்.

"நீங்க பண்ணியது தப்பு தானே அண்ணா." அவள் தேம்பியவாறு கூற...

"அதை விட இப்போ நான் பெரிய தப்பு பண்ண போறேன். ஆனா அதுக்கு நான் மன்னிப்பு கேட்க மாட்டேன்." என்று கூறியபடி அவன் அவள் புறம் குனிய... அவள் அமர்ந்த நிலையில் பயத்துடன் பின்னால் நகர்ந்தாள்.

"ஹா ஹா... உன்னை மாதிரி பொண்ணுங்களை எல்லாம் என் விரல் நுனி கூடத் தீண்டாது. என்னோட லெவல் எல்லாம் ஸ்டார் கேட்டகரி. உனக்கு என்னோட அல்லக்கைகள் தான் சரிப்பட்டு வருவாங்க." என்றவன்,

"பாய்ஸ்..." என்று யாரையோ கை தட்டி அழைத்தான். அவன் அழைத்தும் தடிமாடு போன்று நான்கு ஆண்கள் அங்கு வந்து நின்றனர்.

"கடத்தும் போதே ஆசைப்பட்டுக் கேட்டீங்களே. உங்களுக்கான விருந்தை எடுத்துக்கோங்க." என்று அவன் கூற... அவர்கள் கண்களில் காமம் வழிய சின்னவளை பார்த்தனர்.

சாந்தியின் மூளையில் வருண் கூறிய விசயம் பதிய மிகவும் தாமதமானது. அவன் கூறியது புரிந்ததும் அவள் அச்சத்துடன் எல்லோரையும் பார்த்தாள். அவளது விழிகளில் இருந்து கண்ணீர் நிற்காது வழிந்தோடியது.

"இவள் ரன்னிங் ரேஸ் வின்னர். அதனால் பார்த்து ஜாக்கிரதையாகக் கையாளுங்க. இல்லைன்னா ஒண்ணு செய்ங்க. முதலில் இவளது கால்கள் இரண்டையும் உடைச்சிருங்க. அப்பத்தான் எழுந்து ஓட மாட்டாள். அதை விட இனி உடைந்த காலை வைத்துக் கொண்டு அவளால் ரன்னிங் ரேசில் கலந்துக்க முடியாது. எனக்கு அது தான் வேண்டும்." என்று வருண் கூறி முடிக்கும் முன்,

"வேண்டாம், என்னை ஒண்ணும் பண்ணிடாதீங்க.." சாந்தி வீறிட்டு அலறினாள்.

அவளது அலறலை பொருட் படுத்தாது வருண் சிரித்தபடி விலகி கொள்ள... அந்த நால்வரும் சின்னவளை சூழ்ந்து கொண்டனர். அழகிய மான் ஒன்று உறுமும் கொடிய புலிகளிடம் மாட்டி கொண்டது போல் அவள் அவர்களிடம் மாட்டி கொண்டாள்.

ஒருவன் அவள் அருகே அமர்ந்து அவளைத் தொடக்கூடாத பாகத்தில் தொட... அவளோ,

"ச்சீ... அங்கே எல்லாம் தொடாதே." என்று கோபத்துடன் கூறியவள் கட்டியிருந்த தனது காலை உயர்த்தி அவனது உயிர்நிலையில் ஓங்கி ஏத்தினாள். அவன் 'ஆ'வென அலறிக் கொண்டு விலகினான்.

"நான் தான் சொன்னேன்ல. அவள் திமிர் பிடிச்சவள்ன்னு..." வருண் அவர்களுக்கு எடுத்துக் கொடுத்தான்...

சாந்தியால் அடிவாங்கியவன் ஆத்திரத்துடன் அவள் புறம் நெருங்கி அவளது இரு கால்களையும் வளைத்து முறுக்கி உடைத்தான். சாந்தி வலி தாங்காது,

"ஐயோ, அம்மா..." என்று அலறியபடி அரை மயக்கத்திற்குச் சென்றாள்.

அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அந்த மனித மாமிச குன்றுகள் அந்தச் சின்னஞ்சிறு சிட்டின் இறக்கைகளை வலிக்க, வலிக்கப் பிடுங்கி எறிந்தனர். தனக்கு நடக்கும் கொடுமையைச் சாந்தி உணர்ந்தாலும் அதை அவளால் தடுக்க முடியவில்லை. அவளது கைகள் கட்டப்பட்டிருந்தது. கால்கள் உடைக்கப்பட்டிருந்தது. அவளது உடலிலும், மனதிலும் வலி மட்டுமே மிஞ்சியிருந்தது. ஒரு கட்டத்திற்கு மேல் தாக்கு பிடிக்க முடியாது அவள்,

"என்னை விட்டுருங்கடா..." என்று மன்றாடியபடி மயங்கி போனாள். அவளது மயக்கத்தைக் கூடக் கண்டு கொள்ளாது தங்களது காரியத்தில் கண்ணாய் இருந்தனர் அந்தக் கயவர்கள்.

இதை எல்லாம் ரசித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான் வருண் என்னும் இரக்கமற்ற அரக்கன்.

ஆண்டாண்டு காலமாகப் பெண்களை அடக்கும் பழமையான முறையையே ஆணவனும் கையாண்டான். பெண்ணை உடலளவில் அடித்தால் மட்டுமே அவளை வீட்டளவில் முடங்க வைக்க முடியும் என்பதை உணர்ந்து அவன் செயலாற்றினான். இப்படிப்பட்ட ஆண்களுக்குத் துணை போவது பெண்கள் தானே... அவர்கள் இது போல்

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவு அளித்து, குற்றம் செய்த ஆண்களுக்கு நடுவீதியில் வைத்துத் தண்டனை கொடுத்திருந்தால் பாலியல் பலாத்காரம் என்கிற சொல் வழக்கில் இல்லாது ஒழிந்திருக்குமே!

"பாஸ், செத்திருச்சு பாஸ்..." என்று ஒருவன் கத்தினான். சாந்தி மயங்கி இருப்பதைக் கூட உணராது அவள் இறந்து போய் விட்டதாய் அவன் அலறினான்.

"ரொம்ப நல்லதா போச்சு... பாடிய எப்படி டிஸ்போஸ் பண்ணணுமோ அப்படிப் பண்ணிருங்க. இந்த விசயம் கொஞ்சமும் வெளியில் லீக்காகக் கூடாது. நீங்க நான்கு பேரும் கொஞ்ச நாளைக்கு நார்த் இண்டியாவில் போய் மறைஞ்சிருங்க. இந்த விசயம் ஆறியதும் இங்கே வாங்க."

வருண் வேகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டு விட்டு வெளியேறினான். ஒரு உயிர் போனதை பற்றி அவனுக்குச் சிறிதும் கவலையில்லை. சாந்தியின் மரணத்தை வைத்து மணிமாறனை எப்படி மாட்ட வைக்கலாம்? என்று அவனது மனம் வேகமாய்த் திட்டமிட்டுக் கொண்டிருந்தது.

ஊரை விட்டு ஒதுங்கியிருந்த அந்தப் பாலத்தின் அடியில் சொற்ப அளவே நீர் ஓடி கொண்டிருந்தது. அதற்கு ஆறு என்று பெயர் வைப்பதை விட ஓடை என்று பெயர் வைத்திருக்கலாம். கரை இருமருங்கிலும் குப்பை குளங்கள் நிறைந்து அத்தனை அசுத்தமாக அது காணப்பட்டது. பாலத்தின் அடியில் ஓரமாய்ச் சாந்தி அரை நிர்வாண நிலையில் வீசி எறியப்பட்டு இருந்தாள். அவள் அருகில் அவளது மிதிவண்டி கிடந்தது.

கடத்தியவர்கள் அவளோடு அவளது மிதிவண்டியையும் சேர்த்து கடத்தியிருந்தனர். இதோ இப்போது அவளோடு சேர்த்து அதையும் அநாதையாய் தூக்கி எறிந்திருந்தனர்.

சின்னஞ்சிறு பெண்ணவளின் வேதனையைக் கண்டு வானமும் துக்கம் கொண்டதோ! சோவென்று அது கண்ணீராய் மழை நீரை பொழிந்தது. ஓங்கி அடித்து வீசப்பட்ட மழையின் சாரல் பாலத்தின் அடிப்பகுதியின் உள்ளேயும் தெறித்தது. மழைச்சாரலானது சாந்தியின் முகத்தில் பன்னீராய் தெளித்து அவளது ஆழ்ந்த மயக்கத்தினைத் தெளிவித்தது. அவள் ஆழ்ந்த மயக்கத்தில் ஆழ்ந்திருப்பதைக் கூட உணராது அந்தக் கயவர்கள் பதட்டத்தில் அவள் இறந்து விட்டதாக எண்ணி இங்குக் கொண்டு வந்து வீசி விட்டு சென்றுவிட்டனர்.

"தண்ணி, தண்ணி..." அவள் தீனமாய் முனங்கினாள்.

அப்போது ஆடு மேய்க்கும் சிறுமி ஒருத்தி மழைக்குப் பயந்து அங்கு ஒதுங்கினாள். அவள் சாந்தியின் முனங்கல் ஒலியை கேட்டு ஒலி வந்த திசையை நோக்கி விரைந்து வந்து எட்டிப்பார்த்தாள். சாந்தி கிடந்த நிலையைக் கண்டு அந்தச் சிறுமி திகைத்து போனாள்.

"தண்ணி, தண்ணி..." என்று சாந்தி முனங்கவும் அந்தச் சிறுமி சுதாரித்துக் கொண்டு மழை நீரை தனது கைகளில் பிடித்து வந்து அவளது வாயில் ஊற்றினாள். அதில்

சாந்திக்கு சற்று ஜீவன் வந்தது. அப்போது தான் அவள் தனது உடல் வலியை உணர்ந்தாள்.

"ம்மா, வலிக்குதே..."

அவளது வேதனை குரல் அந்தச் சிறுமியை என்னவோ செய்தது. அவள் பாலத்தின் சுவரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளைக் கிழித்துச் சாந்தியின் உடலில் போர்த்தி அவளது மானத்தைக் காப்பாற்றினாள். பிறகு மழையையும் பொருட்படுத்தாது மேலேறி சாலைக்கு வந்து தனது ஊரை நோக்கி ஓட துவங்கினாள். அந்த நிலையிலும் அவள் ஆண்களின் உதவியை எதிர்பார்க்கவில்லை. அவள் வீட்டிற்கு வந்து தன்னுடைய அம்மாவிடம் விசயத்தைக் கூற... அவள் சில பெண்களையும், ஆண்களையும் துணைக்கு அழைத்துக் கொண்டு அங்கு ஓடி வந்தாள்.

சாந்தியின் நிலையைக் கண்டதும் எல்லோருக்கும் திக்கென்று ஆகிவிட்டது. கடவுளுக்குக் கண் இல்லையா? என்று கடவுளை சபித்தார்கள்.

"இது போலீஸ் கேஸ்... நாம கை வச்சால் ஏதாவது சொல்வாங்க. கோர்ட், கேசுன்னு நம்மால அலைய முடியாது." அங்கிருந்த ஒருவர் கூற...

"அதுக்காக இப்படியே விட்டுவிட முடியுமா? பாவம்ய்யா இந்தப் பொண்ணு..." என்று மற்றொருவர் இரக்கப்பட்டார்.

இறுதியில் எல்லோரும் ஒன்று சேர்ந்து சாந்திக்கு உதவி செய்வதற்குத் தயாரானார்கள். வழக்கு பதிந்தால் எல்லோர் மீதும் பதியட்டும் என்று நினைத்தார்கள்.

சாந்தியை அரசாங்க மருத்துவமனையில் சேர்த்த பின்னரே காவல்நிலையத்திற்குத் தகவல் அளித்தனர். அடுத்த ஒரு மணி நேரத்தில் சாந்தி பற்றிய முழுத் தகவல்கள் தெரிந்ததும் அவளுக்கு நல்ல முறையில் சிகிச்சை கொடுக்கப்பட்டது.

சாந்தி பற்றித் தகவல் அறிந்த புகழேந்தி, மணிமாறன், சொர்ணா, பரசு எல்லோரையும் அழைத்துக் கொண்டு

அங்குச் சென்றான். சாந்தி இருந்த நிலையைக் கண்டு சொர்ணா தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். பரசு திக்பிரம்மை பிடித்தார் போன்று அப்படியே அமர்ந்து விட்டான். மணிமாறனின் விழிகளில் விழிநீர் கோர்த்தது. அவளைச் சிறு வயதில் இருந்து அவன் பார்த்து வருகிறான். அவள் அவளது பெற்றோரிடம் வளர்ந்ததை விட அவனிடம் வளர்ந்தது தான் அதிகம். அவன் அவளுக்கு இன்னொரு தந்தையே! அதனால் வந்த பாசமிது!!!

புகழேந்தி மணிமாறனின் தோளில் ஆதரவாய் கை வைத்தான். அவனைத் திரும்பி பார்த்த மணிமாறன்,

"யாருடா இப்படிப் பண்ணியது? அதுவும் சின்னஞ்சிறு பூவை போய் மனசாட்சியே இல்லாம..." மணிமாறனால் தாங்கி கொள்ள முடியவில்லை.

"அவளது கால்களை ஒடித்து அவளைப் பாலியல் வன்கொடுமை பண்ணணும்ன்னா...?" புகழேந்தி கேள்வியாய் மணிமாறனை பார்த்தான்.

"வருணா...?" மணிமாறன் திகைப்பாய் அவனைப் பார்த்தான்.

"சந்தேகம் தான்... எதையும் உறுதியாய் சொல்ல முடியலை."

"யாராயிருந்தாலும் தண்டனை கடுமையா இருக்கணும் புகழ். உங்க சட்டத்தால் தண்டனை கொடுக்க முடியலைன்னா, சட்டத்தை நானே என் கைகளில் எடுத்து அவர்களுக்குத் தண்டனை கொடுப்பேன். இது உறுதி..." ஆவேசப்பட்டான் மணிமாறன்.

"நிச்சயமா தண்டனை உண்டு மணி. நீ கவலைப்படாதே. நான் போய் நந்தனாவை அழைச்சிட்டு வர்றேன். அவள் சொர்ணாக்காவுக்குத் துணை இருப்பாள். அதுவரை நீ இங்கே இரு."

மணிமாறன் ஒத்துக் கொண்டதும் புகழேந்தி கிளம்பி சென்றான். புகழேந்தி கூறிய வார்த்தைகளே அவனது

காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. சாந்தி கண் விழிப்பதற்காக அவன் காத்திருந்தான்.

புகழேந்தி விசயத்தையும் கூறியதும் வீட்டில் இருந்த அனைவரும் சாந்தியை காண வந்துவிட்டனர். மணிமாறன் எதையும் உணராது எங்கோ வெறித்துக் கொண்டு அமர்ந்திருந்த காட்சி வசுமதியை மிகவும் பாதித்தது. யாரும் அவனைக் கவனிக்கவில்லை. அவள் மட்டுமே கணவனைக் கவனித்தாள். அவன் அவளைப் பொறுத்தவரையில் பிடிக்காத கணவன் தான். இருந்தாலும் அவனது இந்தத் தோற்றம் அவளது மனதினை ஏதோ செய்தது. சிறுவயதில் ஒன்றாய் சேர்ந்து விளையாடிய பாசமோ! விவரம் தெரிந்த வயதில் தான் அவள் அவனிடம் இருந்து ஒதுங்கி கொண்டாள். அதற்கு அவளது அன்னையும் ஒரு காரணம். அந்தஸ்து பேதத்தை அவளிடம் திணித்து அவனுக்கும் அவளுக்கும் இடையில் இரும்புத்திரை விழ அவரே காரணமாகி விட்டார்.

அழுது ஓய்ந்து போயிருந்த சொர்ணாவை பார்ப்பதா? இல்லை துக்கத்தை விழுங்கி கொண்டு உணர்வில்லாது கல்லாய் சமைந்து போன பரசுவை பார்ப்பதா? நந்தனாவிற்குச் சற்று திணறலாக இருந்தது. அவள் சொர்ணா அருகில் அமர்ந்து ஆறுதல் கூறி கொண்டிருந்தாள். சின்னவள் நிலை எல்லோரையும் அச்சப்படுத்தி இருந்தது.

புகழேந்தி சாந்தி வழக்கினை தீவிரமாக விசாரிப்பதை கண்டு வருண் தனது தங்கையிடம் வந்தான். வந்தனா தனது வருங்கால அமெரிக்க மணமகனுடன் பேசி கொண்டிருந்தாள். வருண் அவள் முன் வந்து நின்று அலைப்பேசியை வைக்கச் சொல்லி கூறினான். அவள் புரியாது அண்ணனை பார்த்தாலும் அவன் சொன்னதைச் செய்துவிட்டு என்னவென்பது போல் அவனை ஏறிட்டாள்.

"நான் சொன்னதுக்கான நேரம் வந்துவிட்டது. நீ இப்போதே அதை ஆரம்பித்து வை." என்றான் தீவிரமான குரலில்...

"இப்பவேவா...?"

"ஆமாம், இப்பவே தான்..." அழுத்தமாய்க் கூறியவன் 'செய்' என்பது போல் அவளைப் பார்த்தபடி அவள் முன் அமர்ந்தான்.

வந்தனா வேறுவழியின்றித் தனது ட்விட்டர் பக்கத்தைத் திறந்து அதில் தட்டச்சுச் செய்ய ஆரம்பித்தாள். வேலை முடிந்ததும் அவள் அதை வருணிடம் காட்டினாள். அவன் அதைப் படித்துப் பார்த்துத் திருப்திப்பட்டுக் கொண்டான்.

இப்போது ட்ரெண்ட்டாகி வரும் #me_tooவை பயன்படுத்தி அவள் தனது பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டு இருந்தாள். அதன் சாராம்சம் இது தான்...

"தற்போது ஏசிபியாக இருக்கும் திரு. புகழேந்தி இரண்டு வருடங்களுக்கு முன் அவர்களது வீட்டில் நடந்த அவரது தங்கை பிறந்தநாள் விழாவின் போது என்னிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சித்தார். அதை இவ்வளவு நாள் நான் வெளியில் சொல்லாது மனதிற்குள் வைத்து புழுங்கி செத்துக் கொண்டிருந்தேன். இப்போது தான் அதற்கான நேரம் வந்திருக்கிறது. உங்களிடம் இதைப் பகிர்ந்து கொண்ட பின் தான் எனக்குக் கொஞ்சம் ரிலாக்சாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் சட்டத்தின் தண்டனையில் இருந்து தப்பிவிடலாம். ஆனால் மக்களின் பார்வையில் இருந்து தப்பிவிடக் கூடாது." என்று உருக்கமாக எழுதியிருந்தாள்.

"சூப்பர் வது... இனி அந்த ஏசிபி செத்தான். யார் ஃபோன் பண்ணினாலும் எடுக்காதே. யாரையும் சந்திக்காதே." என்று அவளுக்கு அறிவுறுத்தியவன்,

"சரி, ஈவினிங் ஸிமி பேர்த்டே பார்ட்டி இருக்கு... கிளம்பு." என்றவன் அறையில் இருந்து வெளியில் வந்தான்.

வருண் சிறிதும் எதிர்பார்க்கவில்லை, சாந்தி உயிரோடு இருப்பாள் என்று... இனி அவள் கண் விழித்து அவனை அடையாளம் காட்டினால் அவன் தொலைந்தான்.

"டாமிட், இவனுங்க பண்ற வேலையால் எனக்குத் தான் உயிர் போகிறது." தன்னுடைய அடியாட்களை நினைத்து அவனுக்குக் கோபம் வந்தது.

அதனால் தான் அவன் புகழேந்திக்கு செக் வைத்தான். புகழேந்தி இல்லாது வேறொரு அதிகாரி இந்த வழக்கை விசாரித்தார் என்றால் மணிமாறனை இதில் சம்பந்தப்படுத்தி விட்டு அவன் எளிதில் தப்பிவிடலாம். அதற்காகத் தான் இந்த ஏற்பாடு... இப்போது தான் அவனுக்குத் திருப்தியாக இருந்தது.

வந்தனாவின் பதிவு காவல்துறை வட்டாரத்தில் பலத்த சலசலப்பை ஏற்படுத்தியது. அதுவும் அவள் அமைச்சரின் பெண் என்பதால் அவளது பதிவு மக்கள் இடையே கூடுதல் கவனம் பெற்றது. அவளது பதிவின் கீழ் பலர் புகழேந்தியை பற்றிப் படிக்கக் கண் கூசும் வார்த்தைகளைக் கொண்டு திட்டி கருத்துக்கள் என்கிற பெயரில் மனதின் வக்கிரத்தை பதிவிட்டு இருந்தனர்.

புகழேந்தியின் மேலதிகாரி அவனை அழைத்து விசாரித்தார். அவனோ இந்தச் செய்தியை மறுத்தான்.

"இப்போ இருக்கிற பிரச்சனையில் உன்னை வேலையை விட்டு தூக்குறதை தவிர எனக்கு வேற வழி தெரியலைய்யா. இதில் அரசியல் பிரஷர் வேறு... என்ன பண்றதுன்னு தெரியலை?"

"இதைப் பொய்ன்னு நிரூபிக்க எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க சார்."

"சரி இரண்டு நாள் டைம் தர்றேன். அதற்குள் நீ நிரூபிச்சாகணும். இல்லைன்னா...?" என்று நிறுத்தியவர் அவனது முகத்தைக் கேள்வியாய் பார்த்தார்.

"நான் என் வேலையை ராஜினாமா செய்திர்றேன் சார்." என்று அவன் முடித்துக் கொள்ள...

"ஓகே, நல்லது... இரண்டு நாள் சஸ்பெண்ட் மட்டும் பண்றேன்." என்றவர் அதற்கான உத்தரவை அளித்தார்.

புகழேந்தி இறுகிய முகத்துடன் அலுவலகத்தை விட்டு வெளியில் வந்தான். வந்தனாவிற்குத் திடுமென என்னவானது? ஏன் இப்படித் தன் மீது பழி சுமத்தி இருக்கிறாள்? அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. இது எல்லாவற்றையும் விட நந்தனாவை அவன் எப்படி எதிர்கொள்ளப் போகிறான்? அவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. எந்த மனைவியால் இதைத் தாங்கி கொள்ள முடியும்?

புகழேந்தி சோர்வுடன் வீட்டிற்கு வந்தான். வந்ததும் அவனது விழிகள் மனைவியைத் தேடியது. அவனது தேடலை உணர்ந்தவராய் சதாசிவம்,

"நந்து ரூமில் இருக்கிறாள்." என்க...

"தாத்தா, நான்..."

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியும் புகழ். நீ போய் நந்துவை பார்." சதாசிவம் புரிதலோடு அவனை அனுப்பி வைத்தார்.

புகழேந்தி அறை கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தான். அவனது வரவை உணர்ந்து திரும்பி பார்த்த நந்தனா தான் மடித்து வைத்துக் கொண்டிருந்த துணியை அப்படியே போட்டு விட்டு எழுந்து நின்றாள்.

அவள் அருகில் வந்தவன் அவள் முன் மண்டியிட்டு அவளது கைகளைப் பற்றியபடி, "நந்து..." என்று ஏக்கமாய் அழைக்க... அவள் கட்டிலில் அமர்ந்து தாய்மை பெருக்கோடு அவனை அணைத்து கொண்டாள். சிறிது நேரம் அவளது மடியில் தலைகவிழ்ந்து இருந்தவன் பின் சுதாரித்துக் கொண்டு அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"நீ இதை நம்பறியா? நான் அப்படிப் பண்ணியிருப்பேன்னு..." இதைச் சொல்லும் போதே அவனது விழிகள் கலங்கி சிவந்திருந்தது.

"ஒரே அறையில் இருந்தும் கட்டின மனைவி கிட்ட கூடக் கண்ணியம் காக்கிறவங்க நீங்க. உங்களைப் போய் நான்

சந்தேகப்படுவேனா? அப்படிச் சந்தேகப்பட்டால் அது என்னையே சந்தேகப்படுவது போல்..." அவனும் அவளும் ஒன்று என்று கூறி அவனது காதலை அவள் அழகாய் கௌரவித்து விட்டாள்.

"தேங்க்ஸ் நந்து... இப்போ தான் நிம்மதியா இருக்கு." என்றபடி அவன் எழுந்தான்.

"இதிலிருந்து எப்படி வெளியில் வர போறீங்க?"

"அதற்கான ஆதாரம் நம்மிடம் இருக்கு நந்து. நீ கவலைப்படாதே." என்று அவன் கூற...

"ஆதாரத்தை வைத்துக் கொண்டு எதுக்கு இந்தக் கலக்கம்?" அவள் அன்பாய் அவனைக் கடிய...

"நந்தனாவின் புகழேந்தி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவனாய் இருக்க வேண்டுமே. அதுவும் என் மனைவி மனதில் நான் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவனாய் இருக்க வேண்டும்."

"நான் எப்பவும் உங்களைச் சந்தேகப்பட மாட்டேன்." அவள் புரிதலுடன் கூறினாள்.

புகழேந்தி நிம்மதியுடன் ஆதாரங்களைத் தேடி தனது அலமாரியை உருட்ட ஆரம்பித்தான்.

அதேநேரம் பரசு, சொர்ணாவிற்குத் துணையாக இருந்த மணிமாறனை காவல்துறை கைது செய்தது. சாந்தியின் இந்த நிலைக்கு அவன் தான் காரணம் என்று தாங்கள் சந்தேகிப்பதாகக் கூறியது. அங்கு வசுமதியும் உடன் இருந்தாள். அவளுக்குமே மணிமாறன் சாந்தியை தொட்டு பேசுவது பிடிக்காது தான். ஆனால் இந்த இரண்டு நாட்களாக அவள் கணவனைக் கவனமாகக் கண்காணித்து வருகிறாளே...

கணவன் ஒரு தந்தையின் பாசத்துடன் சாந்தியை கவனிப்பது கண்டு அவளது விழிகளில் கண்ணீரே வந்துவிட்டது. ஆம், ஒருநாள் சாந்திக்கு இரத்த போக்கு

அதிகமாகி அவளது உடை நனைந்து போனது. செவிலிப்பெண் இல்லாது சொர்ணா உடை மாற்ற மிகவும் தடுமாறினாள். வசுமதிக்கோ இது மாதிரியான வேலைகள் செய்து பழக்கமில்லை. அவள் வளர்ந்த சூழ்நிலை காரணமாக அவளுக்கு இதெல்லாம் உமட்டி கொண்டு வந்தது. நந்தனாவிற்கு ஓய்வு கொடுக்க வேண்டி வசுமதியை இங்கு ஆள் மாற்றி விட்டனர். வேண்டா வெறுப்பாக இங்கு அவள் இருந்தாலும் சாந்தியின் நிலை அவளது மனதினை வேதனைப்படுத்தியதில் அவள் முழுமனதுடன் தன்னாலான உதவிகளைச் செய்தாள். ஆனாலும் அவள் இதைச் செய்ய மிகவும் தயங்கினாள்.

சொர்ணாவின் தடுமாற்றத்தை கண்டு மணிமாறன் அவள் அருகில் வந்து உதவி செய்தான்.

"நீ இதெல்லாம் செய்ய வேண்டாம்ப்பா..." சொர்ணா கண்ணீர் வழிய கூறினாள்.

"சாந்தி உங்களுக்கு மட்டும் மகள் இல்லை. எனக்கும் அவள் மகள் தான்." என்றவனது விழிகளில் இருந்து இரு துளி விழிநீர் சொட்டியது.

இன்னும் சுயநினைவு திரும்பாது வாடிய கொடி போல் படுத்திருந்த சாந்தியின் தலையை மென்மையாய் வருடி கொடுத்தவன் அடுத்த நொடி தாங்க முடியாது வெளியில் விருட்டென்று சென்றுவிட்டான். அப்போது தான் மணிமாறன் நல்ல மனிதனாய் வசுமதி மனதில் அழுத்தமாய்க் காலடி எடுத்து வைத்தான்.

அதனால் வசுமதி தனது கணவன் கைது செய்யப்படுவதை வன்மையாகக் கண்டித்துத் தடுத்தாள்.

"மேடம், நீங்க இதுக்கு ஒத்துழைக்கலைன்னா உங்களையும் சேர்த்து அரெஸ்ட் பண்ண வேண்டி வரும்." அந்த அதிகாரி அவளை மிரட்ட...

"பண்ணுங்க... எனக்குப் பயமில்லை." என்றாள் அவள் தைரியமாக...

"மதி, நீ பேசாமல் இரு. சந்தேகம் தானே படுறாங்க. ஆனா இது உண்மை இல்லையே. நீ அக்கா கூடத் துணைக்கு இரு. அப்படியே இந்த விசயத்தைப் புகழுக்கு சொல்லிரு." என்றுரைத்துவிட்டு மணிமாறன் அவர்களுடன் கிளம்பி சென்றான்.

வசுமதிக்கு புகழேந்தி வேலையில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டு இருப்பது தெரியாது. அவள் உடனே புகழேந்திக்கு அழைத்து விசயத்தைக் கூறினாள். மறுமுனையில் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த புகழேந்திக்கு எல்லாம் புரிந்து போனது, இது யார் வேலையென்று!

"வருண், உன் மேல் சந்தேகம் மட்டும் தான் இருந்தது. ஆனால் இப்போது உனது குற்றம் உறுதி செய்யப்பட்டு விட்டது. விரைவில் உன்னைத் தேடி வருகிறேன். உயிரை விடத் தயாராயிரு!"

புகழேந்தி தனக்குள் சபதம் எடுத்துக் கொண்டான்!!!

ஸ்மிதாவின் பதினெட்டாவது பிறந்தநாள் விழா கோலாகலமாகக் கொண்டாடி முடிந்தது. ஸ்மிதா, வந்தனா, சிந்தியா மூவரும் களைப்பில் உறங்க சென்றுவிட்டனர். ஆண்கள் மூவரும் மது பாட்டில்களை எடுத்து வைத்துக் கொண்டு தோட்டத்தில் அமர்ந்தனர். வருண் தந்தையுடன் சேர்ந்து மது அருந்துகிறோமே என்கிற லஜ்ஜை சிறிதுமின்றி வரதராஜன் முன்னிலையில் மது பாட்டிலை கையில் எடுத்து அப்படியே வாயில் சரித்தான்.

"டேய் மவனே, குடலு வெந்துற போகுதுடா..." வரதராஜன் அவனது கையிலிருந்த பாட்டிலை பிடுங்க முயன்றார்.

"விடுப்பா, நான் சந்தோசமா இருக்கேன்." அவன் தகப்பனது கையைப் பிடித்துத் தடுத்தான்.

"எங்களுக்குத் தெரியாம அப்படி என்னடா சந்தோசம்?"

"ஒரே கல்லில் மூணு மாங்காய்." அவன் கண்சிமிட்டி சிரித்தான்.

"புரியலையேடா..."

தந்தையும், மகனும் பேசுவதைக் கேட்டபடி அமைதியாக மது அருந்தி கொண்டிருந்தார் அகத்தியன்.

வருண் நடந்த எல்லாவற்றையும் அவர்களிடம் கூற துவங்கினான். அவன் கூறியதை கேட்டு அவர்கள் இருவரது போதையும் அப்படியே சர்ரென்று இறங்கி போனது.

"என்னடா சொல்ற?" அவர்கள் மனதில் திகில் பரவியது.

"சாந்தியை படுக்க வச்சு, அதில் மணியை மாட்ட வச்சாச்சு. அதே மாதிரி வது ட்விட் பார்த்து புகழை வேலையில் இருந்து நீக்கியாச்சு. இனி காவல்துறை நம் நண்பன். அதே போல் ரன்னிங் ரேஸ்க்கான கோல்டு மெடல் நம் ஸிமிக்கே." என்று அவன் கோணல் சிரிப்பு சிரிக்க... அதைக் கேட்டு

வரதராஜன், அகத்தியன் முகத்தில் மெல்ல புன்னகை அரும்பத் துவங்கியது. ஒரு கட்டத்தில் இருவரும் மனம் விட்டு வாய்விட்டு சிரித்தனர்.

"சபாஷ் வருண்." இருவரும் அவனது செயலை பாராட்டினார்கள். தங்களது மகளைப் போன்ற சின்னஞ்சிறு சிறுமி பாதிக்கப்பட்டு இருப்பதை அவர்கள் கணக்கில் எடுத்து கொள்ளவில்லை. பல்வலியும், தலைவலியும் தனக்கு வந்தால் தான் தெரியும் போலும்.

"சீக்கிரம் நீங்க ரெண்டு பேரும் இந்தக் கேசிலிருந்து வெளியில் வர பாருங்க. அங்கிள், இது தான் நல்ல சந்தர்ப்பம், உங்க மச்சினனை வெளியில் கொண்டு வந்திருங்க." வருண் அகத்தியனிடம் கூறினான்.

"அவனை எங்கே வச்சிருக்கான்னே தெரியலையே." அகத்தியன் யோசனையாய் நெற்றியை சொறிந்தார்.

"கண்டுபிடிச்சிரலாம் அங்கிள்." வருண் அவரைத் தேற்றினான்.

இரவோடு இரவாகப் புகழேந்தி தன்னிடம் இருந்த ஆதாரத்தைத் தனது மேலதிகாரியிடம் கொடுத்து விட்டான்.

"இது இரண்டு வருடங்களுக்கு முன் என் தங்கை பிறந்தநாளின் போது சிசிடிவி கேமிராவில் பதிவான காட்சிகள். அந்த நேரம் என் தாத்தாவுக்குத் தொழில்ரீதியாய் கொலை மிரட்டல் வந்திருந்தால் செக்யூரிட்டி ரீசனுக்காக இதைப் பதிந்து பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். தேங்க் காட், அது இப்போது உபயோகமாகிறது." என்றவன்,

"விருந்து நடைபெற்ற இரண்டு மணி நேரமும் இதில் அப்படியே ஒரு நொடி கூட வீணாகாது பதிவாகி இருக்கிறது. வந்தனா, அவளது அண்ணன் வருண் அங்கு வந்து இருந்தது சுமார் அரை மணி நேரம் மட்டுமே. நான் வந்தவர்களை உபசரித்து, மரியாதை நிமித்தம் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு என் தாத்தா, பாட்டியிடம்

சென்றுவிட்டேன். விருந்து முடியும் வரை நான் அவங்க கூடத் தான் இருந்தேன். வந்தனா கிளம்பி போகும் போது கூட அவள் தான் என்னிடம் சொல்லிவிட்டு போக வந்தாள். நான் செல்லவில்லை. நீங்க இதைப் பார்த்தாலே தெரியும்." என்று அவன் முடித்துக் கொண்டான்.

பென்டிரைவை வாங்கித் தனது மடிகணினியில் போட்டு பார்த்த மேலதிகாரி அவன் கூறியது அனைத்தும் உண்மை என்பதை அறிந்து கொண்டார்.

"பொண்ணு கண்ணு உன் மேலேயே இருக்கேய்யா. லவ் வாரா(போர்)?" அவர் கண்சிமிட்டி சிரித்தார்.

"சார், இதை என் மனைவி கேட்டால் பத்ரகாளியாக மாறிவிடுவாள்." என்று அவனும் கேலி செய்து சிரித்தவன் பின்பு சீரியசான குரலில்,

"காதல் ஒருவரை கௌரவப்படுத்தணும் சார். இப்படிக் கேவலப்படுத்த கூடாது." என்றான் முகம் இறுக...

"ம், புரியுது மேன். இந்த வீடியோவை டிவிட்டரில் அப்லோட் செய்து உன் பக்க நியாயத்தை நீ சொல்லிரு. அப்புறம் நாளைக்கே ட்யூட்டில் ஜாயின் பண்ணிரு."

"எஸ் சார்..." என்று விறைப்பாக வணக்கம் வைத்தவன்,

"அப்படியே வந்தனாவை அரெஸ்ட் பண்றதுக்கான வாரண்ட் கொடுக்கணும் சார். வந்தனா மீது அவதூறு வழக்கு பதிய போகிறேன். அவளை அரெஸ்ட் பண்ணும் அதிகாரம் எனக்கு வேணும்." என்று அவன் கோரிக்கை வைத்தான். அதற்கு அவர் சரியென்று சம்மதித்தார்.

மறுநாள் காலையில் வேலைக்குக் கிளம்பிய புகழேந்தியின் தலையில் அவனது தொப்பியை எடுத்து வந்து மாட்டி அழகு பார்த்தாள் அவனது அழகு மனையாட்டி.

"சல்யூட் மேடம்." அவன் மனைவிக்கு விறைப்பாக வணக்கம் வைக்க... அவளது முகம் வெட்கத்தில் சிவந்து போனது.

"கிண்டல் பண்ணாதீங்க மாமா."

"கிண்டல் இல்லைடி பெண்ணே... மரியாதை. இப்படிப் புரிதலான மனைவி யாருக்கு கிடைக்கும்!" அவனது வார்த்தைகளில் அத்தனை பெருமிதம் வழிந்தது. அவனது பெருமிதத்தை மனைவியாய் ரசித்துப் பார்த்தவளுக்குச் சகோதரனின் நினைவு வந்து மனதை கலங்க அடித்தது.

"மாமா, அண்ணாவை வெளியில் எடுக்க முடியும் தானே?" அவள் கவலையுடன் கேட்க...

"அதுக்கான வேலைகளில் இறங்கியாச்சு. இன்னைக்கு மாலையில் மணி வீட்டில் இருப்பான்." அவன் ஆறுதல் கூறினான்.

"அண்ணி கிட்ட ஒரு வார்த்தை சொல்லிருங்களேன்..."

வசுமதியை பற்றி அறியாதவளாய் கூறிய மனைவியின் அறியாமையை நினைத்து பெருமூச்சு விட்ட புகழேந்தி,

"நிச்சயம் சொல்றேன்." என்றவன் தனது தங்கையைத் தேடி சென்றான்.

மணிமாறனின் சிறிய வீட்டின் முன்னிருந்த வராந்தாவில் தொலை தூரத்தை வெறித்தபடி அமர்ந்திருந்த தங்கையைக் கண்டதும் புகழேந்தியின் புருவங்கள் கேள்வியாய் உயர்ந்தது.

"வசு..." அவன் அழைத்ததும் அவள் சட்டென்று திரும்பி பார்த்தாள்.

வசுமதி மனதில் மணிமாறன் கணவனாகப் பதிந்து இருக்கிறானா? இல்லையா? என்பது புகழேந்திக்குத் தெரியாது. இந்த நேரத்தில் மணிமாறனை பற்றித் தான் சொன்னால் தங்கை காது கொடுத்து கேட்பாளா? என்று அவனுக்கு மிகுந்த தயக்கமாக இருந்தது.

"புகழ், மணி மேல் எந்தத் தப்பும் இருக்காது. அவன் அப்படிச் செய்யக்கூடிய ஆள் இல்லை. நான் கூட அவன் சாந்தி கூடப் பழகுவது கண்டு முகத்தைச் சுளித்து இருக்கிறேன் தான்.

ஆனா அவனுக்கு அவள் மகள் மாதிரி என்கிற உண்மை தெரிஞ்சதும் என்னை நானே அருவருப்பா உணர்ந்தேன். எவ்வளவு கீழ்த்தரமான புத்தி எனக்கு, இல்லையா புகழ்? மணி ரொம்ப நல்லவன்... அவனை எப்படியாவது வெளியில் எடுத்து விடு."

தங்கை கூறியது கேட்டு புகழேந்திக்கு மயக்கம் வராத குறை தான். அண்ணி புரிதலுடன் இருப்பது கண்டு நந்தனாவிற்கு மிகுந்த சந்தோசமா இருந்தது.

"நீங்க பேசிக்கிட்டு இருங்க... நான் போய்க் காபி போட்டு எடுத்துட்டு வர்றேன்." என்ற நந்தனா சந்தோசத்துடன் வீட்டினுள் சென்றாள்.

"ரொம்பச் சந்தோசம் வசு." புகழ் தங்கையின் தலையை ஆறுதலாய் வருடி கொடுத்தான்.

"புகழ், நான் ரொம்பத் தப்புப் பண்ணிட்டேன். வருணை காதலிச்சதா நினைச்சது முதல் தப்பு. மணியை மரியாதை இல்லாமல் நடத்தியது இரண்டாவது தப்பு. எங்க திருமணம் முடிஞ்சும் அதைத் தொடர்ந்தது மூன்றாவது தப்பு. இப்படி நிறையத் தப்புகள் நான் பண்ணி இருக்கிறேன். ஆனா கல்யாணத்தைத் தவறா எடுக்கும் பழக்கம் எனக்கு இல்லை. நம் தாத்தாவின் ரத்தம் கொஞ்சமாவது என் உடம்பில் ஓடுது இல்லையா. வருண் ஏமாத்திய வலியில் கல்யாணத்தை நிறுத்த கூட முடியாது ஸ்தம்பிச்சு போய் இருந்தேன். மணியைக் கல்யாணம் பண்ணும் போது கூட எனக்கு அவன் மேல் பெருசா எந்த விருப்பம் இருந்தது கிடையாது. ஆனா இப்போ இரண்டு நாளா அவனை ஹாஸ்பிட்டலில் பக்கத்தில் இருந்து பார்க்கும் போது தான் தெரியுது, அவன் ஒரு அருமையான மனிதன்னு. இப்பவும் அவன் மேல் மரியாதை, மதிப்பு இருக்கு. கணவனா, காதலனா அவன் என் மனதில் பதிஞ்சி இருக்கானா? என்று கேட்டால் அதுக்கு என்னிடத்தில் பதில் இல்லை. ஆனா உயிர் இருக்கும் வரை அவனை விட்டு பிரிய மாட்டேன். அவனோட மனைவியா தான் சாவேன். இது உறுதி."

"இது தான் திருமண வாழ்க்கைக்கான அடிப்படை வசு. இனி உன் வாழ்க்கை நல்லபடியாக அமையும்." புகழேந்தி மனமார அவளை வாழ்த்தினான்.

நந்தனா கொடுத்த காபியை அருந்திவிட்டு அவன் மனைவி, தங்கையிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்.

நேரே அலுவலகம் வந்து வேலையில் சேர்ந்த புகழேந்தி அகத்தியனின் வீட்டில் வந்தனா இருப்பதை அறிந்து அங்குச் சென்றான். அவன் வந்தனாவை கைது செய்வதற்குத் தடை விதித்த வரதராஜன், அகத்தியன், வருணை கண்டு,

"ஒருத்தங்க மேல பழி போடும் போது பார்த்து போடணும். அது உண்மையா? பொய்யா? என்று ஆராய்ந்து போடணும். என் மேல் சுமத்தப்பட்ட பழியை நான் பொய்ன்னு நிரூபிச்சிட்டேன். அது போல் உங்க பொண்ணு பண்ணின தப்புக்குத் தண்டனை அனுபவிக்கச் சொல்லுங்க. இரண்டு நாள் உள்ளே வச்சிட்டு எச்சரிக்கை பண்ணி அனுப்பிருவாங்க. அவ்வளவு தான்." என்றவன் அவர்களைப் பார்த்து கேலியாய்,

"ஆனா இந்த அவமானம் ஆயுசு வரை அவளைத் துரத்தும். அது தான் எனக்கு வேணும்." என்றவன் அவளது கைகளில் விலங்கு மாட்ட வந்தான். அவள் விலங்கு மாட்ட விடாது திமிறினாள்.

"உனக்கு வந்தா ரத்தம். இதே இது எனக்கு வந்தா தக்காளி சட்னியா? மீடூ எதுக்காக ஆரம்பிக்கப்பட்டது தெரியுமா உனக்கு? அது பத்தி தெரியாம உன்னோட சுயலாபத்துக்காகப் பயன்படுத்திக்கிட்டியே. ஒட்டுமொத்த பெண்களோட வலியை வலியுறுத்துறது அது. பெண்களோட மனசாட்சி, தப்பு செய்யும் ஆண்களுக்குச் சாவு மணி அது. அதைப் போய் நீ தவறா பயனபடுத்திக்கிட்டியே. உன்னை எல்லாம்..." என்று மேலே திட்ட போனவன் தன்னுடன் வந்திருந்த பெண் காவலர்களிடம் அவளைக் கைது செய்யும் பொறுப்பை ஒப்படைத்தான்.

அவர்கள் வந்தனா கதற கதற அவளைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போனார்கள். வரதராஜன் பதவி இருந்தும் செயலற்று போனவராய் நின்றிருந்தார்.

"இது ஆரம்பம் தான். அடுத்த ஆப்பு உங்க மூணு பேருக்கு தான்." என்று கூறியவன் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அங்கிருந்து சென்றான்.

வந்தனாவை காவலில் வைக்க உத்தரவிட்ட புகழேந்தி அவளிடம், "தன்வினை தன்னைச் சுடும்." என்றான் கிண்டல் குரலில்... அவளது முகம் அவமானத்தில் கறுத்துப் போனது.

அடுத்து புகழேந்தி செய்த முதல் வேலை மணிமாறனை சென்று பார்த்தது தான். மணிமாறனை வெளியில் எடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வழக்கறிஞரை வைத்து பார்த்துவிட்டே அவன் இங்கு வந்தது.

"சாரி மணி... என்னால் சரியான நேரத்தில் உனக்கு உதவ முடியாம போயிருச்சு." என்று புகழேந்தி வருத்தத்துடன் கூற...

"விடுடா புகழ்... அது கூட எனக்கு வருத்தம் இல்லை. ஆனா நான் எப்படிடா சாந்தியை போய்..." மேலே பேச முடியாது அவனது விழிகள் கலங்கி போனது.

"உன்னைப் பத்தி எங்களுக்குத் தெரியாதா மணி." புகழேந்தி அவனை ஆறுதல் படுத்தினான்.

"ஜாமீன் எடுக்க லாயருக்குன்னு ஏற்பாடு பண்ணிட்டேன் மணி." என்ற புகழேந்தியை நிராசையுடன் பார்த்தான் மணிமாறன்.

"ஜாமீன் கிடைச்சிருமா?"

"கட்டாயம் கிடைச்சிரும். சாந்தி கடத்தப்பட்ட நேரத்தில் நீ கிரவுண்ட்டில் வெயிட் பண்ணிக்கிட்டு இருந்தது, பிறகு நீ அவளைத் தேடி போனது, அதுக்குப் பிறகு சாந்தியின்

பெற்றோருக்கு ஆதரவாய் நீ அங்கேயே இருந்தது... இதுக்கு எல்லாம் சிசிடிவி கேமிரா ஆதாரம் இருக்கு. சாந்தியின் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களும் இதுக்குச் சாட்சி. அதனால் நீ நிரபராதி என்று சுலபமா நிரூபிச்சிரலாம்." புகழேந்தி கூறியதை கேட்டு மணிமாறனின் முகத்தில் நம்பிக்கை ஒளி பாய்ந்தது.

"இன்னைக்கு மாலையில் நீ வீட்டுக்கு வந்திரலாம்."

"இதை யார் பண்ணினாங்கன்னு தெரிஞ்சதா புகழ்?"

"சந்தேகம் மட்டுமே இருக்கு. உறுதியாய் சொல்ல முடியலை. சாந்தி மட்டும் கண் முழிச்சு பேசட்டும். அவள் மட்டும் ஆள் யாருன்னு அடையாளம் காட்டிட்டா போதும். அவனை..." ஆத்திரத்தில் பல்லை கடித்தான் புகழேந்தி.

"சாந்தி நல்லபடியா கண் முழிக்கணும்." மணிமாறன் கடவுளிடம் வேண்டி கொண்டான். புகழேந்தியின் பிரார்த்தனையும் அதுவாகவே இருந்தது.

அங்கு வரதராஜன், அகத்தியன், வருண் மூவரும் தங்களுக்குள் சதியாலோசனையில் ஈடுபட்டு இருந்தனர். இதில் வருணுக்கு தான் அதிகப் பயம் வந்தது. ஏனெனில் மணிமாறன் வெளியில் வந்துவிட்டால் அவனுக்குத் தானே ஆப்பு. அதைவிடச் சாந்தி கண்விழித்து விட்டால்??? நினைக்கும் போதே அவனுக்குக் குப்பென்று வியர்த்தது. தவறு செய்யும் போது வராத பயம், இப்போது வந்தது. அதை அவன் அப்படியே தனது தந்தையிடம் கூறினான்.

"அப்பா, சாந்தி கண் முழிச்சு எனக்கு எதிரா வாக்குமூலம் கொடுத்து விட்டால்...? அந்தப் புகழேந்தி என்னை அரெஸ்ட் பண்ணிருவான். அதுக்கு முன்னாடி நான் வெளிநாட்டுக்கு தப்பிச்சு போயிரவா?"

"அடேய், யாருடா இவன்? கூறு கெட்டவன்... நீயே எங்கப்பன் குதிருக்குள்ள இல்லைன்னு காட்டி கொடுத்துருவ போலிருக்கே. அப்படி மட்டும் அவன் அரெஸ்ட் பண்ண

வரட்டும். உன் அப்பன் யாருங்கிறதை அவனுக்குக் காட்டுறேன்." வரதராஜன் மகனை சமாதானப்படுத்தினார்.

தகப்பன் தந்த அசட்டுத் தைரியத்தில் வருண் நிம்மதியுடன் இருந்தான்!!!

மணிமாறன் நிரபாரதி என்று விடுதலை செய்யப்பட்டு அவன் வீட்டிற்கு வந்து ஐந்து நாட்களாகி விட்டது. இன்னமும் சாந்தி கண் விழிக்கவில்லை. அவன் மருத்துவமனைக்கும், வீட்டிற்கும் மாறி மாறி அலைந்து கொண்டிருந்தான். அன்றும் காலையில் அவன் அவசரமாக மருத்துவமனைக்குக் கிளம்பி கொண்டிருந்தான். அவன் காலை உணவு உண்ண மறந்து செல்வதைக் கண்ட வசுமதி அவன் முன் போய் நின்றாள். மணிமாறன் அவளைக் கேள்வியாகப் பார்த்தான். இருவருக்குள்ளும் இன்னமும் உறவு சுமூகமாகவில்லை என்றாலும் முன்பு போல் முகத்தைத் திருப்பிக் கொள்வது இல்லை, முக்கியமாக அவள்...

"சாப்பிட்டுட்டு போகலாமே?"

"வேண்டாம், நேரமாச்சு..." என்றபடி அவளைச் சுற்றிக் கொண்டு அவன் கிளம்ப எத்தனிக்க... அவள் அவனது கையைப் பற்றிக் கொண்டு,

"நீ ஹாஸ்பிட்டலில் சாப்பிடவும் மாட்ட மணி. ஒரு வாய் சாப்பிட்டுட்டு போ." என்றவளை கண்டு அவன் அதிசயமாகப் பார்த்தான்.

அதைவிட அவள் அவனது கையைப் பிடித்திருப்பதைக் கண்டு அதை வித்தியாசமாகப் பார்த்தவன் அவளைக் கேள்வியாய் ஏறிட்டுப் பார்த்தான். அவனது பார்வையில் சட்டென்று தனது பிடியை தளர்த்தியவளுக்கு முகம் சிவந்து போனது. கணவனது பார்வையில் ஏனென்று புரியாத ஒரு உணர்வு அவளைத் தாக்கியது.

"வா மணி..." என்று முணுமுணுத்து விட்டு அவள் முன்னே செல்ல...

மணிமாறன் மனைவியின் மாற்றத்தை நம்ப முடியாது திகைத்தவன் பின்பு தனது தலைமுடியை கோதியபடி தன்னை மீட்டு கொண்டவன் சிறு சிரிப்புடன் அவளைத்

தொடர்ந்தான். எத்தனை தவறு அவள் மீது இருந்த போதும் அவனால் அவளை வெறுக்க முடியவில்லையே. அத்தை மகள் என்பதாலா? அல்லது சிறுவயது தோழி என்பதாலா?

உறவு என்னும் மந்திரம் இருவரையும் இறுக பிணைத்திருந்தது! தேவகி மகனையும், மருமகளையும் கண்டு நிம்மதியுற்றவராய் மாமனார் வீடு நோக்கி சென்றார்.

மணிமாறன் மருத்துவமனை வந்து பார்த்த போது சொர்ணா அவனை மகிழ்வுடன் எதிர்கொண்டார். அவரது முக மலர்வு அவனுக்கு எதையோ உணர்த்தியது.

"சாந்தி கண் முழிச்சிட்டாளா?" என்று அவன் சந்தோசமும், ஆர்வமுமாய்க் கேட்டான்.

"ஆமா தம்பி, கண் முழிச்சு எங்களை எல்லாம் பார்த்தாள். ஆனா எதுவும் பேசலை."

"இதுவே நல்ல முன்னேற்றம் தான்." என்றவன் உடனே புகழேந்திக்கு தொடர்பு கொண்டான்.

மணிமாறன் விசயத்தைக் கூறியதும் கவனமாய்க் கேட்டுக் கொண்ட புகழேந்தி, "யாரும் சாந்தியை பார்க்க அனுமதிக்காதே மணி. முக்கியமா மீடியாவை... அதே மாதிரி சந்தேகப்படும்படியா யாராவது அங்குத் தென்பட்டால் எனக்கு உடனே இன்ஃபார்ம் பண்ணு. இனிதான் நாம கவனமா இருக்கணும்." என்று கூற... மணிமாறன் அதைச் சரியென்று கேட்டுக் கொண்டான்.

சுமார் இரண்டு மணி நேரம் கழித்துச் சாந்தி மீண்டும் கண் விழித்தாள். அதைக் கண்டு சொர்ணா, பரசு, மணிமாறன் மூவரும் மகிழ்ந்து போயினர். சின்னவளோ ஆண்களைக் கண்டு அச்சம் அடைந்தவளாய் அன்னையை அணைத்துக் கொண்டு கதறினாள். ஏனெனில் அவள் அடைந்த துன்பம் அப்படிப்பட்டது. ஆண்கள் இருவரின் முகமும் வெளிறிப் போனது. மணிமாறன் முதன்முறையாகத் தான் ஆணாய் பிறந்ததற்காக வருத்தப்பட்டான். சாந்தியின் வேதனை

தாங்க முடியாது அவன் வெளியேறிவிட... அவனைத் தொடர்ந்து பரசுவும் துக்கத்தை அடக்கி கொண்டு வெளியில் வந்தான்.

"ம்மா, வலி தாங்க முடியலைம்மா." என்று வலியில் அனத்தியவளை கண்டு சொர்ணா செய்வதறியாது பரிதவித்தார்.

இருகால்களும் உடைந்த நிலையில், வல்லூறுகளாய் வேட்டையாடப்பட்ட சின்னஞ்சிறு புறாவின் வேதனையை வார்த்தையில் வடிக்கவும் வேண்டுமோ! எல்லாம் வல்ல தெய்வமே அவளைக் கண்டு கண்ணீர் வடித்தது. தான் ஆண்களை வலிமையுடன் படைத்தது பெண்களை இப்படிப் பலாத்காரம் செய்ய அல்லவே... பெண்களைப் பாதுகாக்க அல்லவா! இதை இந்த ஆண்களுக்கு யார் உணர்த்துவது? என்று கடவுளே வெறிப்பிடித்து அலையும் ஆண்களைக் கண்டு அதிர்ந்து போனார்.

"கால் வலியை விட உச்சா போகிற இடத்தில் தான் அதிகம் வலிக்குதும்மா. என்னால் தாங்கிக்க முடியலை. என்னைக் கொன்னுரும்மா." என்று வேதனையில் அரற்றியவளை சொர்ணா துக்கம் தாங்காது தன்னுடன் அணைத்துக் கொண்டார். மகளின் நிலைமையைக் கண்டு அவரால் கண்ணீர் மட்டுமே வடிக்க முடிந்தது.

சாந்தி கண்விழித்துப் பேசியது கேட்டு புகழேந்தி உடனே அங்குக் கிளம்பி வந்துவிட்டான். ஆண்களைக் கண்டதும் சாந்தி விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்தாள். பயத்தில் நடுங்கியவளாய் அவள் அன்னையின் பின்னே மறைந்து கொண்டாள். பெண் காலவரை அங்கு இருக்கச் சொல்லிவிட்டு புகழேந்தி வெளியில் வந்து நின்றான். ஏற்கெனவே அங்கு நின்று கொண்டிருந்தனர் மணிமாறனும், பரசுவும். ஆண்கள் யாராலும் மற்றவர்கள் முகத்தினைப் பார்க்க முடியவில்லை. அப்படியொரு தர்ம சங்கடமான சூழ்நிலை அங்கு நிலவியது.

பெண் காவலர் சாந்தியின் அருகில் அமர்ந்து அவளைக் கனிவுடன் பார்த்தார். புகழேந்தியின் கட்டளை அது.

சாந்தியிடம் கனிவாகப் பேசி விசயத்தை வாங்க வேண்டும் என்று... அதனால் மற்றவர்களிடம் காட்டும் அதிகாரத்தை அவர் அவளிடம் பயன்படுத்தவில்லை.

"அன்னைக்கு என்ன நடந்ததும்மா?"

"அன்னைக்கு... அன்னைக்கு..." என்றவளால் மேலே பேச முடியவில்லை. அந்த நிகழ்வை நினைத்து அவளுள் அச்சம் பரவியதில் அவளது நுரையீரல் மூச்சுக்காற்றுக்கு ஏங்கி தவித்தது.

சொர்ணா மகள் அருகில் வந்து தடவி கொடுக்கும் முன் அந்தப் பெண் காவலர் சாந்தி அருகில் சென்று அவளது நெஞ்சில் தடவி கொடுத்து அவளை அமைதிப்படுத்தினார்.

"நானும் ஒரு பெண் தான் சாந்தி. இரண்டு பெண் குழந்தைகளுக்கு அம்மாவும் கூட... எனக்கு உன்னுடைய துன்பம் புரியுது. நீ குற்றவாளிகளை அடையாளம் காட்டினால் தானே அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க முடியும்? உன்னை இப்படி ஆக்கியவர்களைச் சும்மா விடலாமா?"

அதற்கு அவளிடம் இருந்து பதில் இல்லை. அவள் மௌனமாய் அழுது கரைந்தாள்.

"உன்னை மாதிரி இனி வேறு எந்தப் பெண்களும் பாதிக்கப்படக் கூடாதுன்னு நீ நினைச்சேன்னா... அவங்களை எங்களுக்கு அடையாளம் காட்டு. என் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு வேண்டியும் நான் உன்னைக் கெஞ்சி கேட்டுகிறேன்."

சாந்தியால் இன்னமும் வேதனை, வலியை தாங்க முடியவில்லை. இது போல் வேறு பெண்களும் பாதிக்கப்படக் கூடாது என்று நினைத்த சாந்தி தனக்கு நேர்ந்த அவலத்தை மெல்ல கூற துவங்கினாள்.

அதைக் கேட்டு சொர்ணா மற்றும் பெண் காவலரின் விழிகளில் விழிநீர் உடைப்பெடுத்தது. சொர்ணா மகளின் நிலையைக் கேட்டு கதறியழுதார். எந்தத் தாய்க்கும் இந்த

நிலை வர கூடாது. கனத்த மனதுடன் சாந்தி கூறியதை பதிவு செய்த காவலர் வெளியில் வந்தார்.

"இதில் எல்லாம் இருக்கிறது." என்றவரின் முகமே சொல்லியது அவரது வேதனையை... சாந்தியை போல் தினமும் எத்தனையோ பேரை அவர் சந்திக்கிறார் தான். ஆனாலும் ஏனோ அவரால் மனம் தாங்க முடியவில்லை.

சாந்தியின் வாக்குமூலத்தை ஆதாரமாகக் கொண்டு புகழேந்தி வருணை கைது செய்தான். வரதராஜனின் வாக்குவாதங்கள், அவருடைய வழக்கறிஞரின் வாதங்கள் எதுவுமே புகழேந்தியை கட்டுப்படுத்தவில்லை.

"பாதிக்கப்பட்ட பெண் சாந்தியின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு வருணை கைது செய்து இருக்கிறோம். அவர் மீது குற்றம் இல்லையென்றால் அதற்கான ஆதாரத்தை நீங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அவருக்கு விடுதலை வாங்கிக் கொடுங்கள். அதில் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அதற்கு முன் எங்களது கடமையைச் செய்ய விடுங்கள்."

குவிந்திருந்த ஊடகங்கள் முன்னிலையில் பவ்யமாகப் பேசிய புகழேந்தியை வரதராஜனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இன்று வெள்ளிக்கிழமை... நாளை, நாளை மறுநாள் சனி, ஞாயிறு இரண்டு நாட்களுமே விடுமுறை நாட்கள். இனி திங்கள் அன்று தான் நீதிமன்றம் செயல்படத் துவங்கும். புகழேந்தி திட்டமிட்டே தனது காயை நகர்த்தி இருப்பது கண்டு வரதராஜன் ஆத்திரத்தில் கொந்தளித்தார். அன்றே அவர் அனைத்துத் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும் தனது பேட்டியை அளித்தார்.

"இது திட்டமிட்ட அரசியல் சதி. வேண்டுமென்றே நிகழ்த்தப்பட்ட தனிநபர் தாக்குதல். என் அரசியல் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கவும், என் மகளைப் பழிவாங்கவும் ஏசிபி புகழேந்தி இப்படி நடந்து கொள்கிறார். மீடூவில் என் மகள் அவருக்கு எதிராகப் பதிவு போட்டதற்குப்

பழிவாங்கும் படலம் இது. என் மகன் ஒன்றும் அறியாதவன். நிரபராதி." என்று அவர் ஆவேசமாகப் பேட்டி கொடுத்தார்.

அவரின் பேட்டியை அடுத்து சாந்தியின் கற்புநெறி பற்றி எல்லாத் தொலைக்காட்சி அலைவரிசையிலும் நன்றாக அலசப்பட்டது. சாந்தியின் இந்த நிலைக்குக் காரணம் யார்? என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைப்பில் கருத்து கூறினர்.

"அந்தப் பெண்ணிற்கு ஏற்கெனவே பாய் பிரெண்ட் இருந்திருக்கிறது. அவனுடன் உல்லாசமாக இருக்கப் போன இடத்தில் அவன் தனது நண்பர்களையும் உடன் அழைத்து வந்து கூட்டுப் பலாத்காரம் செய்து விட்டான். இந்தக் காலப் பெண்களுக்கு அடக்கம் ஒடக்கம் என்பதே இல்லை. இதற்குத் தான் பெண்களை வீட்டிலேயே பாதுகாப்பாய் இருக்கச் சொல்கிறோம். கேட்டால் தானே."

"சாந்தியுடன் படிக்கும் பையன் அவளிடம் காதலை சொல்லியிருக்கிறான். இந்தப் பொண்ணு மறுத்திருக்கு. அதான் கடத்திட்டு போய் வச்சு செஞ்சிட்டான் போலிருக்கு."

"ஓடுறேன் பேர்வழின்னு டைட் டீசர்ட்டும், பேண்ட்டும் போட்டுக்கிட்டு தினமும் சைக்கிளில் போயிட்டு வந்தால் எந்த ஆம்பிளைக்குத் தான் ஆசை வராது. அதான் சமயம் கிடைச்சதும் தூக்கிட்டு போய் அனுபவிச்சிட்டான். பெண்கள் போடும் ஆடைகளில் கண்ணியம் இருக்கணும்." என்று ஆணியவாதிகள் ஆங்காங்கே பொங்கினார்கள்.

"பெண்களுக்குச் சொந்த நாட்டில், சொந்த வீட்டில் பாதுகாப்பு இல்லை. இப்படியே போச்சுன்னா பெண் குழந்தைகளுக்குப் பஞ்சம் வந்திரும்." சில தாய்மார்கள் வேதனையுடன் பேட்டி அளித்தனர்.

இவை அனைத்தையும் வசுமதி பார்த்து கொண்டிருந்தாள். வருணின் மறுபக்கம் தெரிந்து அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இப்படிப்பட்ட ஒருவனையா அவள் காதலித்தாள் என்று அவளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இப்போது

அந்த வருத்தத்தை மீறி அவளது மனதில் நிம்மதி எழுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை.

மிகுந்த தயக்கத்துடன் அவள் அறைக்குள் நுழைந்தாள். கணவனின் முகத்தைப் பார்க்கும் சக்தி அவளுக்கு இல்லை. தெரிந்தே பாழும் கிணற்றில் விழ இருந்தவளை எந்தக் கணவன் தான் மன்னிப்பான். மணிமாறனும் தூங்காது ஜன்னல் வழியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"மணி..." அவளது அழைப்பில் அவன் திரும்பி பார்த்தான்.

"சாரி..." அவளது மன்னிப்பை அவன் வியப்பாய்ப் பார்த்தாலும் ஒன்றும் பேசவில்லை.

"என் மேல் உனக்குக் கோபம் இல்லையே?"

"நான் எதுக்கு உன் மேல் கோபப்படணும்?" அவன் புரியாது கேட்டான்.

"நான் வருணை..." மேலே சொல்ல முடியாது அவள் நிறுத்த...

"காதலிச்ச, அப்படித்தானே..." அவன் கேட்கவும் அவள் திகைப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"எனக்கு எல்லாம் தெரியும்." என்றவன் அவளைப் பப்பில் பார்த்ததைக் கூறினான். அவளது முகம் அவமானத்தில் சிவந்து போனது.

"எனக்கு உன் மேல் கோபம் வரலை மதி. வருணை விட நல்ல பையன் உனக்குக் கிடைக்கலையான்னு தான் ஆதங்கப்பட்டேன். நடந்து முடிந்ததைப் பத்தி நாம் எதுவும் பேச வேண்டாம் மதி. நம் வாழ்க்கையைப் பத்தி மட்டும் பேசுவோம்." அவன் அவளது பழைய காதலை பற்றிப் பேசுவதை அழகாய் தவிர்த்து விட்டான்.

ஆனால் அவள் கேட்கவில்லை. திருமணத்திற்கு முன் வருணுடன் அவள் பேசியது, அதற்கு அவன் தந்த பதில் எல்லாவற்றையும் கூறியவள்,

"அப்பவே அவனைத் தூக்கி எறிஞ்சிட்டேன். ஆனா அதுக்காக உன்னை ஏத்துக்கிடவும் இல்லை. இப்போ உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு. ஒரு நல்ல மனிதனாய்... ஆனால் கணவனாய்...? எனக்குத் தெரியலை." என்று உதட்டை பிதுக்கியவளை கண்டு அவனுக்குக் கோபம் வரவில்லை. மாறாகச் சிரிப்பு வந்தது.

"நானுமே அப்படி ஒரு மனநிலையில் தான் இருக்கிறேன். என் அத்தை மகளா உன்னைப் பிடிச்சிருக்கு. ஆனா மனைவியா...? அதற்கு விடை தெரியவில்லை. இந்த வாழ்க்கை என்ன வைத்துக் காத்திருக்கிறது என்பதும் புரியவில்லை."

"என்ன வைத்துக் காத்திருந்தாலும் சரி... நான் உன்னை விட்டு பிரிய மாட்டேன் மணி." உறுதியுடன் கூறியவளை கண்டு அவனது மனதில் ஏதோ ஒரு உணர்வு தோன்றி அவனைச் சிறிது அசைத்துப் பார்த்தது.

இப்போது பெண்ணவளின் அழகு பேரழகாய் அவனது கண்ணுக்குத் தெரிந்தது! கணவனது இமைக்காத பார்வையில் பாவையவளின் மதி முகம் செவ்வானம் சிவந்து போனது!

அவனது முகத்தைப் பார்க்க வெட்கம் கொண்டு, அவள் அங்கிருந்து அகன்று, படுக்கையில் போய் விழுந்து தலையணையில் முகத்தைப் புதைத்து கொண்டாள். அவனோ புன்னகையுடன் ஜன்னல் வழியே வெளியில் பார்த்தான். வானில் முழுமதி புன்னகையுடன் பவனி வந்து கொண்டிருந்தது. அதில் மனைவியின் முகத்தைக் கண்டவனாய் அவன் பரவசத்துடன் நின்றிருந்தான்!!!

வரதராஜன் செயலிழந்து போனவராய் அமர்ந்திருந்தார். அவர் அருகில் இருந்து ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தார் அகத்தியன். வந்தனா வெளிறி போன முகத்துடன் பேயறைந்தார் போன்று அமர்ந்திருந்தாள். அவள் மீடூவில் கலந்து கொண்டதால் அவளுக்குப் பார்த்திருந்த மாப்பிள்ளை வீட்டார் அவளை வேண்டாம் என்று கூறிவிட்டனர். அதைக் கேட்டு வந்தனா ஆத்திரத்தில் பொங்கி விட்டாள்.

"யுஎஸ்ல இருக்கீங்கன்னு தான் பேரு. ஆனா பேசுறது, நடந்துக்கிறது எல்லாம் சுத்த பட்டிக்காட்டுத்தனமா இருக்கு. ஒரு பெண் பாதிக்கப்பட்டதை வெளியில் சொன்னது தப்பா?" என்று அவள் அந்த மணமகனுக்கு அலைப்பேசியில் அழைத்துச் சண்டை போட...

"நீ உண்மையா பாதிக்கப்பட்டு இருந்திருந்தேன்னா உன் விசயத்தில் நாங்க பரந்த மனப்பான்மையோடு நடந்திருப்போம். ஆனா நீ...? ச்சீ, உன்னுடன் பேசவே எனக்கு அருவருப்பா இருக்கு." என்று அவன் கோபத்துடன் அழைப்பை துண்டித்து விட்டான்.

அந்த விசயம் அவளை மிகவும் ஒடுக்கி இருந்தது. இப்போது சகோதரனின் விசயம் வேறு சேர்ந்து கொள்ள... அவளுக்கு மிகவும் பயமாக இருந்தது.

"வரதா, நீ கவலைப்படுறதால ஒண்ணும் மாறிவிடப் போறது இல்லை. எப்படியும் பதினைந்து நாளில் வருணை கோர்ட்டுக்கு அழைத்து வந்து தானாக வேண்டும். அப்போது நாம் பார்த்துக்கலாம்." என்று அகத்தியன் ஆறுதல் கூறினார். அதில் சற்று அமைதி அடைந்த வரதராஜன்,

"நாளைக்கு உன் மச்சானை கோர்ட்டுக்கு கூட்டிட்டு வருவாங்களா? இல்லை என்கவுண்டர்ல போட்டு தள்ளிட்டாங்களா?" என்று கேட்க...

"அதான்ய்யா எனக்கும் தெரியலை." அகத்தியன் தீவிர யோசனையில் ஆழ்ந்தார்.

"என் மச்சான் நம்மளை காட்டி கொடுக்க மாட்டான். ஆனா குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவன் தண்டனையில் இருந்து தப்ப முடியாதே." அகத்தியனின் குரலில் பெரும் கவலை இருந்தது.

வரதராஜன் இந்தியாவிலேயே புகழ் பெற்ற வழக்கறிஞரை நேரில் சந்தித்துப் பேச வழக்கறிஞரின் உதவியாளரிடம் அனுமதி கேட்டார். அதைக் கேட்டு அகத்தியன் சற்று நிம்மதி அடைந்தார்.

மறுநாள் காலையில் அகத்தியனின் மச்சானை நீதிமன்றத்திற்குப் பலத்த காவலுடன் அழைத்து வந்தான் புகழேந்தி. அகத்தியனோ, வரதராஜனோ அங்கு வரவில்லை. ஏனெனில் அவர்கள் அங்கு வந்தால் அவர்களுக்கும் இதில் சம்பந்தம் இருப்பதாய் தோன்றிவிடுமே. அதனால் இருவரும் அங்கு வராது அமைதி காத்தனர்.

"குற்றவாளியிடம் மேலும் விசாரிக்க வேண்டி இருக்கிறது. இந்தப் பதினைந்து நாளில் அவர் எங்களது விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைக்கவில்லை. அதனால் மேலும் சில நாட்கள் அவரை எங்களது காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளிக்க வேண்டும்." என்று காவல்துறை சார்பாக ஒரு விண்ணப்பம் நீதிபதிக்கு விண்ணபிக்கப்பட்டது.

"என் கட்சிக்காரர் மீது எந்தவித ஆதாரங்களையும் காட்ட முடியாது திணறுகிறது நம் காவல்துறை. விசாரணை என்கிற பெயரில் அவரை அழைத்துச் சென்று கொலை செய்துவிட்டுக் காவல்துறை வழக்கம் போல் இந்த வழக்கை வேறு யார் மீதாவது பழி போட திட்டம் போடுகிறது. அதனால் என் கட்சிக்காரர் உயிருக்கு ஆபத்து இருப்பதால் அவரை விடுதலை செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன்." குற்றவாளி தரப்பில் வழக்கறிஞர் இவ்வாறு வாதாடினார்.

குற்றவாளியை கையும் களவுமாய்ப் பிடித்ததற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த காவல்துறை, இது தொடர்பாகக் குற்றவாளியிடம் விசாரிக்க வேண்டி உள்ளது. அதனால் அவரது காவலை நீட்டிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொண்டது.

அனைத்தையும் ஆராய்ந்து பார்த்த நீதிபதி குற்றாவளியின் காவலை மேலும் இரண்டு வார காலத்திற்கு நீட்டித்தார். அதை அறிந்து கொண்ட வரதராஜன், அகத்தியன் இருவரின் முகமும் இருண்டு போனது.

******

சதாசிவத்தைச் சுற்றி குடும்ப உறுப்பினர்கள் அமர்ந்து உண்டு கொண்டிருந்தனர். எப்போதும் போல் நந்தனா, தேவகி இருவரும் பரிமாறி கொண்டிருந்தனர். சதாசிவம் எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தவர் இறுதியாக மணிமாறனிடம் வந்து நின்றார். அவன் யாரையும் கண்டு கொள்ளாது அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வசுமதி அவனது தேவை அறிந்து பரிமாறியது கண்டு அவரது முகத்தில் புன்னகை மலர்ந்தது. தான் நினைத்ததைப் பேச இதுவே சரியான சந்தர்ப்பம் என்று அவருக்குத் தோன்றியது.

"மணி..." அவர் பேரனை அழைத்தார். அவன் உண்பதை நிறுத்திவிட்டு என்ன? என்று நிமிர்ந்து பார்த்தான்.

"நீ, தேவகி, நந்து எல்லாம் அந்த வீட்டை காலி பண்ணிட்டு இங்கே வந்திருங்க." என்று அவர் கட்டளை போல் கூற... அதைக் கேட்டு அவனுக்குக் கோபம் வந்தது.

"இவ்வளவு நாள் இல்லாத அக்கறை இப்போ என்ன புதுசா? நான் உங்க பேரன் என்பது இப்போது தான் உங்க கண்ணுக்கு தெரிந்ததா?" அவன் அடக்கப்பட்ட கோபத்துடன் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்.

"மணி..." தேவகி மகனை அதட்டினார்.

"நீ சும்மா இரு தேவகி. நான் என் பேரன் கிட்ட பேசிக்கிறேன்." என்றவர் மணிமாறனிடம்,

"நீ என் பேரன் என்பதால் தான் என் பேத்தியை உனக்கு மணம் முடித்துக் கொடுத்து இருக்கிறேன். நீ ரோட்டில் போகிற யாரோ என்றால் நான் என் பேத்தியை உனக்குக் கொடுத்து இருக்க மாட்டேன்." சதாசிவம் சற்று குரலை உயர்த்திக் கோபம் போல் பேரனிடம் வம்பிழுத்தார்.

தாத்தாவின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட புகழேந்தி அவரைச் சன்ன சிரிப்புடன் பார்த்திருந்தான்.

தாத்தாவின் கூற்றை ஏற்றுக் கொள்ள மணிமாறனுக்கு மனம் வரவில்லை என்றாலும், தான் எதையாவது கூறி அது மனைவியின் மனதினை பாதித்து விடக் கூடாது என்பதற்காக அமைதி காத்தான்.

"தாத்தா, எனக்கு அங்கே இருக்கிறது தான் பிடிச்சியிருக்கு." தன் பொருட்டுச் சண்டையோ என்று எண்ணியவளாய் வசுமதி அவசரமாய் இடையிட்டாள்.

மணிமாறன் மனைவியை வியப்பாய் பார்த்தான். அவனும் மனைவி தனது வீட்டிற்கு வந்த நாள் முதலாய் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றான். அந்தச் சிறிய வீட்டில் அவள் எந்தவித முகச்சுளிப்பும் இல்லாது புன்னகையுடன் வளைய வருவதைக் கண்டு அவனது மனதில் இதம் பரவத்தான் செய்கிறது. அதிலும் அவள் தனது அன்னையின் முந்தானை பிடித்துக் கொண்டு சுற்றுவது அவனுக்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது.

வசுமதி தேவகியுடன் பெரிய வீட்டிற்கு வந்தாலும் அவருடன் சமையல்கட்டில் கூடமாட ஒத்தாசையாக இருந்து அவரது வேலைப்பளுவை குறைப்பாள். இப்போது சொர்ணா வேலைக்கு வராததால் தற்காலிகமாக வேலைக்கு ஒரு ஆளை எடுத்திருந்த போதும் இவளும் உடன் வேலை செய்தாள். முன்பு போல் நண்பர்களுடன் அரட்டை அடிக்க வெளியில் செல்வது கிடையாது. அவளது அன்னை கனகா கூட அவளை மாதர் சங்கத்திற்கு அழைத்த போது உடன்

செல்ல மறுத்துவிட்டாள். வசுமதி சாந்தியை கவனித்துக் கொள்ள மட்டும் மருத்துவமனை வந்து செல்வாள். அது மட்டுமே அவளுக்குப் பிடித்திருந்தது.

மனைவியின் இந்த மாற்றம் கூட மணிமாறனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவள் மீது அன்பு பெருக்கெடுத்தது. அவளுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று நினைத்தவன் தாத்தாவை பார்த்து அந்த வார்த்தைகளை உதிர்த்தான்.

"நாங்க மூன்று பேரும் இன்னையில் இருந்து இங்கே இருக்கிறோம்." என்று... வசுமதி விழியகல கணவனைப் பார்த்தாள்.

"உன் ரூமில் எனக்கு ஒரு இடம் கொடுக்க மாட்டியா மதி?" அவன் மனைவி புறம் குனிந்து மெல்லிய குரலில் கிசுகிசுத்தான். கணவனது அருகாமையில் அவளது முகம் வெட்கத்தில் சிவந்தது.

"ம், ம்..." என்று அவளும் மெல்லிய குரலில் முனங்கினாள்.

இந்தக் காட்சியை அனைவரும் சந்தோசத்துடன் பார்த்து கொண்டிருந்தனர். இனி மணிமாறன், வசுமதி வாழ்க்கை சுமூகமாகி விடும் என்கிற நம்பிக்கை பெரியவர்களுக்கு வந்தது.

"வசு, நீ நந்து கூடப் போய்த் தொழிலை கவனிச்சுக்கோ." என்று சதாசிவம் கூற...

"கட்டாயம் கவனிச்சிக்கிறேன் தாத்தா. ஆனா இப்போ இல்லை. முதலில் சாந்தி குணமாகட்டும். அதுக்குப் பிறகு நான் கம்பெனிக்குப் போகிறேன். மணி கூடச் சேர்ந்து சாந்தியை கவனிப்பதில் தான் எனது முழுக் கவனமும் இருக்கு. அவள் பழையபடி எழுந்து விளையாட்டில் சாதிக்கணும்." உறுதியான குரலில் கூறிய வசுமதியை கண்டு எல்லோருக்குமே பெருமையாக இருந்தது.

மணிமாறன் மனநெகிழ்வுடன் மனைவியின் கரத்தினைப் பிடித்துக் கொண்டான். இருவரின் பார்வையும்

நேர்கோட்டில் சந்தித்து ஈர்த்து நின்றது!!!

******

பதினைந்து நாட்கள் காவலுக்குப் பிறகு வருண் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டான். அந்தப் பதினைந்து நாட்கள் காவலில் அவன் காவல்துறையின் பலத்தை நன்கு உணர்ந்திருந்தான். ஊமை அடியாக அடித்து உண்மையை வரவழைப்பது எப்படி? என்பதை அவர்களிடம் தான் கற்றுக் கொள்ள வேண்டும். அவன் வாங்கியது அத்தனையும் ஊமை அடி. அவன் அடி தாங்காது அனைத்து உண்மையும் ஒத்துக் கொண்டான். ஆனால் அதை நீதிமன்றத்தில் அவன் ஒப்புக் கொள்ள மறுத்தான்.

"போலீஸ் என்னை அடிச்சு, உதைச்சு இந்தக் குற்றத்தை ஒப்புக்க வச்சாங்க. நான் நிரபராதி. எனக்கு ஒண்ணுமே தெரியாது." அவன் நீதிபதியின் முன் அப்பாவியாய் நடித்தான்.

"இவங்க யார்ன்னு உங்களுக்குத் தெரியுதா மிஸ்டர். வருண்?" சாந்தி சார்பாக வாதாடும் வழக்கறிஞர் எதிரே இருந்த கூண்டை சுட்டிக்காட்டி கேட்டார்.

அதில் சாந்தியை வன்கொடுமை செய்த நால்வரும் நின்றிருந்தனர். ஆம், வருண் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் போது இவர்கள் இருக்கும் இடத்தைப் பற்றிய குறிப்பையும் சேர்த்துக் கொடுத்திருந்தான். அதை வைத்து அவர்களைக் கண்டுபிடித்துக் கைது செய்து இங்கே அழைத்து வந்துவிட்டனர். அவர்களும் தங்களது குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டனர்.

சாந்தியின் வழக்கறிஞர் நீதிபதியிடம் ஒரு கோப்பை நீட்டி, "இதில் சாந்தி மற்றும் இவர்களது வாக்குமூலம் பதியப்பட்ட பென்டிரைவ் இருக்கிறது. இவர்கள் அந்தச் சிறுமியை பலாத்காரம் செய்ததாகச் சொல்லப்பட்ட இடத்திற்குச் சென்று அங்குக் கண்டு எடுக்கப்பட்ட இரத்தம் மற்றும் தலைமுடி மாதிரிகள் வைத்து டிஎன்ஏ டெஸ்ட் பண்ணியதில் அது சாந்தி மற்றும் இவர்களது டிஎன்ஏவோடு ஒத்துப்

போகிறது. உயிரணுக்கள் ஒப்பிட்டு சோதனையிலும் இவர்களுடையது ஒத்து போகிறது." என்று அவர் கூற...

எல்லா ஆதாரங்களையும் நிதானமாகப் படித்துப் பார்த்த நீதிபதி வழக்கின் தீர்ப்பை இன்னும் பதினைந்து நாட்களில் வழங்குவதாகக் கூறி ஒத்தி வைத்தார். அதுவரை குற்றாவளிகளுக்கு ஜாமீன் வழங்க கூடாது என்றும் உத்தரவிட்டார்.

இதைக் கேட்டதும் வரதராஜனின் முகம் செத்துப் போனது. ஒரே மகனை என்ன செய்தும் வெளியில் கொண்டு வர முடியவில்லையே என்று அவருக்கு ஆற்றாமையாக இருந்தது. வருணை சந்தித்துப் பேச வந்த வரதராஜனை புகழேந்தி நக்கலாய் பார்த்தான். அவனது பார்வையில் வரதராஜனின் விழிகள் கூர்மையாய் இடுங்கியது.

"அடுத்து உங்களையும் கைது செய்துவிட்டால் என் கடமை முடிந்தது."

"என்ன சொல்ற?" வரதராஜன் கோபத்துடன் அவனைப் பார்த்தார்.

"உன் மகனை முடிச்சிட்டு உன் கிட்ட வர்றேன்னு சொன்னேன்." என்ற புகழேந்தி,

"பேசறதுக்கான நேரம் முடிஞ்சிருச்சு. ம், கிளம்பு..." என்று அவரை அப்புறப்படுத்திவிட்டு வருணை அழைத்துச் சென்றான்.

கையில் விலங்கு மாட்டப்பட்டுச் செல்லும் மகனை கண்டு அவரது இதயத்தில் இரத்தம் வடிந்தது. புகழேந்தி குடும்ப உறுப்பினர்கள் மீது கை வைத்து இது போல் அவனைக் கலங்கடிக்க வேண்டும் என்றால், இதைத் தெரிந்து கொண்டது போல் புகழேந்தி தனது குடும்பத்தினருக்கான பாதுகாப்பை அதிகரித்து இருந்தான்.

******

அன்று வழக்கம் போல் பள்ளிக்கு வந்திருந்தாள் ஸ்மிதா. சாந்திக்கு நிகழ்ந்த பயங்கரம், அதற்கு வருண் தான் காரணம் என்பது எல்லாம் அவளுக்குத் தெரியாது. அவளது பெற்றோர் அவளிடம் இருந்து இந்த விசயத்தை மறைத்திருந்தனர். படிப்பை காரணம் காட்டி அவள் தொலைக்காட்சி பார்ப்பதை தடுத்து இருந்தனர். வருணின் செய்கையைக் கேள்விப்பட்டுச் சிந்தியா அகத்தியனை நன்கு திட்டிவிட்டார். இனி வருண் இந்த வீட்டு வாசல் படியை மிதிக்கக் கூடாது, ஏனெனில் அவர்களது வீட்டிலும் வயது பெண் இருக்கிறாள் என்று... அப்போது தான் அகத்தியனின் மூளையில் அது உறைத்தது. சாந்திக்கு நிகழ்ந்த பயங்கரம் தனது மகளுக்கு நிகழ்ந்திருந்தால்? அப்போது இருந்து அவர் மனம் சரியில்லாது இருந்தார்.

"கவி, ஹோம்வொர்க் எல்லாம் முடிச்சிட்டியா?" என்று ஸ்மிதா கேட்டபடி தனது தோழி கவிதா அருகில் வந்து அமர்ந்தாள். கவிதாவோ முகத்தைச் சுளித்துக் கொண்டு தள்ளி அமர்ந்தாள். அதைக் கண்டு ஸ்மிதாவிற்கு ஒன்றுமே புரியவில்லை.

"கவி, என்னடி ஆச்சு?" என்று தோழியின் கையை அவள் தொட...

"ச்சீ... என் கையைத் தொடாதே." கவிதா அருவருப்புடன் ஸ்மிதாவின் கையை உதறினாள்.

"கவி, நான் என்ன தப்பு செய்தேன்?" ஸ்மிதாவின் விழிகள் கலங்கி போனது.

"என்ன தப்பு செஞ்சியா? நீ ஜெயிக்கணும்ங்கிறதுக்காகக் குறுக்கு வழியில் முன்னேற பார்த்தியே, அது தப்பு இல்லையா?"

"நீ என்ன சொல்ற?" ஸ்மிதாவிற்கு ஒன்றும் புரியவில்லை.

"ஒண்ணும் தெரியாத பாப்பா மாதிரி நடிக்காதே. உன்னால் தானே சாந்திக்கு இப்படி ஒரு நிலைமை."

"சாந்தியா? சாந்திக்கு என்னாச்சு? சொல்லு கவி... அவளுக்கு என்னாச்சு?" கலங்கிய விழிகளுடன் பதற்றத்துடன் கேட்டாள் ஸ்மிதா.

தோழியின் பதற்றம், கலங்கிய விழிகளைக் கண்டு கவிதா ஒரு நொடி குற்றம் செய்துவிட்டது போல் உதடுகளைக் கடித்தபடி தலைகுனிந்து அமைதியாக இருந்தாள். பின்பு ஸ்மிதாவை நிமிர்ந்து பார்த்து சாந்திக்கு நேர்ந்த கொடுமையை விளக்கி சொன்னவள், அதற்குக் காரணம் வருண் என்றும் கூறினாள்.

"வருண் தான் அதற்கு நேரடி காரணம் என்றாலும், நீ தான் மறைமுகக் காரணம். ஆமா, அவன் பயிற்சி கொடுத்த நீ போட்டியில் ஜெயிப்பதற்காக அவன் இந்த மாதிரி பண்ணியிருக்கான். உன் அப்பாவும், வருணோட அப்பாவும் இதுக்குத் துணை வேறு. ச்சீ..." என்றவள் தனது அலைப்பேசியை எடுத்து ஊடகங்களில் வந்திருந்த சாந்தி வழக்கு பற்றிய செய்திகளை எடுத்து காண்பித்தாள்.

“இப்போதாவது நம்புகிறாயா?” கவிதா கேட்டதும் ஸ்மிதாவிற்குத் தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது.

'வருணா இப்படி?' என்று திகைப்பதா?, அல்லது 'சாந்தியின் நிலை இப்படி ஆகிவிட்டதே' என்று எண்ணி துயரப்படுவதா?, 'தனது தந்தையும் இந்தப் பாதகத்திற்கு உடந்தையா?' என்று அழுவதா? அவளால் எதையுமே சிந்திக்க முடியவில்லை. சட்டென்று எழுந்தவள் வகுப்பறையை விட்டு பேய் துரத்துவது போல் வெளியில் ஓடினாள்.

"ஸிமி, எங்கே போற? ஓடாதே! நில்லு..." என்றபடி கவிதா அவளைப் பின்தொடர்ந்து ஓடினாள். ஓட்ட பந்தய வீராங்கனையை எட்டிப்பிடிப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது.

பள்ளியிலிருந்த மைதானத்தின் நடுவில் வந்து நின்ற ஸ்மிதா அப்படியே கால்கள் துவள மடங்கி அமர்ந்தாள். சில நொடிகளில் அங்கு வந்து சேர்ந்த கவிதாவும் அவள் அருகே வந்து அமர்ந்தாள்.

"ஸிமி..." கவிதா ஸ்மிதாவின் தோளில் கை வைத்தாள்.

"நான் சாந்தியை பார்க்கணும் கவி. அவளை எங்கே போய்ப் பார்க்க...?" அவளைக் கண்டு இரக்கப்பட்ட கவிதா,

"அவளை ஜிஹெச்சில சேர்ந்திருக்காங்க." என்று கூற... ஸ்மிதா உடனே சாந்தியை பார்க்க கிளம்பினாள்.

"எப்படிப் போகப் போற ஸிமி?"

"பஸ்சில்..."

"டிக்கெட்டுக்குப் பணம் இருக்கா?"

"ம், இருக்கு..." என்றவள் பள்ளியின் வாயிலை நோக்கி நடந்தாள்.

அடுத்த முக்கால் மணி நேரத்தில் சாந்தி இருக்கும் இடத்தை விசாரித்துத் தெரிந்து கொண்டு அங்குப் போய் நின்றாள் ஸ்மிதா. அங்கிருந்த காவலர் அவளைச் சாந்தியை பார்க்க அனுமதிக்கவில்லை.

"யாரும் பார்க்க கூடாது... போம்மா, போ." அவர் அவளை விரட்டினார்.

"சார், சாந்தி என்னோட பெஸ்ட் பிரெண்ட் சார். நான் அவளைப் பார்த்துட்டு போயிர்றேன் சார்." அவள் கெஞ்சி மன்றாடினாள்.

ஸ்மிதாவின் கலங்கிய முகம் அவரை ஏதோ செய்தது. அதனால் அவர் அவளை உள்ளே செல்ல அனுமதித்தார். அவள் சாந்தியை பார்க்க சென்ற சமயம் சாந்தி ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தாள். அவளது வேதனை தாங்காது அவளை எப்போதும் மயக்கத்திலேயே வைத்திருந்தனர். சொர்ணாவும், மணிமாறனும் மருத்துவரை சந்திக்கச் சென்றிருந்தனர்.

சாந்தியின் நிலையைக் கண்டு ஸ்மிதா அதிர்ந்து போனாள். உதடுகள் தடித்து, முகம் எல்லாம் வீங்கி போய், கால்கள் இரண்டிலும் பெரிய கட்டுக்கள் போடப்பட்டு

இருந்தது. 'இவளா அவளது தோழி சாந்தி?' அவளது மனம் 'இல்லை' என்று வேகமாய் அரற்றியது. அழகு தேவதையாய், புன்னகை முகத்துடன் சாந்தி அவளது மனக்கண்ணில் வலம் வந்தாள்.

"சாந்தி..." ஸ்மிதா விழிகளில் விழிநீர் வடிய அவளது கையைப் பற்றினாள்.

அந்த ஆழ்ந்த மயக்கத்திலும் சாந்தி, "ஷ்..." என்று வலியில் முனங்கினாள். அவளது முனங்கலை கண்டு தீச்சுட்டார் போன்று தனது கையை எடுத்தாள் ஸ்மிதா.

பின்பு சாந்தி அமைதியாகவும் அவள் போர்த்திருந்த போர்வையை மெல்ல விலக்கி பார்த்தாள் ஸ்மிதா. அடுத்த நொடி அதிர்ந்து போனவளாய் அவள் வாயை மூடியபடி பின்னால் நகர்ந்தாள். அவளது கண்களில் இருந்து கண்ணீர் கரகரவென வழிந்தது. சத்தமாய் வந்த தேம்பலை முயன்று அடக்கியபடி அவள் சாந்தியை வெறித்துப் பார்த்திருந்தாள்.

சாந்தியின் கை முழுவதும் பற்களின் தடமும், நகக்கீறல்களும் காணப்பட்டது. அந்த இடமே கன்றி சிவந்து இருந்தது. சாந்தியின் கைக்கே இந்த நிலைமை என்றால்... அவளது பூ உடல் முழுவதும்? ஸ்மிதாவால் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை. சாந்தியை போன்று ஸ்மிதா ஒன்றும் வெகுளிப்பெண் அல்ல. அவளுக்கு இந்த உலகத்தின் கழுகு பார்வைகள் பற்றி நன்கு தெரியும். அவளது அன்னை அதைச் சொல்லி கொடுத்தே அவளை வளர்த்திருந்தார். அதனால் இப்போது சாந்திக்கு நிகழ்ந்திருக்கும் கொடுமையின் அளவு அவளுக்குப் புரிவதாய்! அவளது வலியை இவள் உணர்ந்தாள். தன் பொருட்டு அரங்கேற்றப்பட்ட இந்தக் கொடூரம் அவளது சித்தத்தைக் கலங்கடித்தது.

சாந்தியின் காலடியில் மண்டியிட்டு அமர்ந்த ஸ்மிதா அதைப் பற்றியபடி, "என்னை மன்னிச்சிரு சாந்தி. நான் பாவியாகிட்டேன். உன் முகத்தில் நான் எப்படி முழிப்பேன்?" என்று கதறியழுதாள். சில நொடிகளில் சுதாரித்துக்

கொண்டவள் விழிகளைத் துடைத்தபடி அங்கிருந்து கிளம்பி சென்றாள்.

மாலையில் எப்போதும் போல் தனது காரில் வீடு திரும்பி கொண்டிருந்தாள் ஸ்மிதா. அவளது மனம் முழுவதும் சாந்தியே வியாபித்து இருந்தாள். வீட்டிற்கு வந்ததும் அவளை வரவேற்ற சிந்தியா மகளின் முகம் தெளிவில்லாது இருப்பதைக் கண்டு,

"பேபி என்ன பண்ணுதுடா?" என்று பதட்டத்துடன் கேட்க... அவரை வெறித்துப் பார்த்தவள்,

"தலைவலி மம்மி... கொஞ்சம் நேரம் தூங்கி எழுந்தா சரியா போயிரும். என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க." என்று கூறியபடி அவள் தனது அறைக்குச் சென்றாள்.

அப்படி இருந்தும் மனம் கேட்காது சிந்தியா சூடாகக் காபி கலந்து கொண்டு மகளின் அறைக்குச் சென்றார். படுத்திருந்த மகளை எழுப்பிக் காபி அருந்த செய்து, அவளது நெற்றியில் இதமாய்த் தலைவலி தைலத்தைத் தடவி விட்டார். சிறிது நேரம் கழித்து மகள் உறங்கி விட்டாள் என்று எண்ணி கொண்டு அவர் அறையை விட்டு சென்றார். அன்னை சென்றதும் அவளது அடக்கி வைத்திருந்த அழுகை பெரும் கேவலாய் வெடித்துச் சிதறியது. எவ்வளவு நேரம் கதறி அழுதாளோ தெரியாது!

பிறகு தன்னைத் தேற்றி கொண்டவள் எழுந்து சென்று அறை கதவின் தாழ்ப்பாளை போட்டுவிட்டு மீண்டும் கட்டிலில் வந்து அமர்ந்தாள். வெகுநேரம் யோசித்தவள் மளமளவென்று கடிதம் எழுத துவங்கினாள். தந்தையின் மீதிருந்த கோபம் வார்த்தைகளில் வடிவம் பெற்றது. சாந்தியின் முகம் அவளது நினைவில் நின்று அவளை வதைத்துக் கொன்றது. தந்தைக்கு எழுதிய கடிதத்துடன் அவள் மணிமாறனுக்கும், சாந்திக்கும் சேர்த்துத் தனித் தனியே இரண்டு கடிதங்கள் எழுதினாள். இறுதியில் மூன்றையும் மடித்துக் கட்டிலின் பக்கவாட்டு மேசை மீது வைத்தவள் எழுந்து சென்று தனது அலமாரியில் எதையோ

தேடினாள். அதிலிருந்து தனது தாவணி ஒன்றை எடுத்துக் கொண்டு கையில் ஸ்டூலுடன் கட்டிலின் மீது ஏறினாள்.

கட்டிலின் மீது ஸ்டூலை போட்டு அதில் ஏறியவள் மின்விசிறியில் தாவணியின் ஒரு முனையைக் கட்டிவிட்டு மறுமுனையைத் தனது கழுத்தில் இறுக கட்டினாள். ஸ்டூலை தட்டி விடுமுன் அவளது மனக்கண்ணில் சாந்தியின் முகமே வலம் வந்தது.

"என்னை மன்னிச்சிரு சாந்தி." என்று முணுமுணுத்தவள் அடுத்த நொடி அந்தச் சிறு ஸ்டூலை கால்களால் எட்டி உதைத்தாள். அடுத்தச் சில நிமிடங்களில் அவளது உடல் விலுக்கென்று துடித்துத் தனது உயிரை விட்டது.

தந்தையின் தவறால், யாரோ ஒரு காமுகன் செய்த பிழையால் ஒன்றும் அறியாத பிஞ்சு ஒன்று தனது உயிரை மாய்த்துக் கொண்டது.

மாலையில் வீடு திரும்பிய அகத்தியன் வந்ததும் வராததுமாய்த் தனது மகளைத் தேடினார்.

"பேபி, பேபி..." அவரது சத்தத்தில் அங்கு வந்த சிந்தியா,

"எதுக்கு இப்படி மகளை ஏலம் போடுறீங்க?" என்று கேட்க...

"பேபி எங்கே? புதுச் சைனீஸ் ரெஸ்ட்டாரெண்ட் ஓபன் பண்ணி இருக்காங்க. அதுக்குப் பேபியை கூடிட்டுப் போகத்தான் சீக்கிரம் வந்தேன்."

"தலைவலின்னு சொன்னாள். மேலே அவள் ரூமில் ரெஸ்ட் எடுத்துக்கிட்டு இருக்கா."

"பேபிக்கு தலைவலியா? இதை முதலிலேயே சொல்வதற்கு என்ன?" அவர் பதற்றத்துடன் மகளது அறையை நோக்கி விரைந்தார்.

சிந்தியா சிரித்தபடி கணவருக்குக் காபி கலக்க போனார். அடுத்தச் சில நிமிடங்களில், "பேபி" என்று அகத்தியன் அலறினார். சிந்தியா என்னவோ ஏதோவென்று பதறிக்

கொண்டு மேலே ஓடி வந்தார். அங்கு அவர் கண்ட காட்சியில் அதிர்ந்து போய் நின்றுவிட்டார்.

மகள் கதவை திறக்கவில்லை என்றதும் அகத்தியன் பயந்து போய்க் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று பார்க்க... அங்கே அவருடைய அருமை மகள் தூக்கில் தொங்கி கொண்டிருந்த காட்சியைக் கண்டு அவர் உயிரோடு செத்துப் போனார். 'பேபி' என்று அலறியவரால் இன்னமும் தனது கண்களை நம்ப முடியவில்லை.

"சிந்தியா, நம்ம பேபி..."

அவர் கலக்கத்துடன் மனைவியின் முகத்தைப் பார்த்தார். மனைவியாவது இதைப் பொய் என்று சொல்ல மாட்டாளா? என்று நப்பாசையுடன் அவர் மனைவியைப் பார்த்தார். சிந்தியாவோ எதையும் உணராதபடி மரத்து போய் நின்றிருந்தார். அப்போது தான் அகத்தியனின் புத்திக்கு உண்மை உறைத்தது.

"பேபி" என்று அலறியபடி மகளின் கால்களைப் பிடித்துக் கொண்டு அழுதார். அவரது அலறலில் சுயவுணர்வு அடைந்த சிந்தியா கணவரின் அருகில் வந்தார்.

"பேபியை கீழே இறக்குங்க. அவளுக்கு வலிக்கப் போகுது." மகள் இன்னமும் உயிரோடு இருப்பதாக எண்ணி கொண்டு அவர் கூற... அகத்தியன் மனைவியைப் பரிதாபமாய்ப் பார்த்தபடி கட்டிலின் மீதேறி தாவணி முடிச்சை கழற்றி மகளைக் கீழே இறக்கினார்.

மகளின் சில்லிட்ட உடலை கண்டு அவர்களுக்கு நிதர்சனம் புரிய... இருவரும் மகளின் உடலை கட்டி அணைத்துக் கொண்டு கதறி அழுதனர். பத்து வருடங்கள் தவமாய்த் தவமிருந்து பெற்ற மகள் அல்லவா அவள்! எவ்வளவு நேரம் அழுதாலும் இறந்தவள் மீண்டும் மீண்டு வரவா போகிறாள்? அப்போது தான் சிந்தியா பக்கவாட்டு மேசை மீதிருந்த கடிதங்களைப் பார்த்தார். அவர் முதலில் எடுத்தது மகள் தந்தைக்கு எழுதிய கடிதத்தை. பிரித்துப் பார்த்தவரின் கரங்கள் நடுங்கியது.

"ஐ ஹேட் யூ டாட். சாந்தியோட இந்த நிலைக்கு நீங்க தான் காரணம் டாட். அவள் இடத்தில் என்னை வைத்து பார்க்க கூட உங்களால் முடியவில்லை, இல்லையா? அந்தளவுக்கு நீங்க இரக்கம் இல்லாமல் போயிட்டீங்க... அப்படித்தானே டாட். ஐ ஹேட் யூ" கடிதம் படித்து முடித்த அடுத்த நொடி சிந்தியா கணவரது சட்டையைப் பிடித்திருந்தார்.

"உண்மையைச் சொல்லுங்க... சாந்திக்கு ஏற்பட்ட கொடூரத்துக்கு நீங்க தான் காரணமா?" என்று வெறிப்பிடித்தார் போன்று அவர் கத்தினார்.

"இல்லை சிந்தியா... வருண் தான் காரணம்." என்றவர் நடந்ததை மறைக்காது மனைவியிடம் கூறினார்.

"இதை உங்க கிட்டயிருந்து நான் எதிர்பார்க்கலைங்க. வருண் சொன்னதுமே நீங்க அவனைப் போலீசில் பிடிச்சு கொடுத்திருக்கணும். நீங்க ஏன் அதைச் செய்யலை? அப்படின்னா நீங்க அவன் செஞ்ச கொடூரத்துக்கு மறைமுகமா ஆதரவு கொடுத்திருங்க. ஏன் உங்க புத்தி இப்படிப் போச்சு? உங்க ஈனமான புத்தியால் இப்போ என்ன நடந்திருக்குன்னு பாருங்க. பெண்கள் என்றால் உங்களுக்கு எல்லாம் கிள்ளுக்கீரையாகி போனாங்களா?" சிந்தியா தலையில் அடித்துக் கொண்டு அழுதார்.

அகத்தியன் கண்ணீர் விட்டபடி செய்வதறியாது அமர்ந்திருந்தார். வெகுநேரம் அழுது கரைந்த சிந்தியா தனது விழிகளைத் துடைத்துக் கொண்டு எழுந்தார்.

"என் மகள் இல்லாத உலகத்தில் வாழ எனக்கு விருப்பம் இல்லை." என்றார் கணவரை பார்த்தபடி...

"நான் மட்டும் உயிரோடு இருந்து என்ன செய்யப் போறேன்?" அகத்தியனின் குரல் விரக்தியாய் ஒலித்தது.

திடமான முடிவுடன் சிந்தியா கீழே வந்தார். மாலையில் பணி முடித்துவிட்டுப் பணியாளர்கள் அனைவரும் சென்றுவிட்டதால் வீடு வெறிச்சோடி இருந்தது. சமையலறைக்குச் சென்று பாலை காய்ச்சியவர் அதில்

தூக்க மாத்திரைகளைப் பொடித்துப் போட்டு கலக்கினார். தனது விழிகளில் வழிந்த நீரை துடைத்துக் கொண்டே அவர் பால் தம்பளரை எடுத்துக் கொண்டு மகளது அறைக்குச் சென்றார்.

அதற்குள் தனது மனசாட்சி உறுத்தியதில் அகத்தியன் காவல்துறைக்கு ஒரு நீண்ட கடிதத்தை எழுதி முடித்திருந்தார். அதை மனைவியிடம் காட்டியவர்,

"இப்போது உனக்குத் திருப்தி தானே?" என்று கேட்க...

"நிச்சயம் திருப்தி தான். குற்றம் செஞ்சவங்களுக்குத் தண்டனை கிடைத்தால் தான் நம் மகளுடைய ஆத்மா சாந்தியடையும்." என்றவர்,

"இப்போது நாமும் நம் மகளின் பார்வையில் குற்றம் இழைத்தவர்கள் தான். அதனால்..." என்று நிறுத்தியவர் பால் தம்பளரை கணவன் முன் நீட்டி,

"குடிங்க..." என்றார் அழுத்தமான குரலில்...

உயிரை மாய்க்கும் விசம் என்று தெரிந்தே அவர் தனது கணவருக்கு அதைக் கொடுத்தார். மனைவியின் எண்ணம் புரிந்து பாலை வாங்கி அமைதியாகப் பருக துவங்கினார் அகத்தியன். சிந்தியாவும் மௌனமாகப் பாலை பருகினார். பின்பு இருவரும் மகளின் இருமங்கிலும் படுத்து அவளை அணைத்து கொண்டனர்.

"எங்களை மன்னித்துவிடு பேபி." என்றபடி அவர்கள் ஸ்மிதாவின் இரு கன்னங்களிலும் அழுந்த முத்தமிட்டனர்.

மகளைப் பார்த்தபடி படுத்திருந்த அவர்களது நினைவுகள் மெதுவாக மங்க துவங்கியது. ஆனால் அவர்களது இதயம் தனது துடிப்பை நிறுத்தவில்லை. அவர்களது இதயத்தில் ராணியாய் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கும் அவர்களது மகள் ஸ்மிதாவின் நினைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக வலம் வந்தது. பிறந்த குழந்தையில் இருந்து பதினெட்டு வயது பருவ மங்கையாய் தங்களது மகளின் பரிணாம

வளர்ச்சியைக் கண்டு ஆனந்தித்தபடி அவர்கள் இருவரது உயிர் உடலை விட்டுப் பிரிந்தது!

அகத்தியனின் வீட்டில் வேலை செய்யும் காவலாளிக்கு இரவு ஒன்பது மணிக்கு மேல் சிறிது சந்தேகம் வந்தது. வீட்டில் ஆட்கள் இருந்தால் எப்போதும் தொலைக்காட்சி சத்தம் கேட்கும். இல்லை பேச்சு சத்தமாவது கேட்கும். ஆனால் இன்று வழக்கத்தை விட வீடு அமைதியாக இருந்தது. அதுவே அவனுள் பயத்தைக் கிளப்பியது. எதற்கும் முதலாளியம்மாவை அழைத்து விசாரிப்போம் என்று நினைத்தவன் அங்குப் போய்க் கதவை தட்டினான். பல முறை தட்டியும் பலன் இல்லை. அவன் பயந்து போய் உடனே காவல்நிலையத்துக்கு அழைத்து விசயத்தைக் கூறினான்.

அகத்தியன் வீடு இருந்த பகுதியில் இருக்கும் காவல்நிலையத்தில் ஏற்கெனவே புகழேந்தி சொல்லி வைத்திருந்தான். சந்தேகத்திற்கு இடமான வகையில் அகத்தியனின் வீட்டில் ஏதாவது நடந்தால் உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று... அதனால் அந்த அதிகாரி உடனே புகழேந்திக்கு அழைத்து விசயத்தைக் கூறினார்.

"அங்கு யாரும் வராமல் பார்த்துக்கோங்க." என்ற புகழேந்தி அந்த நேரத்திலும் காக்கி உடையை அணிந்து கொண்டு கிளம்பினான்.

அங்குச் சென்று பார்த்த போது புகழேந்தியின் வலக்கரம் தன்னையும் அறியாது தனது தொப்பியை கழட்டியது. ஸ்மிதாவின் மரணம் அவன் சற்றும் எதிர்பார்க்காதது. அவள் அருகில் உயிரை விட்டிருந்த அவர்களது பெற்றோர்களைக் கண்டு அவனுக்குச் சற்று திகைப்பாக இருந்தது.

"சார், இந்த லெட்டர்ஸ் எல்லாம் இங்கே இருந்தது சார்." என்று அந்தப் பகுதி காவல்துறை அதிகாரி அவனிடம் நான்கு கடிதங்களைக் கொண்டு வந்து கொடுத்தார்.

அதில் ஒன்று ஸ்மிதா தனது தந்தைக்கு எழுதியது. மற்ற இரண்டும் அவள் மணிமாறனுக்கும், தோழி சாந்திக்கும்

எழுதியது. அதைப் படித்துப் பார்த்ததும் அவனது விழிகள் லேசாகக் கலங்க துவங்கியது. முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன் அடுத்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அதைப் படித்துப் பார்த்ததும் அவனது முகம் மலர்ந்து போனது. வரதராஜன் என்னும் திமிங்கலத்தைப் பிடிப்பதற்கு வேண்டிய வலை அது. உடனே அவன் செயலில் இறங்கினான்.

"பாடியை போஸ்மார்ட்டத்துக்கு அனுப்புங்க." என்றவன் நேரே நீதிபதி வீட்டின் கதவை தட்டினான். அவரிடம் விசயத்தைக் கூறி வரதராஜனை கைது செய்வதற்கு வேண்டிய ஆணையைப் பெற்றான். அவர் உடனே அதற்கான ஆவணை செய்து கொடுத்தார்.

நள்ளிரவு நேரத்தில் அதிரடியாக வரதராஜன் வீடு புகுந்து அவரைக் கைது செய்தான் புகழேந்தி. வந்தனா செய்வதறியாது திகைத்து போய் நின்றிருந்தாள். விசயம் கேள்விப்பட்டு ஊடகங்கள் காவல்துறை ஆணையர் அலுவலகத்தை முற்றுகை இட்டது. அவர்களுக்காகப் பிரத்யேக பேட்டியை வழங்கினான் புகழேந்தி. அப்போது அவனது கைகளில் அகத்தியன் எழுதிய கடிதம் இருந்தது. அதைத் தூக்கி ஊடகங்கள் முன்பு காட்டியவன்,

"இறந்து போன தொழிலதிபர் அகத்தியன் அப்ரூவராக மாறி அவர் கைப்பட எழுதி வைத்த கடிதம் இது. அவரும், வரதராஜனும் இணைந்து வெளிநாட்டில் இருந்து போதை பொருட்கள் கடத்தியதற்கான ஆதாரம் தான் இது. இதில் எல்லாமே தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது போக நாங்கள் சாந்தி வழக்கில் வருணை விசாரித்த போது அவன் சாந்தியை கடத்தி வைத்திருந்ததாகச் சொன்ன இடத்தில் தான் போதை பொருட்களைப் பதுக்கி வைத்திருந்து இருக்கிறார்கள். இதை அடிப்படையாக வைத்து வரதராஜனை கைது செய்ய இருந்தோம். அதற்கு முன் அகத்தியன் கடிதம் பெரும் ஆதாரமாக மாறிவிட்டது. இனி சட்டம் தன் கடமையைச் செய்யும்." என்று அவன் முடித்துக் கொண்டான்.

அகத்தியன் வரதராஜனோடு சேர்ந்து என்னென்ன பித்தலாட்டங்கள் செய்தாரோ அத்தனையும் அதில் தெளிவாக எழுதி இருந்தார். அதற்கான ஆவணங்கள் எங்கு இருக்கிறது? என்றும் தெளிவாகக் குறிப்பிட்டு இருந்தார். மற்ற ஊழல் வழக்குகள் என்றால் வரதராஜன் எளிதில் வெளியில் வந்துவிடலாம். ஆனால் இது போதை பொருள் கடத்தல் என்பதால் அவர் வெளியில் வருவது சந்தேகமே!

ஸ்மிதாவின் இறுதி சடங்கு முடித்துவிட்டு கனத்த மனதுடன் மணிமாறன் வீட்டிற்குள் நுழைந்தான். அவளின் முடிவை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அதிலும் அவள் சாந்திக்கு நிகழ்ந்த அநியாயத்திற்கு நியாயம் செய்வதற்காகத் தன் உயிரை மாய்த்து கொண்டாள் என்று புகழேந்தி சொல்ல கேட்டதில் இருந்து அவனது மனம் துக்கத்தில் துவண்டு போனது. என்ன மாதிரியான நட்பு இது!

"மணி..." புகழேந்தியின் குரலில் அவன் திரும்பி பார்த்தான்.

"அந்தப் பொண்ணு உனக்கு எழுதிய கடிதம் இது." என்று ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்த புகழேந்தி,

"இது சாந்திக்கு எழுதியது." அதையும் அவனிடமே கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான்.

ஸ்மிதா தனக்கு எழுதிய கடிதத்தைப் பிரித்துப் படித்தான் மணிமாறன். அதில் எழுதியிருந்ததைப் படித்ததும் அவன் கதறி அழுதுவிட்டான். அவன் அழும் சத்தம் கேட்டு வசுமதி அறையினுள் வந்து எட்டிப்பார்த்தாள். கணவன் அழுவதைக் கண்டு பதைபதைப்புடன் அவன் அருகில் வந்தவள்,

"மணி, என்னாச்சு?" என்று பரிதவிப்புடன் கேட்க... அவன் தனது கையிலிருந்த கடிதத்தை எடுத்து அவளிடம் கண்பித்தான். அதை அவள் பிரித்துப் படித்துப் பார்த்தாள்.

"மணியண்ணா, என்னை மன்னிச்சிருங்க. சாந்தியோட நிலைமைக்கு நான் தான் காரணம்ன்னு என்னை

வெறுத்துராதீங்க. எனக்கு எதுவும் தெரியாதுண்ணா. விசயம் தெரிஞ்சதில் இருந்து எனக்கு வாழவே பிடிக்கலை. சாந்திக்கு வேண்டிய நியாயம் கிடைக்கணும்ன்னா நான் உயிரை விடுறது ஒன்று தான் ஒரே வழி. அடுத்த ஜென்மத்தில் நான் உங்க மகளா பிறக்கணும். நீங்க என்னை ட்ரெயின் பண்ணணும். அது தான் என்னுடைய ஒரே ஆசை. ஐ லவ் யூண்ணா. ஐ மிஸ் யூண்ணா. இப்போ போறேன். மீண்டும் உங்க மகளா வருவேன். பைண்ணா. அப்புறம் ஒரு முக்கியமான விசயம்ண்ணா, சாந்திக்கு நான் எழுதிய கடிதத்தை அவள் உடல்நலம் நல்லபடியா தேறிய பிறகு கொடுங்க."

படித்து முடித்த வசுமதியின் விழிகளில் இருந்தும் கண்ணீர் துளிகள் சொட்டியது. அவள் மனம் தாங்காது அழுகையில் கரையும் கணவனை அணைத்து கொண்டாள். துயரத்தில் வாடும் சேயை அரவணைக்கும் தாயின் செயலை ஒத்திருந்தது அவளது செயல். பெண் பிள்ளைகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் தனது கணவன் திகழ்வது கண்டு அவளுக்கு அத்தனை பெருமையாக இருந்தது. அவனும் மனைவியின் அரவணைப்பில் தனது துக்கத்தினைக் கரைத்தான்.

அடுத்தப் பதினைந்தாவது நாளில் வருணின் வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அன்று நீதிபதி அவனது வழக்குக்குத் தீர்ப்பு வழங்கினார். குற்றத்தில் சம்பந்தப்பட்ட நால்வரோடு சேர்த்து, அதற்கு உதவியாக இருந்த வருணுக்கும் சேர்த்து அவர் மரணத் தண்டனையை விதித்தார். அதைக் கேட்டு எல்லோரும் சந்தோசம் அடைந்தனர். இதை எதிர்த்து வருண் சார்பில் யாராவது உயர்நீதி மன்றத்தை அணுக வேண்டும். வரதராஜன் சிறையில் இருந்தார். வந்தனா செயலிழந்தவளாய் திக்பிரம்மை பிடித்தார் போன்று இருக்கிறாள். அதனால் அவனது மரணத் தண்டனை உறுதி செய்யப்பட்டது.

அடுத்தச் சில நாட்களில் வரதராஜனின் வழக்கும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவருக்கு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது.

தெய்வம் நின்று குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுத்துவிட்டது!!!

******

ஆறு மாதங்கள் கழித்து...

தங்கம் பாட்டியின் அறையில் எல்லோரும் குழுமியிருந்தனர். தாத்தா நடுநாயகமாக அமர்ந்து கொண்டு பேசுவதற்குத் தயாரானார். எல்லோரும் அவரது முகத்தை ஆர்வத்துடன் பார்த்து கொண்டிருந்தனர்.

"உங்களுக்குக் கல்யாணமாகி எத்தனை வருசமாகுது?" என்று அவர் சிறியவர்களைப் பார்த்து கேட்டார்.

"ஆறு மாசம் தாத்தா." நால்வரும் கோரஸ் பாடினர்.

"இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை." என்று நொடித்துக் கொண்ட சதாசிவம்,

"எப்போ இந்த வீட்டில் குழந்தை சத்தம் கேட்கிறது? ஏதாவது திட்டம் இருந்தால் இப்பவே சொல்லிருங்க. அப்படி எந்தத் திட்டமும் இங்குத் தேவையில்லை. நீங்க குழந்தையைப் பெத்து மட்டும் கொடுத்துருங்க. நாங்க அதை வளர்த்துக்கிறோம்." என்று அவர் கூற...

"அவ்வளவு அவசரமா வேணும்ன்னா நீங்க தான் முயற்சிக்கணும்." மணிமாறன் நக்கலாய் தாத்தாவை பார்த்தான்.

"ஏன்டா, என்னால் முடியாதுன்னு நினைச்சியா? நான் தயார். கெழவி நீ தயாரா?" என்று அவர் மீசையை முறுக்க...

"பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாண்ட கதையாயில்ல இருக்கு. கிழவனுக்கு ஆசையைப் பாரு." தங்கம் தோள்பட்டையில் மோவாயை இடித்துக் கொண்டார்.

அதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். புகழேந்தி நந்தனாவுடன் தாத்தாவின் முன் வந்து, "நான் அப்பாவாகப் போகிறேன் தாத்தா. எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்க."

என்று அவரின் பாதங்களைப் பணிந்து வணங்கினான். நந்தனாவும் சேர்ந்து வணங்கி எழுந்தாள்.

அங்கே மகிழ்ச்சி தாண்டவமாடியது. தேவகி எல்லோருக்கும் இனிப்புக் கொண்டு வந்து கொடுத்தார். நந்தனாவின் முகத்தை நெட்டி வழித்த தேவகி,

"எத்தனை மாசம் நந்து?" என்று மகிழ்வோடு கேட்க...

"இரண்டு மாசம்மா..." என்றாள் அவள் நாணத்தோடு...

இதை எல்லாம் பார்த்தபடி வசுமதி தீவிர யோசனையில் இருந்தாள். அவளைக் கவனித்துக் கொண்டிருந்த மணிமாறன்,

"என்ன பலத்த யோசனை?" என்று கேட்க...

"நம்ம மருமகனுக்கு நாம எப்போ பொண்ணைப் பெத்துக் கொடுக்கப் போறோம்ன்னு யோசிச்சிக்கிட்டு இருந்தேன்." மறைமுகமாகத் தனது மனதினை அவள் வெளிப்படுத்த... மணிமாறன் சந்தோசமாய் அவளைப் பார்த்தான்.

"உண்மையாவா?"

அவனது கேள்விக்கு அவள் ஆமென்று தலையசைத்தாள். மணிமாறன் சந்தோச வானில் சிறகடித்துப் பறந்தான்.

"ஏன்டா படுவா, நாங்க எல்லாம் இங்கே பேசிக்கிட்டு இருக்கும் போது நீ மட்டும் அங்கே தனியா உன் பொண்டாட்டி கிட்ட என்னத்த கிசுகிசுன்னு பேசிக்கிட்டு இருக்க?" சதாசிவம் மணிமாறனை கண்டு சத்தம் போட...

"கிசுகிசு பேசினால் தான் குவாகுவா பிறக்கும் தாத்தா." மணிமாறன் சிரியாமல் அவரைக் கிண்டலடிக்க...

அவனது கிண்டலில் சதாசிவம் வாய்விட்டு சிரித்தார். வசுமதி லஜ்ஜையுற்றவளாய் கணவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள். மணிமாறனும் சிரித்தபடி மனைவியை அரவணைத்துக் கொண்டான்.

அறையில் தனிமையில் இருக்கும் போது நந்தனா புகழேந்தியிடம் வந்து, "மாமா, எனக்கு ஒரு சந்தேகம்?" என்று கேட்க...

"உனக்குச் சந்தேகம் எல்லாம் வருதா?" அவன் அவளை அணைத்து தனது கரங்களுக்குள் அடக்கினான். அவளும் பாந்தமாய் அடங்கியபடி,

"நமக்குக் குழந்தை பிறந்தால் என்ன நிறத்தில் பிறக்கும் மாமா? உங்களை மாதிரி சிவப்பாவா? இல்லை என்னைய மாதிரி கருப்பாவா?"

"எவடி இவ... சந்தேகத்தைப் பாரு. லூசு லூசு." என்றபடி அவளைத் திட்டியவன் அவளை முறைத்து பார்த்துவிட்டு,

"வரிக்குதிரை மாதிரி பிறக்கும்." என்று அவன் கிண்டலடித்தான்.

"ஆங்..." அவள் திகைப்புடன் வாயை பிளக்க... அவளது வாயை மூடியவன்,

"உன்னை மாதிரி அழகா ஒரு பொண்ணு வேணும்டி."

"நான் அழகா?" அவள் சிணுங்க...

"என் கண்ணுக்கு நீ மட்டும் தான் அழகு." என்று கூறிக் கொண்டே அவன் அவளது நெற்றியில் இதழ் பதிக்க... அவள் அவனது நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்தாள்.

******

சாந்தியை வீட்டிற்கு அழைத்து வந்து வீட்டில் வைத்து அவளுக்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தாத்தா அவளது மருத்துவச் செலவுகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டார். அவளது உடைந்த கால்கள் கூட இப்போது சரியாகி கொண்டு வருகிறது. அதற்கு என்று தனியே பயிற்சி கொடுக்கப் 'பிசியோதெரஃபிஸ்ட்' வீட்டிற்கே வந்தார். உடலளவில் தேறிய சாந்தி மனதளவில் தேறாது அவஸ்தைப்பட்டாள். அவளால் அவ்வளவு சீக்கிரம் அந்த நிகழ்வில் இருந்து வெளியில் வர முடியவில்லை.

"நீ இப்படி முடங்கணும்ன்னு தான் அவன் நினைச்சது. நீ அதையே செஞ்சு அவனுக்குச் சந்தோசத்தைக் கொடுத்திரு. இனிதான் நீ சாதிக்க வேண்டியது நிறைய இருக்கு சாந்தி. நாலு பேருக்கு உதாரணமா நீ இருக்கணும். உனக்கு ஒண்ணு சொல்லவா? சாக்கடை உடலில் தெளித்தால் நாம் கழுவுவது போல் தான் இதுவும். அதற்காக அருவருப்பு அடைந்து உடல் உறுப்பையா அறுத்து எடுக்கிறோம் இல்லையே. உனக்குச் செய்த மருத்துவப் பரிசோதனையில் உன் கர்ப்பப்பையைச் சுத்தப்படுத்தியதோடு நீயும் சுத்தமாகி விட்டாய் சாந்தி. இப்போது நீ சுத்தமானவள். புது மனுசி. வெற்றி பெற வேண்டும் என்று வெறிக் கொண்டு களம் இறங்கும் பெண் வேங்கை நீ."

வசுமதி பெரிய மனுசியாய் சாந்தி உடனிருந்து அவளைத் தேற்றினாள். மணிமாறனை ஆண்மகனாய் கண்டு பயந்து ஒடுங்கிய சாந்தியை மெல்ல மெல்ல மணிமாறனுடன் நம்பிக்கையுடன் பழக வைத்தாள் வசுமதி. அவன் மனைவியை நன்றியுடன் பார்த்திருந்தான். மணிமாறன் சாந்திக்கு உடலளவில் நன்கு பயிற்சி கொடுத்துத் தேற்றினான் என்றால், வசுமதி அவளை மனதளவில் இரும்பு பெண்ணாய் கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றிக்

கொண்டு வந்தாள். நாளடைவில் சாந்தி பழைய மாதிரி கலகலப்பாக எல்லோரிடமும் பழக ஆரம்பித்தாள்.

மேலும் ஆறு மாதங்கள் கடகடவென்று பறந்து சென்றது. ஒருநாள் மணிமாறனும், வசுமதியும் அவளை ஒரு இடத்திற்கு அழைத்து வந்தனர். அது சுடுகாடு போலிருந்தது. சாந்தி பயத்துடன் வசுமதியின் கையைப் பற்றிக் கொண்டாள்.

"அண்ணி, இங்கே எதுக்கு வந்திருக்கோம்?"

"இன்னும் கொஞ்சம் தூரம் தான். அங்கே போனதும் தெரிஞ்சிரும்." என்ற வசுமதி அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை.

ஒரு நினைவிடத்தின் முன் போய் நின்றனர் மூவரும். சாந்தி பயத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தபடி நின்றிருந்தாள். மணிமாறன் தனது கையிலிருந்த பூங்கொத்தை சாந்தியின் கரத்தில் கொடுத்து,

"வைம்மா..." என்றான்.

"யாருண்ணா இது?" என்று கேட்டபடி திரும்பியவள் அந்த நினைவிடத்தில் இருந்த புகைப்படத்தைக் கண்டதும் தீச்சுட்டார் போன்று திகைத்து நின்றாள்.

"ஸிமி..." அவளது உதடுகள் மெல்லமாய் முணுமுணுத்தது. அவளது விழிகள் கலங்கி போனது.

"ஸிமி இறந்து ஒரு வருசமாச்சு சாந்தி." வேதனையுடன் கூறினான் மணிமாறன்.

தனது கைகளில் இருந்த பூங்கொத்தை ஸ்மிதாவின் நினைவிடத்தில் வைத்த சாந்தியின் தேகமெல்லாம் நடுங்கியது. 'ஸிமிக்கு என்னவானது?' என்கிற கேள்வியே அவளது மனதினை போட்டுக் குடைந்தது. அப்போது மணிமாறன் தனது சட்டை பையில் இருந்து ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினான். அதைப் புரியாது வாங்கிய சாந்தி வேகமாய் அதைப் பிரித்துப் படித்தாள்.

"அன்புள்ள சாந்திக்கு, உன் தோழி ஸிமி எழுதி கொள்வது. நான் இன்னமும் உன் தோழி தானே?" ஸ்மிதாவின் வார்த்தைகளுக்குச் சாந்தியின் தலை தானாக ஆமென்று அசைந்தது.

"என்னை மன்னிச்சிரு சாந்தி. உனக்கு நேர்ந்த கொடுமைக்கு நான் தெரிந்தோ தெரியாமலோ காரணமாகி விட்டேன். உன்னை அந்தக் கோலத்தில் பார்த்ததும் என்னால் தாங்கி கொள்ளவே முடியலை. என் சாந்தியா இது? மனசு எல்லாம் வலிக்குது சாந்தி. எந்தப் பெண்ணுக்கும் நடக்கக் கூடாத கொடுமை உனக்கு நடந்தது. இதற்கு நானும் ஒரு காரணம்ன்னு தெரிஞ்சப்போ நான் உயிரோடு செத்துப் போயிட்டேன். மன்னிப்புங்கிற ஒரு வார்த்தையில் நான் உனக்கு என்ன நியாயம் செய்துவிட முடியும்? அதனால் தான் உயிரை விடத் துணிஞ்சேன். ஆம், இந்தக் கடிதம் உனக்குக் கிடைக்கும் போது நான் இறந்து பல நாட்களாகி இருக்கும். நீ நல்லபடியா உடம்பு தேறி வந்ததும் தான் இதைச் சொல்லணும்ன்னு நான் மணியண்ணா கிட்ட கேட்டு இருந்தேன். இதைப் படிக்கும் போது நீ மனதளவில், உடலளவில் தேறியிருப்ப என்று நம்புகிறேன். எதுக்காக உன்னை இப்படிச் செஞ்சாங்களோ? அதை உடைச்சி நீ சாதிச்சு காட்டணும். நீ பல வெற்றிகளைப் பெறணும். அதைப் பார்த்து நான் சந்தோசப்படணும். ஆம், நான் மணியண்ணா பொண்ணா பொறந்து உன் வெற்றியை பார்த்து சந்தோசப்படுவேன். மணியண்ணா கிட்ட நான் ஓட்ட பந்தயத்துக்கு ட்ரெயினிங் எடுத்துக்குவேன். ஆனா உனக்குப் போட்டியா இல்லை. நான் உன்னை எப்பவும் வெறுத்தது இல்லை. உன்னைப் போட்டியா நினைச்சது இல்லை. என்னை நம்புறியா சாந்தி.? ஐ லவ் யூ சோ மச் சாந்தி. ஐ மிஸ் யூ. பை, பை"

கடிதத்தைப் படித்து முடித்ததும் சாந்தி தரையில் மடங்கி அமர்ந்து, "ஸிமி..." என்று பெருங்குரலெடுத்து கதறியழ ஆரம்பித்தாள்.

சாந்தி பட்ட வேதனை, வலி அனைத்தையும் ஸ்மிதா தனது உயிரை கொடுத்து ஒன்றும் இல்லாததாக்கி சென்றிருந்தாள். ஸ்மிதாவிற்காகத் தான் சாதிக்க வேண்டும் என்கிற உத்வேகம் சாந்தியினுள் பிறந்தது.

"கட்டாயம் நான் ஜெயிப்பேன் ஸிமி... அதுவும் உனக்காக..." என்று நினைவிடத்தில் இருந்த ஸ்மிதாவின் புகைப்படத்தைப் பார்த்து உறுதியுடன் கூறினாள் சாந்தி. வசுமதி அவள் அருகில் அமர்ந்து ஆறுதலாய் அவளை அணைத்து கொண்டாள். மணிமாறனின் விழிகளில் விழிநீர் வைரங்களாய் பளபளத்து கோர்த்து நின்றது.

ஒரு வருடம் கழித்து...

ஆசிய விளையாட்டுப் பந்தயத்தில் பெண்களுக்கான நானூறு மீட்டர் ஓட்ட பந்தயம் ஆரம்பமாக இருந்தது. அதில் கலந்து கொள்ளவிருக்கும் பெண்களுடன் சாந்தியும் இருந்தாள். அங்குக் கூட்டத்தினருடன் கூட்டமாக மணிமாறன் நின்று கொண்டு திக்திக் மனதுடன் சாந்தியை இமைக்காது பார்த்திருந்தான். அவனது வேண்டுதல் எல்லாம் அவள் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்பதே.

போட்டி ஆரம்பமானதும் வில்லில் இருந்து புறப்படும் அம்பு போன்று புயல் போல் அனைத்து பெண்களும் ஓடினர்.

இங்குத் தமிழ்நாட்டில் சதாசிவம் தாத்தா வீட்டில் அவரது குடும்பத்தினருடன் பரசு, சொர்ணா இருவரும் அமர்ந்து கொண்டு தொலைக்காட்சி பெட்டியை ஆர்வத்துடன் பார்த்திருந்தனர். எல்லோரின் விழிகளும் தொலைக்காட்சி பெட்டியை பார்த்திருந்தது. நந்தனா தனது பதினைந்து மாத மகன் ஆதவனை மடியில் வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அவள் அருகில் புகழேந்தி அமர்ந்திருந்தான். வசுமதி தனது ஐந்து மாத கர்ப்பிணி வயிற்றைத் தள்ளியபடி அமர்ந்திருந்தாள்.

இறுதியில் சாந்தி தங்க பதக்கத்தை வென்றுவிட்டாள். மணிமாறன் சந்தோசத்துடன் அவளை நோக்கி ஓடி வந்தவன் அவளை அணைத்து வாழ்த்து கூறிவிட்டு

அவளது கைகளில் தேசிய கொடியை கொடுத்தான். அவள் அதைத் தனது இருகரங்களிலும் பிடித்துக் கொண்டு பெருமை பொங்க ஓடினாள். பரசுவும், சொர்ணாவும் இந்தக் காட்சியைப் பார்த்து கண்கலங்கி விட்டனர். தேவகி சொர்ணாவை ஆறுதலாய் அணைத்துக் கொண்டார்.

சாந்திக்கு தங்க பதக்கம் அணிவிக்கப்பட்ட உடன் இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதுவரை அடக்கப்பட்ட அழுகையுடன் நின்றிருந்த சாந்தி தேசிய கீதம் பாடி முடிந்ததும் தான் வாங்கிய தங்க பதக்கத்தை எடுத்து முத்தமிட்டபடி,

"ஸிமி, இது உனக்குத் தான்." என்று விழிகளில் கண்ணீர் துளிர்க்க வானத்தைப் பார்த்தாள்.

அதைக் கண்ட வசுமதி தனது வயிற்றைத் தடவி கொடுத்தபடி, "ஸிமி, சாந்தி உன்னைக் கூப்பிடறது உனக்குக் கேட்குதா?" என்று தனது மகவிடம் வினவினாள். அது ஆமென்பது போல் தனது கை, கால்களை அசைத்துப் பதில் கூறியது. வசுமதி அதை உணர்ந்தவளாய் விழிகள் கலங்க வயிற்றைப் பார்த்திருந்தாள்.

தங்களுக்கு ஸ்மிதா மகளாக வந்து பிறப்பாள் என்கிற நம்பிக்கையில் அவர்கள் இருவரும் வயிற்றில் இருக்கும் தங்களது மகவுக்கு ஸ்மிதா என்றே பெயரிட்டு அழைத்தார்கள்.

இரண்டு நாட்களில் நாடு திரும்பிய சாந்திக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவள் புன்னகை முகமாய் அனைத்து வாழ்த்துக்களையும் பெற்று கொண்டாள். அவளது குறிக்கோள் குறித்து ஊடகங்கள் கேட்ட போது,

"நான் புகழேந்தி அண்ணா மாதிரி ஐபிஎஸ் அதிகாரி ஆகணும். என்னை மாதிரி பாதிக்கப்பட்ட பெண்களுக்கு என்னால் முடிந்த நியாயம் செய்யணும். அவங்களுக்கு ஒரு உதாரணமா நான் வாழ்ந்து காட்டணும்."

சாந்தி வீரமாய் முழங்குவதைத் தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்த புகழேந்தி அவளைப் பார்த்து விறைப்பாக வணக்கம் வைத்தான், பெண்ணவளின் தைரியத்தைக் கண்டு வியந்தவனாய்!!!

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையினும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே"

***சுபம்***